கல்கி



KALKI
9.5.1971 40 காசு


பளிச்சிடும் மேன்மையைப்
பாருங்கள் கண்ணார
ஹிந்தாலியம்®
உங்கள் இல்லத்திற்கு வழங்கும்
நல்லொளி
வெள்ளியின் பளபளப்பு.
தோற்றத்திலே மதிப்பு.
எளிமையின் வனப்பு...
இதுதான் நீங்கள் பெறுவது,
ஹிந்தாலியம் பாத்திரங்களை
வாங்கும்போது.
ஹிந்தாலியம்
பாத்திரங்களிலே
சமைப்பதும் இன்பம்.
சாப்பிடுவதும்
இன்பம்.
ஹிந்துஸ்தான்
அலுமினியம்
கார்ப்பன் லிட்.
HINDALCO
வெள்ளி போல் தோற்றமளிக்கிறது
எஃகு போன்று நீடித்து ழைப்பது
ஹிந்தால்கோ விலை ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் விலையில் மூன்றில் ஒரு பாகம்தான்
Sobhagya HAC-370 TM




பச்சை நிற கோலினூஸ் குளோரோபில் வாய் துர்-நாற்றத்தை வெல்லுகிறது.

பச்சை நிற கோலினூஸ் குளோரோபில் பற்பசையில் குளோரோபில் அடங்கியுள்ளது. பசும் இலைகளி-லிருந்து ஆக்கம் பெறும் குளோரோபில் இயற்கையாகவே துர்நாற்றம் போக்கும் தன்மையுடையது.

பச்சை நிற கோலினூஸ் பற்பசையால் பல் துலக்கி, அருவருப்பான வாய்நாற்றம் போக்குங்கள். அதன் புதுமையான 'மின்டி' சுவையையும் வளமான நுரையையும் நீங்கள் ரசிப்பீர்-கள். இரவிலும் காலையிலும் பச்சைநிற கோலினூஸ் குளோரோபில் பற்-பசையால் பல் துலக்குங்கள்.

இந்த 'நட்பு மிக்க மூச்சு' சோதனையை நீங்களே செய்து பாருங்கள்.

உங்கள் வாய்க்கு அருகில் உள்ளங்கையைப் பிடியுங்-கள். அதன் மீது நீண்ட மூச்சு விடுங்கள். விரைவாக மூச்சை உள்ளுக்கு இழுங்-கள். பிறகு பச்சை நிற கோலினூஸ் குளோரோபில் பற்பசையால் பல் துலக்குங்கள். சோதனையை மீண்டும் செய்து பாருங்கள். இப்போது உங்கள் மூச்சு தூய்மையுடன் இனிமையாக விளங்குவதைக் காண்பீர்கள்.



KC-8

பச்சை நிற **கோலினூஸ்** குளோரோபில்

Regd. User of TM: Geoffrey Manners & Co., Ltd.

கல்கி

பொருளடக்கம்

விரோதிகிருது, சித்திரை 26 -- மே 9, 1971

மது அரக்கனுக்கு வரவேற்பா?	தலையங்கம்	5
ராஜாஜியின் கருத்துக்கள்	...	6
ஸ்வாமி	ஜகத்குரு அருளுரை	8
மருடபதி	அமரர் கல்கி	9
விமான ஓட்டிக்கு வேலையில்லை!	...	13
ரகுபதி ராகவ	காந்திஜி — ராஜாஜி	15
ராமாயணம்	ராஜாஜி	18
எண்கள் குவிந்தன; எண்ணங்கள் மலைத்தன!	குண்டுமணி	21
சிங்கக் கழுகு	பீட்டர் ஓ டான்னல்	22
பொன்னியின் செல்வன்	அமரர் கல்கி	26
சுழிக் காற்று	கௌசிகன்	38
காதலுக்கு ஒரு தலை முழுக்கு	ஜோதிர்லதா கிரிஜா	46
காசுக்காக அல்ல	நெய்வேலித் திரிசங்கு	59
எண்ணத்திலே இருந்தவன்	காடவன்	67

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சந்தா விவரம்:	ஒருவருடம்	ஆறுமாதம்
இந்தியா	ரூ. 20-00	ரூ. 10-00
இலங்கை (இலங்கைநாணயம்)	ரூ. 21-00	ரூ. 10-50
இதர நாடுகள்	ரூ. 40-00	ரூ. 20-00

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்



மலர் 30
இதழ் 41

மது அரக்கனுக்கு வரவேற்பா?

தமிழகத்தின் வரலாற்றில் ஓர் இருள் சூழ்ந்த அத்தியாயத்துக்கு தி. மு. க. அரசு அடிகோலப் போகிறது!


ஏழை மக்களின் குடும்பங்களைப் பொருளாதார ரீதியிலும், தார்மிக நெறிகளிலும் படுகுழிக்குத் தள்ளிச் செல்வது மதுப் பழக்கம். இந்தப் பொல்லா அரக்கனை ஒழித்தாலே ஏழை மக்களின் குடும்பங்களில் சாந்தியும், சந்தோஷமும், சுகாதாரமும், கௌரவமும், தர்ம வாழ்வும் செழிக்கும் என்று கருதினார் தேச பிதா காந்தியடிகள். மதுவிலக்குக்கு மிகுந்த முக்கியத்துவம் தந்தார். இந்தத் திருத்தொண்டில் அடிகளுக்கு வலது கரமாக விளங்கினார் ராஜாஜி. நாற்பதாண்டுகளுக்குமுன் திருச்செங்கோட்டில் காந்தி ஆசிரமம் அமைத்துச் சமூகத் திருப்பணி புரிந்து வந்த ராஜாஜி மதுவிலக்குக்கு எழுத்தாலும் பேச்சாலும் புரிந்த சேவை ஈடு இணையற்றது. பிற்பாடு அவர் மந்திரி சபை அமைத்த போது பரீட்சார்த்தமாகச் சேலம் மாவட்டத்தில் மது விலக்கை அமுல் செய்தார். அது மக்களுக்கு எப்படிப்பட்ட பெரு நலனை அளித்தது என்று தெள்ளத் தெளியத் தெரிந்தது. தேசம் சுதந்திரம் அடைந்த பிற்பாடு, காந்தியத் திட்டங்களில் எப்போதும் முன்னணி வகித்த தமிழ்நாடு மதுவிலக்கை ராஜ்யம் முழுவதிலும் அமுலாக்கி மாபெரும் புகழ் கொண்டது.

இப்போது இந்தப் புனித திட்டத்தை, ஆரோக்கியத்துக்கும் அற வாழ்வுக்கும் குடும்ப ஒப்புரவுக்கும் அடிப்படையான அரிய திட்டத்தை தி. மு. க. அரசு அழிக்க முற்பட்டிருக்கிறது. இது தமிழ்த் திருநாட்டுக்கு ஏற்பட்டுள்ள மாபெரும் துர்ப்பாக்கியம். மதுவிலக்கு என்ற திவ்வியப் பணியின் தலைமைச் சிற்பியான ராஜாஜி உளம் நொந்து சொல்கிறார்:

''கள்ளு, சாராயக் கடைகளைத் திறக்க வேண்டும் என்று தமிழ் நாட்டு அரசாங்கத்தைத் தி. மு. க. செயற் குழு ஏகமனதாகக் கேட்டுக் கொண்டிருக்கிறது. இதன்படி மதுவிலக்கு ரத்தானால், ஏலத்தில் அதிகப் பணம் தரும் ஏஜெண்டுகளின் மூலம் அரசாங்கம் கள்ளையும் சாராயத்தையும் விற்பனை செய்யும். ஏலத்தில் அதிகப் பணம் தர முன் வருபவர் மது விற்பதற்கு லைசென்ஸ் பெறுவார். இருபதாண்டுகளுக்குப் பிறகு மீண்டும் 'கள்ளுக்கடை' 'சாராயக் கடை' என்ற போர்டுகள் தமிழ்நாடெங்கும் தொங்க ஆரம்பிக்கும். நீண்ட குழல் விளக்குகள் போட்டு அந்தக் கடைகள் பிரகாசப் படுத்தப்பெறும். இந்தக் காட்சியை மீண்டும் தமிழ் நாடெங்கிலும் காண்போமாயின் அது மிகவும் வேதனைக்குரியது.

'' பல்லாயிரக் கணக்கான பெண் மக்கள் மதுவிலக்கு ரத்தாவது பற்றி ஆறாத் துயரம் அடைவார்கள். அவர்களோடு நானும் துக்கப்படுகிறேன். தற்போது கள்ளச் சாராயம் காய்ச்சி விற்கப்படுவது வாஸ்தவமே. ஆயினும் இந்தப் போக்கு அதிகமாகி விட்டாலும் கூட, இதனால் எல்லா ஏழை மக்களும் பாதிக்கப்பட மாட்டார்கள். கள்ளச் சாராயம் காய்ச்சுவதைக் காரணம் காட்டி, மதுவிலக்கை ரத்து செய்து, ராஜ்யம் முழுவதிலும் உள்ள எல்லா மக்களுக்கும் மது அருந்தும் கொடிய சபலத்தை உண்டாக்குவது சிறிதும் நியாயமாகாது.

''வருமானம் ஒன்றைப் பற்றி மட்டும் அரசாங்கம் கவனம் செலுத்துவது தகாது. 'பொருளாதார ஏற்றத் தாழ்வு' என்பதை எண்ணி சோஷலிஸ்ட்களும் மற்ற 'இஸ்ட்'களும் வருந்துவதைப் போலக் குடும்பப் பெண்மணிகள் கவலை கொள்ளவில்லை. இத்தனை ஆண்டுகள் மூடியிருந்த கள்ளுக் கடைகள் இப்போது திறக்கப்போவதை எண்ணியே அவர்கள் கவலை கொள்



வார்கள். அதன் விளைவாக வறுமையும் ஒழுங்கீனமும் வளரப்போவதைக் கண்டு இன்று குடும்பங்களில் தர்மங்களை ரக்ஷித்து வரும் கோடானுகோடி பெண் மணிகள் மனம் வருந்தப் போகிறார்கள். கள்ளுக் கடைகளைத் திறப்பதால் வறுமை, ஒழுங்கீனம் ஆகியவை வளருவதோடு, 'சோஷலிஸ்டு'களின் லட்சியத்துக்கு மாறாகப் பொருளாதார ஏற்றத் தாழ்வும் அதிகமாகும்.

"'கள்ளுக் கடைகளைத் திறந்தால் என்ன? அதனால் எல்லோரையும் குடிக்குமாறு நிர்ப்பந்தம் செய்வதாகப் பொருள் இல்லை. மக்கள் குடிப்பதும் குடிக்காததும் அவர்களுடைய சுதந்திர விஷயம்' என்று முதல் மந்திரி வாதம் செய்யலாம். இது ஒரு பொய்யான வாதமாகும். போதைப் பண்டங்களின் கவர்ச்சி எத்தனை கொடியது என்று நாம் அறிவோம். உழைக்கிற மக்களின் கண் எதிரில் கள்ளுக் கடைகளைத் திறந்து வைப்பதே, அவர்களைக் குடிப்பதற்குத் தூண்டி நிர்ப்பந்தம் செய்வது போலத்தான்."

ராஜாஜியின் கருத்துக்கள்

பாகிஸ்தானுடன் போர் தொடரும் நோக்கம் இந்தியாவுக்கு இல்லை; இந்தியாவுடன் போர் புரியும் நோக்கம் பாகிஸ்தானுக்கு இல்லை. எந்த ஒரு தரப்பும் மற்றதைப் போருக்குத் தூண்டிவிட உத்தேசிக்கவில்லை. ஆயினும் இப்போது நிலைமை எப்படியுள்ளதெனில் எந்த நிமிஷமும் இவ்விரு நாடுகளிடை தானாகவே போர் தொடங்கி விடலாம். அப்படி ஏற்பட்டுவிட்டதெனில் விபரீதப் போக்கை நிறுத்துவதற்கு இயலாமற் போகும்.

பிரதமரவர்கள் தமது பிரிட்டன் பயணத்தை ரத்து செய்து விட்டார் என்பது பற்றி மகிழ்ச்சி அடைகிறேன். ஆத்திரவசப்பட்ட நடவடிக்கை ஏதும் நிகழாமல் தடுக்க அவர் இந்தியாவிலேயே இருப்பது உதவும்.

✽

பெர்மிட் — லைசென்ஸ் வழங்குவது என்ற துர்நாற்ற முறையில் தங்களுக்கும் பங்கு வேண்டும் என்று ராஜ்ய அரசாங்கங்கள் வற்

புறுத்துகின்றன. இப்போது இந்திரா சர்க்காரின் தங்கச் சுரங்கமாக இருப்பது இந்தப் பெர்மிட் — லைசென்ஸ் முறையே. எனவே 'பெர்மிட் — லைசென்ஸ் வழங்குவதில் இந்திய சர்க்கார் தனது ஆதிக்கத்தை விடவேண்டும்; இந்தப் பொறுப்பை ஒரு சுதந்திரக் குழுவிடம் ஒப்படைக்க வேண்டும்' என்று நான் கூறுவது இந்திரா சர்க்காருக்குச் சௌகரியமாயிராது. அது பெர்மிட் — லைசென்ஸ் ஆதிக்கத்தின் பிடியை விடாது. தன் பிடியை விடாவிட்டாலும் போகட்டும்; ராஜ்ய சர்க்கார்களுக்கும் இதில் உரிமை தராமல் அது உறுதியாக எதிர்த்து நிற்பது நலம்.

❁

முன்பு உள்துறை காரியதரிசியாக இருந்த ஸ்ரீ எல். பி. ஸிங்கைத் தமிழக கவர்னராக நியமிப்பதற்குத் தமிழ்நாட்டு அரசாங்கம் ஆதரவு தராதது வருந்தத் தக்கது. அவர் தமிழக அரசியலுக்கு நல்ல முறையில் வழி காட்டக் கூடிய திறமைசாலி. 'அரசியலில் சம்பந்தம் உடையவரே தமிழகத்துக்கு வேண்டும்; முன்னாள் அதிகாரியல்ல' என்று தமிழ் நாட்டு சர்க்கார் சொல்கிற காரணம் சரியான தல்ல. ஸ்ரீ எல். பி. ஸிங்கின் நியமனத்தால் தமிழ் நாட்டின் அந்தஸ்து சற்றும் குறைந்திராது. தமிழக முதன் மந்திரியின் விருப்பப்படி இந்த நியமன உத்தேசத்தைப் பிரதமர் கைவிட்டது பரிதாபம்.

❁

கிண்டி ராஜபவனத்தி லிருந்து கவர்னர் வெளியேறி வேறு மாளிகையில் குடிபுகவேண்டும் என்பது தமிழக சர்க்காரின் முடிவு. இதை மத்திய சர்க்கார் தடுக்கக் கூடாது என்பதற்குப் பல காரணங்களைச் சொல்லி யிருக்கிறார் முதன் மந்திரி.

கவர்னர் மாளிகையாக இருப்பதோடு, கிண்டி ராஜபவனத்தில் ராஷ்டிரபதி, பிரதமர் உட்படப் பல பிரமுகர்கள் தங்குவது வழக்கம். வெளிநாட்டுப் பிரமுகர்களும் அங்கு தங்குவது வழக்கம். இதற்கெல்லாம் வசதியாக ஓர் அரசாங்க விருந்தினர் மாளிகையாகவும், உல்லாசப் பயண மாளிகையாகவும் ராஜபவனத்தை மாற்றி அமைக்கப் போவதாக முதன் மந்திரி கூறியுள்ளார். இந்த ஜாகை மாற்றத்துக்கு நிதி நிலைமை காரணம் அல்ல என்றும், கவர்னரின் புது மாளிகையிலும் அவரது அந்தஸ்துக்கு உரிய பரிவாரங்கள் தொடர்ந்து இருக்க வசதி செய்யப் படும் என்றும் அவர் சொல்லியிருக்கிறார்.

சென்னை கவர்னர் மாளிகையின் விசாலமான பரப்பைப் பற்றிச் சொல்லும் முதன் மந்திரி, பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களில் உள்ள ராஜ பவனங்களைக் கவனிக்கக் காணோம். சென்னை ராஜபவன நிலத்தில் கணிசமான பகுதி இந்தியத் தொழில் நுணுக்கக் கழகம், காந்தி மண்டபம், புற்றுநோய் நிலையம் ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டிருப்பதை முதல்வர் குறிப்பிடக் காணோம். பிரிட்டிஷ் ராணியும், ஸ்ரீ நிக்ஸனும், ஸ்ரீ குருஷ்சேவ், டிட்டோ ஆகியோரும் இந்த ராஜ பவனத்தில்தான் விருந்தினராகத் தங்கியிருந்தனர். முதல்வர் இதையெல்லாம் குறிப்பிடக் காணோம்.

இந்த ஜாகை மாற்றம் தேவையல்ல என்பதற்குக் குறிப்பாக ஒரு காரணமே போதும்: அதாவது ஐ. ஜி. பங்களாவை கவர்னர் ஜாகையாக மாற்றி யமைப்பதற்கு ஏராளமான ரூபாய் செலவு செய்ய வேண்டி யிருக்கும். ஒரு லாபமும் இல்லாமல் இப்படி அரிய நிதி வசதிகளை வீணாக்க வேண்டியதே இல்லை.

பொருளாதாரத்தை உத்தேசித்து இந்த ஜாகை மாற்றம் இல்லை எனில், 'சோஷலிஸ சமத்துவத்துக்கு' அடையாளமாகச் செய்யப்படுகிறது என்றே அர்த்தம். கவர்னர் சிறிய வீட்டுக்குப் போனார் என்று 'சமத்துவம்' காட்டுவதற்காக எத்தனையோ செலவு செய்யப் போகிறார்கள். புரளிப் பேச்சுப் புரளி யுள்ள இந்த உலகத்தில் மிக மிகப் புரளியுள்ள புரளி என்னவென்றால், சோஷலிஸ சமத்துவம்தான். இதுபோல் ஏழை மக்களின் மீது செய்யப்படும் பெரிய மோசடி வேறில்லை.

ஸ்வாமி

— ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகள்

ஒரு வீட்டைப் பார்த்தால் அதைக் கட்டியவன் ஒருவன் இருக்க வேண்டும் என்று ஊகிக்கிறோம். இன்ன என்சினீயர் கட்டினார் என அறிகிறோம். ஒரு ஒழுங்குக்குக் கட்டுப்பட்டு உண்டாகியிருக்கிற எதைப் பார்த்தாலும் அதைச் செய்தவன் ஒருவன் இருக்க வேண்டும் என்று ஊகிக்கிறோம். அப்படியானால் எத்தனையோ ஒழுங்குகளுக்குக் கட்டுப்பட்டிருக்கும் இந்தப் பிரபஞ்சத்தைச் செய்தவனாக ஒருவன் இருக்கத்தான் வேண்டும்.

நாம் உட்கார்ந்திருக்கும் இந்தக் கொட்டகையை யார் போட்டார்கள் என்றால் சொல்லத் தெரிகிறது. இந்த வாழை மரத்தை யார் செய்தார்கள்? கண்ணில் காட்டும்படியாக அதைச் செய்தவனைச் சொல்லத் தெரியவில்லை. ஆனாலும் ஒருவன் அதைச் செய்திருக்கிறான். அதனால்தான் இப்படி அழகாகப் பட்டை பட்டையாகக் கணக்குப் பிசகாமல் வாழை உண்டாயிருக்கிறது. எந்த ஆயுதத்தை வைத்துக் கொண்டு அந்த ஒருவன் இத்தனை அழகாகப் பட்டைகளை அடுக்கினான் என்றால் தெரியவில்லை. இப்படியே அந்த மலையை, இதோ மேலே உள்ள நட்சத்திரங்களை, சந்திரனைச் செய்தவனை நம்மால் காட்ட முடியவில்லை. 'இவையெல்லாம் எத்தனையோ காலம் முன்னால் உண்டானவை. செய்தவனை எப்படிக் காட்டுவது' எனலாம். சரி, இந்த ரோஜாப் புஷ்பம் இருக்கிறதே இது அந்த வாழையை விடச் சமீபத்தில் உண்டானதுதான். மூத்தாநாள் சிறு மொட்டாக இருந்தது. இப்போது அழகிய பூவாகியிருக்கிறது. இதில் நூற்றுக் கணக்கான இதழ்கள். ஒவ்வொன்றிலும் நுண்ணிய நரம்புகள், வாசனை எல்லாம் வந்திருக்கின்றன. நம் கண் முன்னேயே இது மலர்ந்தது. ஆனாலும் மலர்த்தினவனை நமக்குத் தெரியவில்லை. மனிதன் எல்லாம் தெரிந்த கெட்டிக்காரன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் ஒரு மிருகம் இந்தச் சென்னைப் பட்டணத்தைச் சுற்றி வந்தால் எதுவுமே தனக்குத் தெரியவில்லை என்று எப்படி ஆச்சரியப்பட்டுப் பார்க்குமோ, அப்படித்தான் இந்தப் பிரபஞ்சத்தில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம். மனிதனைவிடக் கெட்டிக்காரனான ஒருவன் அவனை இப்படி வைத்திருக்கிறான்.

அத்தனை ரோஜாப் பூக்களும் ஒரே தர்மத்தில் மலர்வதால், அத்தனை மலைகளும் ஒரே தர்மத்தில் நிலைத்து இருப்பதால், அத்தனை நட்சத்திரங்களும் ஒரே தர்மத்தில் சுற்றுவதால், இந்தச் சகலத்தையும் செய்தவன் ஒரே என்சினீயர் என்று தெரிகிறது. ஒரே ரீதியில், காரண காரிய விளைவில், பிரபஞ்சம் முழுதும் கட்டுப்பட்டிருப்பதால் இதைச் செய்தது ஒரே அறிவு எனத் தெரிகிறது.

கெட்டிக்காரன் என்று தன்னை நினைத்துக்கொண்டிருக்கும் மனிதன் அந்த மகா கெட்டிக்காரனைத் தெரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் அவன் மகா கெட்டிக்காரன் மட்டுமல்ல; மகா நல்லவனும்கூட. இத்தனையைத் திட்டமிட்டுப் படைத்த பேரறிவு என்பதோடு இத்தனையையும் ரட்சிக்கும் பெரும் கருணையும் அவன். நமது கெட்டிக்காரத்தனம் அவன் தந்ததே என்று தெரிந்து கொண்டு அவனிடம் பிரார்த்தித்துக் கொண்டால் நமக்கு அவன் நல்லது செய்வான். அவன்தான் ஸ்வாமி, ஸ்வாமி என்பவன்.

இந்த நமது கெட்டிக்காரத்தனமே அவனுக்கு ஓர் அடையாளம்தான். திருடனைக் கண்டுபிடிக்க மண்ணில் பதிந்த அவனது காலடி இருக்கிறது போல், உள்ளம் கவர் கள்வனான ஸ்வாமியின் காலடி பிரபஞ்சத்தின் எல்லா இடத்திலும் பதிந்து கிடக்கிறது. நம் கெட்டிக்காரத்தனமும் அவனது காலடி அடையாளம்தான். இந்தக் கெட்டிக்காரத்தனத்துக்கு எல்லாம் ஓர் ஆதாரம் இருக்க வேண்டும் என்று தெரிகிறதே!

சிருஷ்டிகர்த்தனாக ஒரு ஸ்வாமி இருப்பதற்கு நாமே அடையாளம். நம் ஒவ்வொருவர் உள்ளங் கையிலும் அவன் நுணுக நுணுசாகப் போட்டுள்ள ரேகை மாதிரி நம்மால் போட முடியுமா? இந்தப் பட்டணம் முழுவதிலும் மனிதனின் கெட்டிக்காரத்தனத்தால் செய்துள்ள காரியங்களைவிட அதிகமாக ஒரு சிறு இலையில் ரேகை போட்டு விசித்திரம் செய்திருக்கிறான் அவன். இதெல்லாம் அந்த மகா திருடனின் ரேகை அடையாளம். திருடன் பதுங்கியிருப்பது போல் இவனும் பதுங்கியிருப்பவன்தான். அவன் குகைக்குள் ஒளிந்து கொண்டிருக்கிறான் என்றே வேதம் திரும்பத் திரும்பச் சொல்லும்.

நம் இதயம்தான் அந்தக் குகை. நமக்குள்ளேயே ஒளிந்து கொண்டு நமக்கு வெளியே இத்தனை அற்புதங்களைச் செய்து, நம்மை ஆச்சரியப்படுத்தித் தன்னைத் தேட வைக்கிறான் ஸ்வாமி.



மகுடபதி

அமரர் கல்கி



ஐந்தாம் அத்தியாயம்

"நான் அனாதை"

பெரியண்ணன் தன்னுடைய கதையைச் சொல்லி முடித்துக் கண்ணீர் பொழிந்தபோது, சற்று நேரம் அந்த மேல் மாடியில் நிசப்தம் குடிகொண்டிருந்தது.

மகுடபதிதான் முதலில் பேசினான்.

''பாட்டா! நான் செய்தது ஒன்றும் பெரிய காரியமில்லை. நீ சபதத்தை நிறைவேற்றிக் குடியை விட்டிருக்கிறாயே. அதுதான் பெரிய காரியம்'' என்றான்.

அப்போது கிழவன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, ''தம்பி, தம்பி! 'பெரிய காரியம்' என்று சொல்லாதே. 'பெரிய காரியம்' என்றால் நம் ஊரிலே 'எழவு'க்குச் சொல்வார்கள். பிள்ளைகள் பட்டணத்துக்குப் படிக்கப்போய் நம்ம பேச்சைக்கூட மறந்துவிடுகிறார்கள்'' என்றான்.

''எனக்குப் பேச்சுச் சொல்லிக் கொடுக்கிறது அப்புறம் இருக்கட்டும். முதலில் உங்கள் பேச்சைச் சொல்லுங்கள். ஏதோ அபாயம், தலைபோகிற விஷயம் என்று சொன்னீர்கள். வேறு எதெதையோ பேசிக் கொண்டிருக்கிறீரே?'' என்றான் மகுடபதி.

கிழவன் செந்திருவின் முகத்தை நோக்கி, ''நீ என்ன சொல்கிறாய் தாயே! இந்தத் தம்பியிடம் எனக்குப் பரிபூரண நம்பிக்கை. உனக்கு இஷ்டமிருந்தால் இவரிடம் எல்லாவற்றையும் சொல்லி யோசனை கேட்கலாம்'' என்றான்.

அப்போது செந்திரு, ''உன் இஷ்டம் பாட்டா! நாமோ இக்கட்டில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஒத்தாசை வேண்டியிருக்கிறது. ஆனால் இந்தக் காந்திக் குல்லாய்க்காரர்கள் ஒத்தாசை செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு அவ்வளவாக இல்லை. ஒரு சமயம், இவர் மாதிரியேதான் ஒரு காந்திக் குல்லாய்க்காரர் என்னிடம் ரொம்ப ரொம்பக் கரிசனமாகப் பேசிக்கொண்டிருந்தார். அவர் ஜெயிலிலே இருந்ததாகச் சொன்னார். நானும் மூன்று வருஷங்களாக ஜெயிலிலேதான் இருக்கிறேன் என்று அவரிடம் சொன்னேன். சீக்கிரத்தில் வந்து விடுதலை செய்கிறதாகச் சொல்லி விட்டுப் போனார். ஒன்றரை வருஷம் ஆச்சு; அப்புறம் எட்டியே பார்க்கவில்லை. அதனால்தான் காந்திக் குல்லாய்க்காரர்களிடம் எனக்குச் சந்தேகமாக இருக்கிறது'' என்று செந்திரு

சொல்லி வந்தபோது, மகுடபதியின் உடம்பில் மயிர்க்கூச்சல் உண்டாயிற்று. செந்திரு கடைசி வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டே தன்னைக் கடைக் கண்ணால் நோக்கியதை அவன் பார்த்தான். அந்த அழகிய கரிய கண்களின் முனைகளில் நீர்த் துளிகள் துளித்து நிற்பதையும் கண்டான். தான் ஓடைக் கரையில் பார்த்த பெண்தான் இவள் என்பதையும், தன்னை அவளும் அறிந்து கொண்டாள் என்பதையும் அதற்குப் பிறகு தான் அவளைப் பார்க்க வரவில்லை என்ற கோபத்தினாலும் துக்கத்தினாலும்தான் அப்படிப் பேசுகிறாள் என்பதையும் ஒரு நொடியில் அறிந்து கொண்டான்.

தழுதழுத்த குரலில், ''நான் அப்போது சொன்னது என்ன? தேசம் விடுதலையான பிறகு உன்னை வந்து விடுதலை செய்வதாகத்தானே சொன்னேன்?'' என்றான்.

''தேசம் இன்னும் விடுதலையாகவில்லையா?'' என்றாள் செந்திரு.

மகுடபதிக்குச் சிரிப்பு வந்தது. அவன் கம்பராமாயணம் கேட்டிருக்கிறான். சீதை அயோத்தி நகரின் கோட்டை வாசலைத் தாண்டியதும், ''காடு எங்கே?'' என்று ராமனிடம் கேட்ட விஷயம் அவனுக்கு நினைவு வந்தது.

''தேச விடுதலை என்பது, அவ்வளவு சீக்கிரம் நடக்கக் கூடியதல்ல. போன வருஷம் தேச விடுதலை நெருங்கியிருந்ததாகத் தோன்றியது. இந்த வருஷம் அது வெகு தூரம் போய்விட்டது'' என்றான்.

''அதனால்தான் அவ்வளவு தைரியமாக 'வந்து விடுதலை செய்கிறேன்' என்று சொன்னீர்கள் போலிருக்கிறது. 'நாளைக்குக் கடன்' என்று பட்டிக்காட்டுக் கடைகளில் எழுதி வைக்கிறார்களே, அந்த மாதிரி!'' என்று செந்திரு ஆத்திரத்துடன் பேசினாள்.

இந்தச் சம்பாஷணையின் விஷயம் பெரியண்ணனுக்குப் புரியவில்லை. இரண்டு பேர் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தான்.

''தம்பி! இதென்ன, குழந்தையை உனக்கு முன்னாலேயே தெரியுமா?'' என்றான்.


செந்திரு, ''ஆமாம், பாட்டா! ஒரு நாள் நான் ஓடைக் கரையில் படுத்துக் கொண்டு செத்துப் போவதற்கு என்ன வழி என்று யோசித்துக் கொண்டிருந்தேன். அப்போது இந்த மனுஷர் வந்து 'நான் உன்னை விடுதலை செய்கிறேன்' என்று சொல்லி விட்டுப் போனார். அப்புறம் திரும்பியே பார்க்கவில்லை'' என்று குரோதம் பொங்கிய குரலில் கூறினாள்.

அப்போது மகுடபதி, ''என் பேரில் தப்பு ஒன்றும் இல்லை. நீ சரியாக விவரம் ஒன்றும் சொல்லாமல் ஓடிப் போய்விட்டாய். உன் பெயரைக் கூடச் சொல்லவில்லை. இருந்தாலும் நான்



உன்னை மறந்துவிடவில்லை. ஓயாமல் உன் ஞாபகமாகவே இருந்தேன். நீ சுட்டிக் காட்டிய வீட்டைப் பற்றித் தகவல் விசாரித்தேன். அது சிங்கமேடு தங்கசாமிக் கவுண்டர் வீடு என்று தெரிந்தது. அவருடைய வீட்டில் அவருடைய சொந்தப் பெண்கள் மூன்று பேரும் அவருடைய தமையனார் பெண்ணும் இருப்பதாகவும் அவரே சமீபத்தில் இரண்டாந் தாரம் கல்யாணம் செய்து கொண்டிருப்பதாகவும் தெரிந்தது. இத்தனை பேரில் நீ யார் என்று நான் எப்படிக் கண்டுபிடிப்பது? அப்புறம் பல தடவை அந்த ஓடைக் கரைப் பக்கம் நான் வந்தேன். எவ்வளவோ நேரம் காத்திருந்தேன். உன்னைப் பார்க்க முடியவில்லை. நீ என்னை மறந்து விட்டாய் என்றும், அன்று என்னிடம் சொன்னதெல்லாம் விளையாட்டுப் பேச்சு என்றும் எண்ணிக் கொண்டேன்'' என்றான்.

செந்திரு, ''நான் உங்களை மறக்கவில்லை. நான் மறந்தாலும் உங்களால் எனக்கு ஏற்பட்ட அடையாளம் இருக்கிறது. அது எப்போதும் ஞாபகப் படுத்திக் கொண்டிருக்கும்'' என்று சொல்லி, தன் வலதுகாலை மறைத்துக் கொண்டிருந்த சேலையைச் சிறிது நகர்த்தினாள். முழங்காலுக்குக் கீழே ஒரு நீளமான நெருப்புச் சுட்ட வடு காணப்பட்டது.



''ஐயோ!'' என்றான் மருதபதி.

''நான் உங்களுடன் ஓடைக் கரையில் பேசிக் கொண்டிருந்தது எப்படியோ சித்தப்பாவுக்குத் தெரிந்து போய் விட்டது..''

''நீ அவருடைய தமையனார் பெண் தானா?''

''ஆமாம்.''

''உனக்கு அப்பா இல்லையா?''



விமான ஓட்டிக்கு வேலையில்லை!

வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறிக்கவில்லை தலைப்பு; வேலை நிறுத்தத்தையும் சுட்டிக் காட்டவில்லை.

ஏர் இந்தியாவின் புதிய ஜம்போ விமானத்தை "ஓட்டு"பவர், கையைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தால் போதும்; விமானம் தானாகவே இயங்கும் என்பதைத் தான் குறிப்பிடுகிறோம். அந்த அளவுக்கு எலெக்ட்ரானிக் சாதனங்களும் தானியங்கு கருவிகளும் உள்ளன இவ் விமானத்தில். பழங் காலத்தில் — அந்தப் பைலட் நிஜமாகவே விமானத்தைச் செலுத்திய நாட்களில் — அவர் நிகழ்த்திய வீர சாகசச் செயல்களைப் பிரயாணிகளுடன் ஒலிபெருக்கி மூலம் பகிர்ந்து கொள்வதுடன் அவர் திருப்தியடைய வேண்டியதுதான்!

நாற்பது ஆண்டுகளுக்கு முன் ஜே. ஆர். டி. டாட்டா ஏர் இந்தியா நிறுவனத்தை ஆரம்பித்துத் தபால்களை எடுத்துக் கொண்டு கராச்சியிலிருந்து பம்பாய்க்கு வந்து சேர்ந்தார் — ஒரு டப்பா விமானத்தில். அவர் தாமே செலுத்திக்கொண்டு வந்த இந்த டப்பா விமானமே அந்த நாளில் பேரதிசயம்தான்!

இடையில் ஆமதாபாத்தில் விமானம் இறங்கியபோது அதற்கு எரிபொருள் நிரப்ப வேண்டியிருந்தது. பர்மாஷெல் நிறுவனத்தினர் இரண்டு காலன் டின்களாக ஒரு மாட்டு வண்டியில் அடுக்கி அனுப்பி வைத்தனர்.

ஏர் இந்தியா பிரயாணிகளையும் ஏற்றிச் செல்லத் தொடங்கியபோது தபால்களைத் தம் மடிமீது வைத்துக் கொண்டு விமானத்தைச் செலுத்த வேண்டிய இக்கட்டான நிலையில் இருந்தார் டாட்டா. அந்நாளைய இவரது பைலட் டைரி ரொம்ப சுவாரசியமானது. "நிலவொளியில் பெல்லாரியில் விமானத்தை இறக்கினேன்" என்று ஒரு நாள் எழுதினார். இன்னொரு நாள், "வயிற்றைக் குமட்டியதால் வயல்வெளியில் விமானத்தை இறக்கிவிட்டேன்" என்று எழுதினார்.

ஒரு சமயம் விமானத்தில் கோழிகளை ஏற்றி வர, அவற்றில் ஒன்று பிரயாணியின் தொப்பியில் முட்டை இட்டுவிட்டது! அப்பயணி அதைக் கவனியாமல் பாவம், தொப்பியைத் தலையில் வைத்து அழுத்திவிட்டார்!


1932ல் ஏர் இந்தியா இரண்டு புஸ்மாத் விமானங்களை வாங்கியது. அவையும் புதிதல்ல; செகண்ட் ஹாண்ட்தாம்! ஒவ்வொன்றின் விலையும் ரூ. 20,000. இன்று ஏர் இந்தியா "அசோக சக்கரவர்த்தி" என்று நாமகரணம் செய்து வாங்கியுள்ள ஜம்போ ஜெட்டின் விலை முன்னதைப் போல் கிட்டத்தட்ட பத்தாயிரம் மடங்கு அதிகம்! இத்தொகையைக் கொண்டு 1200 அறைகள் உள்ள பெரிய நவீன ஹோட்டலை விலைக்கு வாங்கலாம். அல்லது 20,000 டன் கப்பலை வாங்கலாம்! * அந்நாளைய புஸ்மாத்தின் வேகம் மணிக்கு நூறு மைல்; இன்றைய போயிங் 747 விமானத்தின் வேகம் மணிக்கு அறுநூறு மைல். புஸ்மாத் நூறு குதிரை சக்தி கொண்டது; ஜம்போ 80,000 குதிரை சக்தியை உள்ளடக்கிய பறக்கும் கோட்டை.

"அசோக சக்கரவர்த்தி" 340 பயணிகளை ஏற்றிச் செல்லும். இவர்களை உபசரிக்க ஆண்களும் பெண்களுமாய் மொத்தம் பதினைந்து பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

■ புஸ்மாத்துக்குப் பிறகு ஏர் இந்தியா, டக்கோட்டாக்களையும், லாக்ஹீட் கான்ஸ்டெலேஷன்களையும், பின்னர் ஸூபர் கான்ஸ்டெலேஷன்களையும் வாங்கியது. ஜெட் யுகத்தில் அடியெடுத்து வைத்து போயிங் 707 விமானங்களைப் பெற்றது. இன்று இந்த போயிங் 747 — ஜம்போ வந்திருக்கிறது.




படங்கள்: 1. வானளாவ எழும்பும் "அசோக சக்கரவர்த்தி".
2. அசோக சக்கரவர்த்தி விமானத்தின் உட்புறச் சுவர்களில் கண்ணனின் லீலைகளைச் சித்திரிக்கும் ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன.



போது, இந்தப் பிள்ளை வந்து எனக்குப் புத்தி போதிக்க ஆரம்பித்தார். என் இடுப்பில் செருகியிருந்த கத்தியை எடுத்து இவரைக் குத்தி விட்டேன். இவர் கைச் சட்டையை விலக்கினால், முழங் கையண்டை காயம் இன்னும் தெரியும்....''

இவ்விதம் சொல்லிப் பெரியண்ணன் மருடபதியின் கையைப் பிடித்து, சட்டையை மேலே விலக்கினான். முழங் கைக்குக் கீழே ஒரு பெரிய காயத்தின் வடு தெரிந்தது.



குருவாயூர் ஸுப்ரபாதம்

ஜகத்குரு ஸ்ரீ சிருங்கேரி சங்கராசாரிய ஸ்வாமிகள் சென்னைக்கு விஜயம் செய்திருந்தபோது, அவர் ஆசிகளுடன் ஏப்ரல் நாலாந் தேதி ''ஸ்ரீ குருவாயூரப்பன் ஸுப்ரபாதம்'' இசைத்தட்டு வெளியிடப்பட்டது. ஸ்ரீ குருவாயூரப்பன் ஸுப்ரபாதத்தை இனிமையாகப் பாடி இசைத்தட்டில் பதிவு செய்திருப்பவர் வித்வான் ஸ்ரீ வி. ராமச்சந்திரன். இந்த ஸுப்ரபாதத்தை இயற்றியவர் ஸரசகவி ஸ்ரீ கே. லக்ஷ்மிகாந்த சர்மா. இசை அமைத்தவர் ஸ்ரீ எம். வி. வேங்கடராமன். இந்த இசைத்தட்டு கிராமபோன் கம்பெனியாரின் வெளியீடு. குருவாயூர் ஸுப்ரபாதம் எங்கும் ஒலித்து மங்களம் பரப்புமாக!

செந்திரு அதைப் பார்த்துவிட்டு, பரிதாபத்துடன், ''ஐயையோ! நீயா இப்படிச் செய்தே, பாட்டா! அப்புறம் என்ன ஆயிற்று?'' என்று கேட்டாள்.

''ஆமாம்; செந்திரு! போதையிலே இருக்கிற மனுஷன் என்ன வேணுமானாலும் செய்வான். அப்புறம் என்ன ஆச்சு என்று கேட்கிறாய்! இரத்தம் கொடகொடவென்று கொட்டிற்று. இவர் நினைவு தப்பிக் கீழே விழுந்து விட்டார். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய்ப் போட்டார்கள். போலீஸ்காரர்கள் என்னை அரெஸ்ட் பண்ணிக் கொண்டு போனார்கள். கேஸ் நடந்தது.....''

''அது எப்படி, பாட்டா! சர்க்கார்தான் கள்ளுக்கடைக் கட்சியாயிற்றே? காந்திக் கட்சிக்காரரை நீ குத்தியதற்காக உன் பேரில் எப்படிக் கேஸ் போட்டார்கள்?'' என்று செந்திரு கேட்டாள்.

அப்போது மருடபதி குறுக்கிட்டு, ''போன வருஷம் மட்டும் இதற்கு மாறாயிருந்தது. காந்தி — இர்வின் ஒப்பந்தத்தின் பிரகாரம் சர்க்காரே கள்ளுக்கடை மறியலை அனுமதித்திருந்தார்கள். மறியலின் போது கலாட்டா நடக்காமல் போலீஸ் பந்தோபஸ்து போட்டிருந்தார்கள்'' என்று விளக்கிக் கூறினான்.

''சரி, அப்புறம் கேஸ் என்ன ஆயிற்று? உன்னைத் தண்டித்துவிட்டார்களோ?''

'' அதுதானே இல்லை! இந்தத் தம்பியைக் கோர்ட்டுக்குச் சாட்சிக்குக் கூப்பிட்டிருந்தார்கள். தம்பி போலீஸுக்குச் சாதகமாகச் சாட்சி சொல்லவில்லை. 'கிழவன் சும்மாக் கத்தியை ஓங்கினான். நான் அதைத் தடுத்தேன். அப்போது தவறிக் கத்தி பட்டுவிட்டது. கிழவன் பேரில் தப்பே இல்லை' என்று சொல்லி விட்டார். என்னை ஜெயிலுக்கு அனுப்பாமல் இருப்பதற்காக இந்தத் தம்பி பொய்ச் சாட்சி கூடச் சொன்னார்....''

''இல்லவே, இல்லை, பாட்டா! நீ நிஜமாக நல்ல நினைவில் இருந்திருந்தால் என்னைக் குத்தியிருப்பாயா? போதையினால்தானே செய்தாய்? அதற்காக, கள்ளுக்கடை வைத்திருக்கும் கவர்ன்மெண்டைத் தண்டிப்பதைவிட்டு உன்னைத் தண்டிப்பதில் என்ன பிரயோசனம்?''

'' தம்பி சாட்சி சொன்னதைக் கேட்ட போது நான் கோர்ட்டிலேயே அழுது விட்டேன். பழநியாண்டவர் அறிய, இனிமேல் குடிப்பதில்லை என்று அங்கேயே சத்தியம் செய்தேன். பீடையை அது முதல் விட்டு ஒழித்து விட்டேன். தம்பி அப்படிச் சாட்சி சொல்லியிரா விட்டால், இத்தனை நாட்கள் நான் ஜெயிலிலேயே இருப்பேன்'' என்று சொன்னபோது, கிழவன் கண்களிலிருந்து கரகரவென்று கண்ணீர் பொழிந்தது. (தொடரும்)

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசார்ய ஸ்வாமிகளின் அருளுரை

'யோகம்' என்றால் சேர்க்கை என்று அர்த்தம். பேதமற்றுப் பரமாத்மாவுடன் சேர்க்கை பெறுவதுதான் யோகம். பலனில் பற்றில்லாமல் நிஷ்காம்ய கர்மம் செய்து அதன் மூலம் சித்த சுத்தி பெற்று, பக்தி உபாஸனை மூலம் ஈச்வராநுக்கிரகமும் பெற்றால் இறுதியில், இந்த அபேதமான யோக நிலையை அடையலாம். வேதத்தின் பரம தாத்பரியம் இதுவே. ஸ்ரீ கிருஷ்ண பகவான் அர்ஜுனனுக்கு உபதேசித்த யோகம் இதுவே.

"பரம்பரையாக வந்த இந்த யோகமானது பின்னால் சிதிலமாகியது. அதைப் புனருத்தாரணம் பண்ணவே வந்திருக்கிறேன்" என்றார் ஸ்ரீ கிருஷ்ண பகவான்.

பரமேச்வரன் வேறு கிருஷ்ணன் வேறு அல்ல. இருவரும் ஒருவரே. கீதையிலேயே கிருஷ்ண பகவான், தாம் விச்வரூபம் காட்டும்போது, "என்னுடைய ஈச்வர ஸ்வரூபத்தைப் பார்" என்கிறார்:

பச்ய மே யோகம் ஐச்வரம்

விச்வரூப தர்சனத்தில் லோகத்தை ஸம்ஹாரம் செய்யும் ருத்ர ஸ்வரூபத்தையே கிருஷ்ணன் காட்டினார்.

அவ்வாறு ஈச்வர அபேதமான ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கு ஆதியில் "ஜகத்குரு" என்ற விருது உண்டு. ஸ்ரீ கிருஷ்ணன், "பூர்வத்தில் இந்தயோகத்தைச் சூரியனுக்கு உபதேசித்தேன். மீண்டும் இப்போது கிருஷ்ணனாக உபதேசிக்க வந்தேன். எந்தெந்தக் காலத்தில் தர்மம் மிகவும் க்ஷீணிக்கிறதோ அப்போதெல்லாம் வருவேன்" என்றார்.

ஸ்ரீ கிருஷ்ணாவதாரம் துவாபரயுக இறுதியில் நடந்தது. பிறகு கலியுகம் வந்தது. மறுபடியும் ஜீவபிரம்ம அபேத யோகத்துக்கு நலிவு உண்டாயிற்று. எழுபத்திரண்டு துர்மதங்கள் தோன்றின. அவை மிகப் பயங்கரமாகக் கிளம்பின. அசந்தர்ப்பமானவை எல்லாமே இப்படித்தான் ஆரம்பத்தில் தடபுடலாக இருக்கும். பிறகு இருந்த இடம் தெரியாமற் போகும்.

கலிகாலத்தில் இப்படி எழுபத்திரண்டு துர்மதங்கள் தோன்றி, வைதிக மதத்தை நலிவுறச் செய்வதைப் பரமேச்வரன் பார்த்தார். துவாபர யுகத்தில் ஏற்பட்ட நலிவு சாமானியமானதுதான். எனவே, ஏதோ சில சந்தர்ப்பங்களில் மட்டும் கிருஷ்ண பகவான் ஞானோபதேசம் செய்தால் போதுமானதாக இருந்தது. மற்றச் சமயங்களில் அவர் ஆயர்பாடியில் லீலை செய்தார்; துவாரகையில் ராஜ்ய பாரம் செய்தார்; பஞ்சபாண்டவர்களுக்காகத் தூது போனார். கலிகாலத்தில் இப்படிச் செய்தால் போதாது. அதிக இருட்டு இருப்பதால் நிறைய விளக்கு வேண்டும். ஒரு வாழ்நாள் முழுதும் ஞானோபதேசம் ஒன்றுக்காகவே அவதாரம் செய்ய வேண்டும் என்று பரமேச்வரன் எண்ணினார்.




சர்வ வித்தைகளுக்கும் நாயகரான அந்த ஸதாசிவனே ஸ்ரீ ஆதி சங்கர பகவத்பாதர்களாக அவதரித்தார். ஸ்ரீ சங்கராசாரியர்கள் சிவாவதாரமே என்பதற்கு வேதத்திலேயே ஆதாரம் இருக்கிறது. ஸ்ரீ ருத்ரத்தில், 'கபர்த்திக்கு நமஸ்காரம்; வ்யுப்த கேசனுக்கு நமஸ்காரம்' என்று அடுத்தடுத்து வருகிறது. 'கபர்த்தி' என்றால், 'ஜடாதாரி' என்று அர்த்தம். சிவபெருமானை ஜடாதாரியாகவே பொதுவில் காண்கிறோம். 'வ்யுப்த' என்றால் 'வபனம் செய்து கொண்ட' என்று அர்த்தம். 'வ்யுப்த கேசன்' என்றால் தலையை முண்டனம் செய்து கொண்டவன் என்று பொருள். ஜடாதாரியான சிவன் 'வ்யுப்த கேச'னாக இருந்தது எப்போது? ஸ்ரீ ஆதி சங்கரராக இருந்தபோதே!

பரமேச்வர மூர்த்தி ஆலமரத்தின் அடியில் தக்ஷிணாமூர்த்தியாக அசையாமல் இருந்தது.

ரகுபதி ராகவ

மகாத்மா காந்தி

தமிழாக்கம்: ராஜாஜி



74 - (2)

பிழையும் திருத்தமும் செய்து கொண்டே தான் மக்கட் சமூகங்கள் முன்னேற்றமடைந்திருக்கின்றன. சில சமயம் புரட்சிகரமான மாறுதல்களும் செய்து முன்னேற்றமடைந்திருக்கின்றன. படிப்படியாகச் செல்லும் முறையும் புரட்சி முறையும் இரண்டுமே முன்னேற்றத்துக்கு வேண்டும். பிரபஞ்சத்தில் மரணம் பிறப்பு என்று இரண்டு உண்டல்லவா? மரணம் என்பது புரட்சிகரம். பிறப்பும் உயிர் வாழ்வும் மெதுவாக நடைபெறும் விஷயம். படிப்படியாக வளர்ந்து வாழ்க்கை நடைபெறுகிறது. மரணம் அவ்வாறல்ல. திடீர் என்று நடைபெறுகிறது. மனித வர்க்கத்துக்கு உயிரைப் போலவே மரணமும் அவசியம். ஈசுவரன் பெரிய புரட்சிக்காரன். அவன் அனுப்பும் புயல் காற்றுகளுக்கும் பூகம்பங்களுக்கும் வெள்ளங்களுக்கும் சமானம் வேறு எந்தப் புரட்சிகரமான நிகழ்ச்சியுண்டு? பல்லாயிரம் ஆண்டுகளில் வளர்ந்த மலையும் நிலப் பிரதேசமும் ஒரு விநாடியில் அழிந்து போகும்படியான நிகழ்ச்சிகளை நடத்துகிறான். ஒரு மேகமும் காணப்படாத நிர்மலமான வானம் ஒரு நிமிஷத்தில் மேக மயமாகிப் போய் ஒரே வெள்ளமாகப் பெய்து கிராமங்களை அழித்து விடுவதைக் கண்டிருக்கிறேன். உலகத்தின் சரித்திரமெல்லாம் முன்னேற்றமும் புரட்சியும் கலந்த சரித்திரம்.

ஆன்மாவுக்கு மரணத்துக்குப் பின் மறுபிறப்பு உண்டு. முன் ஜன்மத்தில் அடைந்த சம்ஸ்காரங்கள் ஆன்மாவின் மறுபிறப்பில் தொடர்ந்து வரும். இந்த இந்து மதக் கொள்கையை நான் முற்றிலும் ஒப்புக் கொள்கிறேன். (ஹரிஜன், 18-8-40)

சமயங்கள் சர்க்காருடைய உதவியை எதிர்பார்க்கலாகாது. அரசாட்சியின் உதவியால் நிலைத்து நிற்கலாம் என்று எண்ணும் சமயங்கள் அழிந்து போகும். அத்தகைய சமயங்களில் சக்தி இல்லை என்றே வைத்துக் கொள்ளலாம். அரசாட்சியினுடைய ஆதரவைப் பெற்று நடைபெறும் சமயங்கள் நாட்டுக்கு நன்மை தர முடியாது. தத்தம் பலத்தையும் உறுதியையும் கொண்டே சமயங்கள் நிலைபெற்று மக்களுடைய பக்தியைப் பெற வேண்டும். (ஹரிஜன், 31-8-47)

பூரணமாக நடத்தி வெற்றிபெற இயலாது என்பது எந்தத் தர்மத்தைப் பற்றியும் ஓர் ஆட்சேபணையாகாது. சமயமும் தார்மிகக் கொள்கையும் பக்தியோடு கலந்து குறிக்கோள்களாக இருக்குமே யொழிய ஊனுடலில் வாழும் மக்கள் சம்பூரணமாக அந்தக் கொள்கைகளின்படி வாழ்க்கை நடத்திவிட்டு வெற்றியைக் கொண்டாட முடியாது. உயர்ந்து உயர்ந்து சென்று கொண்டேயிருக்க வேண்டும். ஆன்மாவின் முன்னேற்றம் முடிந்து விட்டது என்று எந்தச் சமயத்திலும் திருப்தி அடைய முடியாது. தர்ம வாழ்க்கை என்பது இந்த ஜன்மத்தில் முடிவு பெறாத யாத்திரை. இதனால்தான் சமயங்கள் வேறுபாடும், கொள்கைகள் வேறுபாடுகளும் உலகத்தில் இருந்து வருகின்றன. எல்லாருக்கும் ஒரு கொள்கை அல்லது ஒரு மதம் என்பது முடியாத காரியம்.

இப்படி மேல்நோக்கிச் செல்வதற்கு முடிவில்லையாயினும் மேல் நோக்கிச் செல்லும் பக்தன் தினத்துக்குத் தினம் அதை நெருங்கிக் கொண்டே செல்வான். குறையாத பக்தியுடன் செல்வான். அதை அடைந்துவிட முடியாது என்பதனால் யாத்திரையில் தளர மாட்டான். இப்படித் தளர்ச்சி அடையாமல், பக்தியை இழக்காமல் குறிக்கோளை நோக்கிச் செல்வதே உண்மை வாழ்க்கை.

(யங் இந்தியா, 22-11-28)

பொழுது நக்ஷத்திரம் சிவபெருமானுக்குரிய திருவாதிரையாகவோ, அல்லது ஸ்ரீ ராமனுக்குரிய புனர்வசுவாகவோ அமையும். ஸ்ரீ ஆதி சங்கர ஜயந்தியானது மற்ற ஜயந்திகளைவிடப் பெரிய புண்ணிய காலம் என்று நான் நினைப்பது வழக்கம். இப்படி நான் சொல்வதற்கு உங்களுக்கு இரண்டு காரணங்கள் தோன்றலாம். 'நம்முடையது' என்ற அபிமானத்தால் சொல்கிறேனோ என்பது ஒன்று. இப்போது பேசப்படுவது ஸ்ரீ சங்கர ஜயந்தியாதலின், அதனைச் சற்று உயர்த்திப் பேசுகிறேனோ என்பது இரண்டாவது. இந்த இரண்டையும் தவிர வேறு ஒரு முக்கியமான காரணத்தாலேயே ஸ்ரீ சங்கர ஜயந்தியை ஸர்வ உத்கிருஷ்டமான புண்ய காலம் என்கிறேன்.

அது என்ன காரணம்? ஸ்ரீ சங்கர அவதாரத்துக்கு முன் வைதிக மதம் ஆட்டம் கண்ட போது அது வரை வேத புராணங்களால் விதிக்கப்பட்ட புண்ணிய காலங்கள் எல்லாம் தத்தளித்தன. அப்போது ஸ்ரீ சங்கர ஜயந்தி நிகழ்ந்ததால்தான் அந்தப் புண்ணிய காலங்கள் எல்லாம் மீண்டும் நிலைநிறுத்தப்பட்டன. ஸ்ரீ சங்கர ஜயந்தி நிகழ்ந்திராவிடில், இன்று ஸ்ரீ ராமநவமியும், கோகுலாஷ்டமியும், சிவராத்திரியும், மற்ற புண்ணிய தினங்களும் கொண்டாடுவோமா என்பதே சந்தேகம். ஆகையினால்தான் ஸ்ரீ சங்கர ஜயந்தியை மிக மிகப் புண்ணிய காலமாகச் சொல்கிறேன். தனிமனிதர் ஒருவராக இருந்து கொண்டு அந்த சாமானிய பிராமண சந்நியாசி தேசத்தில் திக்விஜயம் செய்து இந்த மகத்தான அநுக்கிரகத்தைச் செய்தார். 'திக்விஜயம்' என்றால் அவர் செய்ததுதான் 'திக்விஜயம்'.

ஸ்ரீ ஆசார்யாளுடைய திக்விஜய மகிமையைக் கேட்டதற்குப் பிரயோஜனமாக நாம் அனைவரும் நம் மனத்தில் உள்ள அசட்டுத்தனங்களைப் போக்கி, நமக்குள் நாமே திக்விஜயம் செய்ய வேண்டும். பஜகோவிந்தத்தில் ஆரம்பித்துப் பரமாத்ம தத்துவத்தில் முடிவது ஸ்ரீ ஆசார்யாள் உபதேசம். ''ஒன்றும் தெரியாவிட்டாலும் பரவாயில்லை, கோவிந்த கோவிந்த என்று சொல்'' என்கிறார் ஆசார்யாள். ''யமன் ஒரு க்ஷணம் கூட வீண் கழிப்பதில்லை. பிரதி க்ஷணமும் நெருங்கி வருகிறான். எப்போது பிடித்துக் கொள்வானோ தெரியாது. கோவிந்தன் காலைக் கட்டிக் கொண்டாலே கவலை இல்லை'' என்றார். எப்போதும் கோவிந்தா கோவிந்தா என்று சொல்லிப் பழக வேண்டும். எப்படியும் போஜனம் செய்கிறோம். அதோடு, சாப்பிடுகையில் 'கோவிந்த கோவிந்த' என்று சொல்லிக் கொண்டே உண்டால் அந்த மனோ பாவத்துடன் உள்ளே போகும் அன்னம், ஆத்ம தியானத்துக்கு அநுகூலம் செய்யும். அந்த அன்ன சாரம் உடம்பில் சேரச் சேர ஈச்வர ஸ்மரணம் அதிகமாகும். நாம் என்றைக்கும் போஜனத்தை நிறுத்தப் போவதில்லை. ஆதலினால் இந்தச் சின்ன அப்யாசத்தால் கோவிந்த உச்சாரணம் என்றும் நடந்து வரும். கோவிந்த உச்சாரணத்துடன் சாப்பிடுகையில் மற்ற விஷயங்களைப் பற்றிப் பேசுவதை நாமே நிறுத்துவோம். கண்ட வஸ்துக்களை கோவிந்த நாமத்துடன் உண்ணக் கூடாது என்ற கட்டுப்பாடும் வரும். சித்தம் சுத்தமாவதற்கு ஆகாரம் சுத்தமாயிருப்பது மிக அவசியம். பல இடங்களில் பலவிதமான வஸ்துக்களைப் புசிப்பதே இன்றைய மனக் கோளாறுகளுக்கு ஒரு முக்கியமான காரணம்.

ஆசார்யாள் மகிமை கேட்டதற்கு அடையாளமாக இப்படிச் சின்ன விஷயங்களையாவது அநுஷ்டானத்தில் கொண்டு வரவேண்டும். எல்லோரும் காலையில் சிறிது விஷ்ணு ஸ்மரணம், மாலையில் சிறிது சிவ ஸ்மரணம் செய்ய வேண்டும். இரவில் தூங்கும் முன்பு அம்பாளைப் பிரார்த்திக்க வேண்டும். அன்றைய தினம் ஆத்ம க்ஷேமமாகவோ, பரோபகாரமாக ஜீவகாருண்ய சேவையோ ஏதேனும் செய்தோமோ என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். ''அம்மா, இன்று வரை நான் செய்த தப்புக்களை மன்னித்து, நாளையிலிருந்தேனும் இந்தத் தப்புக்களைச் செய்யாமல் ரக்ஷிப்பாய்'' என்று காமாக்ஷியை மனமுருகி வேண்டிக் கொண்டு தூங்க வேண்டும்.

இன்று நம்மிடை இப்படிப்பட்ட சிறிய, பெரிய அநுஷ்டானங்கள் பலவும் வந்திருப்பதற்குக் காரணமான ஸ்ரீ ஆதி ஆசார்யாளை என்றைக்கும் மறக்கக் கூடாது. நவராத்திரி, கோகுலாஷ்டமி போல் ஸ்ரீ ஆசாரிய ஜயந்தியைக் கொண்டாட வேண்டும். ஆசாரிய பாதுகையைத் தினமும் பூஜிக்க வேண்டும். ஸ்ரீ ஆசார்யாள் அநுக்கிரகத்தில் சகல மங்களங்களும் உண்டாகும்.

ஸ்ரீ ஆதிசங்கரர் பாலப் பிரம்மசாரியாக பிட்சை எடுத்து வரும்போது ஓர் ஏழை அந்தணரின் இல்லத்துக்குச் சென்றார். இந்தப் புண்ணிய மூர்த்திக்குப் பிட்சை இடுவதற்கு அந்த இல்லாளிடம் ஏதுமே இல்லை. ஆனால் இந்தத் தெய்வக் குழந்தையிடம் பக்தியும் அன்பும் அவள் இதயத்தில் கடலாகப் பொங்கின. வீட்டில் தேடித் தேடி எங்கோ ஒரு புரையில் இருந்த ஒரே ஒரு நெல்லிக்கனியைக் கொண்டு வந்து பால சங்கரனின் பிட்சா பாத்திரத்தில் இட்டாள் அந்த மாது. அவளது இதய மாதுரியம் குழந்தையின் கருணை நாடியைக் கண்டுவிட்டது. கருணை கவிதையாயிற்று. ஏழை அந்தண மாதுக்கு அருள்பாலிக்குமாறு மகாலக்ஷ்மியைப் பிரார்த்தித்து, 'கனகதாராஸ்தவம்' பாடினார் பாலசங்கரர். மனமகிழ்ந்த மாதவன் தேவி பொன் நெல்லிக் கனிகளாகவே அவ்வீட்டில் அருள் மழை — பொருள் மழை — பொழிந்தாள். ஏப்ரல் 29ந் தேதி நிகழும் ஸ்ரீ சங்கர ஜயந்தியை முன்னிட்டு இவ்விதழ் அட்டை இப்புனித நிகழ்ச்சியைத் தாங்கி வருகிறது.

ஆயிரத்தைக் கண்டவர்

திருமணப் பத்திரிகையிலும், தொழிற்சாலை திறப்பு விழா அழைப்பிதழிலும் நிகழ்ச்சி நிரலின் இறுதியில் 'விருந்து தயாரிப்பவர்' என்று பெயர் குறிப்பிடும் அளவுக்குச் சமையல் கலைஞர்கள் சமூக வாழ்வில் இன்று உயர்ந்து விட்டார்கள்!

கும்பகோணத்தைச் சேர்ந்த ஸ்டிரீபார்ட் மணி ஐயர் பங்கு கொள்ளும் பெரிய இடத்துக் கல்யாணங்களுள் சிலவற்றில், இப்படித்தான் 'நளபாகம்' என்னும் விருதையும் சேர்த்து அவர் விருந்து தயாரிப்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்!

''நள மகாராஜாவும், பீம சேனனும் எங்கள் தொழிலுக்கே சிறப்பையும், உயர்வையும் தந்தவர்கள்!'' என்கிறார் இந்த மணி ஐயர்.

கேரளாவைச் சேர்ந்த திருச்சூருக்கு அருகில் ஒரு கிராமத்தில் பிறந்தாலும், தஞ்சை மாவட்டம் நன்னிலத்தில்தான் நினைவு தெரிந்த நாள் முதல் வசித்து வந்திருக்கிறார். குடும்பத்தாரின் 'பாலசுப்பிரமணிய விலாஸ்' ஹோட்டல் அங்கு நல்லபடியாக நடைபெற்று வந்தது.

அங்கேயே எட்டாம் வகுப்பு வரை படிப்பு. அதற்கு மேல் படிக்கவில்லை.

அண்ணனுடன் சேர்ந்து ஹோட்டலில் சுவையான உணவு பதார்த்தங்கள் தயாரிப்பதைக் கற்றுக்கொண்டார் இளைஞர் மணி. 1927 முதல் 1945 வரை பல ஊர்களில் பல ஹோட்டல்களில் பலவித வேலைகளைச் செய்து பழகினார். சொந்தமாகச் சீர்காழியில் காப்பி கிளப்பும் நடத்திவிட்டு 1945 முதல் குடந்தைவாசியானார்.

''உங்கள் பெயருக்கு முன்னால் 'ஸ்டிரீபார்ட்' என்று போட்டிருக்கிறதே?''

''1930ல் திருச்சியில் இருந்தேன். தேசிய சங்கீத சபாவில் நாடகங்கள் நடத்தினார்கள். அந்த நாடகங்களில் பெண் வேடம் எனக்குத்தான் கிடைக்கும்! அதனால் இந்தப் பெயர் வந்தது.''

''கல்யாண வீடுகளில் விருந்தைத் தயாரிக்கும் பொறுப்பை எப்போது ஏற்றீர்கள்?''

''இந்த ஊரில் சமையல் துறையில் சிறந்து விளங்கியவர் இருந்தார்கள். அக்கரை சாமா, கடலங்குடி கோபால ஐயர், மருத்துவக்குடி ராஜு, புருடா பிச்சு ஐயர் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்கள் சேர்ந்து, 'சமையற்காரர்கள் சங்கம்' கூட வைத்திருந்தார்கள்...! நான் புருடா பிச்சு ஐயரிடம் பல வருஷங்கள் கூட இருந்தேன். அவர் காலமான பிறகு சில வாடிக்கைகள் எனக்கு அறிமுகமாகி, நானும் தனி

பீமன் வகுத்த பாதையில்

யாக ஆட்களுடன் இத்துறையில் ஈடுபட்டேன்.''

''வருஷத்துக்கு எத்தனை கல்யாணங்களில் விருந்து செய்திருப்பீர்கள்?''

''வருஷத்துக்குக் சுமார் நூற்றிருபது கல்யாணங்கள்; கடந்த இருபது வருஷங்களில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட டின்னர் ஏற்பாடுகளை ஏற்று நற்பெயர் பெற்றிருக்கிறேன். அறுபத்தி நாலு இனுக்க சுவையாகத் தயாரிப்பேன்! ஆட்களை வைத்து வேலை வாங்குகிறேன் என்றாலும் எல்லாமே எனக்குச் சமைக்கத் தெரியும்!...''

''உங்கள் சமையலைப் பாராட்டிய பிரமுகர் ஒருவரைப் பற்றிக் கூறுவீரா?''

''கும்பகோணத்தில் ஒரு பொருட்காட்சி நடைபெற்றது. அதைத் திறந்து வைக்கும்பொருட்டு அப்போது முதலமைச்சராக இருந்த திரு காமராஜ் வந்திருந்தார். அவருக்குச் சென்னை திரும்பு முன்பு ஒரு விருந்து கொடுக்கப் பொன்னுசாமி சேர்வை என்னை அழைத்தார். விருந்து முடிந்ததும் திரு காமராஜிடம் பொன்னுசாமி சேர்வை 'இவர்தான் இன்று விருந்து சமைத்தார்!' என்று அறிமுகப்படுத்தினார். 'எல்லாம் ரொம்ப ஜோர்!' ஆனால் என்னால் சாப்பிடத்தான் முடியல்லே!...' என்றார் தலைவர் சிரித்துக் கொண்டே...''

''பணம் பேசியபடி கிடைக்குமா?''

''சில இடங்களில் ஜரிகை வேஷ்டி உள்படப் பேசியதை விட ஐம்பது ரூபாய் கூடவே அன்பளிப்பாகத் தருவார்கள். பெரிய இடம்



என்று ஒப்புக் கொண்டு கை நஷ்டம் ஆகி விடுவதும் உண்டு. கும்பகோணத்தில் ஒருவர் கல்யாணம் நடத்தினார். ரொம்ப நாள் பழக்கம். அதனால் பணத்தைப் பற்றிக் கூடப் பேசாமல் கல்யாண வேலைகளைக் கவனித்தேன். கல்யாணம் முடிந்து, சத்திரத்தைக் காலி பண்ணுவதற்கு முன்னால் என்னை வரச் சொன்னார். உட்கார வைத்து மாப்பிள்ளை, பெண்ணைக் கூப்பிட்டு, வணங்கச் சொல்லி, என்னை ஆசிர்வதிக்கச் சொன்னார்! சமையல்காரரை இப்படிக் கௌரவிக்கிறாரே என்று பூரித்தேன். பெரிய தட்டில் சாத்துக்குடி, மலைப் பழங்களுடன் ஒட்டிய பெரிய உறை ஒன்றை வைத்துக் கொடுத்தார். வீடு திரும்பிக் கவரைப் பிரித்தால், அதிர்ச்சியால் தலைசுற்றியது. ஒற்றை ரூபாய் நோட்டுக்கள் பதினைந்து! ஏமாற்றத்தை வெளிக் காட்டிக்கொள்ளாமல் கையை விட்டுப் போட்டு வேலையாட்களை அனுப்பி வைத்தேன்!'' என்கிறார் மணி.

பேட்டி: ஏ. சுவாமிநாதன்



ஸ்டிரீபார்ட், சமையல்காரர் மணி ஐயர்.

ராமாயணம்

ராஜாஜி

நாகபாசத்தின் சக்தி தளர்ந்தது. ராமன் கண்களைத் திறந்து எழுந்தான். பலமான காயங்கள் பட்டிருந்தாலும் தன் தேக பலத்தாலும் ஆன்ம சக்தியாலும் சுவாதீனமடைந்து எழுந்தான். எழுந்ததும் பக்கத்தில் விழ்ந்து கிடந்த தம்பியைப் பார்த்து, ''ஐயோ!'' என்று அலறினான். ''நான் இனி என்ன வெற்றியடைந்து என்ன பயன்? உன்னை ஏன் நான் கூடக் காட்டுக்கு அழைத்து வந்து கொன்றேன்? நீ இன்றி ஊருக்குத் திரும்பி நான் எப்படிப் போக முடியும்? நான் துக்கப்படும்போதெல்லாம் சமாதானமும் தைரியமும் சொல்லுவாயே! இப்போது ஒன்றும் பேசாமல் மௌனமாக இருக்கிறாயே! நான் உன்னை இழந்து எப்படி உயிர் வைத்திருக்க முடியும்? உன்னைப் போன்ற ஒரு வீரன் உண்டா? யாரையும் சம்பாதிக்கலாம்; உன்னைப் போன்ற ஒருவனை நான் எங்கே கண்டு பெற முடியும்? நூற்றுக் கணக்கில் கைகளைப் பெற்ற கார்த்தவீரியார்ஜுனனைப் போல் இரண்டு கைகளைக் கொண்டே நீ சரமாரி பெய்து அரக்கர்களைக் கொன்றாயே! எப்படித்தான் நீ மாண்டாய்? என்கூட ஆரண்ய வாசத்துக்கு வந்தாய். இப்போது உன் கூட நான் யமாலயம் செல்வேன். தோற்றேன். விபீஷணனுக்கு நான் கொடுத்த வாக்குறுதி பொய்யாயிற்று. வானர ராஜனே! வானர வீரர்கள் அனைவரையும் கூட்டிக் கொண்டு கிஷ்கிந்தைக்குச் செல்லுங்கள். எனக்காக நீங்கள் உழைத்தீர்கள். மித்திர தர்மத்தைக் குறைவின்றிக் காத்தீர்கள். உங்களுக்கு நான் நன்றி செலுத்துகிறேன். இனி நீங்கள் மாய்வதில் பிரயோஜனமில்லை. உங்கள் நகரத்துக்குத் திரும்பிப் போங்கள். நான் இங்கேயே உயிரை விடுவேன்!'' என்று ராமன் துயரம் தாங்காமல் தைரியம் இழந்து, பிரலாபித்தான்.

அச்சமயம் விபீஷணன் கதாபாணியாக வந்து சேர்ந்தான். கன்னங் கரேலென்று பிரகாசித்த விபீஷணனுடைய பெரும் வடிவத்தைக் கண்டு வானரர்கள் இந்திரஜித்தே வந்து விட்டான் என்று பயந்து சிதறிப் போக ஆரம்பித்தார்கள். பிறகு விபீஷணன் என்று கண்டு கொண்டு அமைதியடைந்தார்கள்.

கிலேடைந்த வானரர்கள் விபீஷணனைக் கண்டதும் இவன் இந்திரஜித்தே என்று எண்ணி விழுந்து ஓடியபோது, ''இதென்ன! வானரர்கள் இப்படிச் சிதறி ஓடுகிறார்கள்? காரணம் என்ன?'' என்று சுக்ரீவன் கேட்டான்.

''ராம லக்ஷ்மணர்கள் காயப்பட்டு விழ்ந்திருப்பது நீ அறியாயா?'' என்றான் அங்கதன்.

''அப்படியல்ல, இவர்கள் கலைந்து ஓடுவதைப் பார்! வேறு காரணம் இருக்க வேண்டும்'' என்றான் சுக்ரீவன்.

பிறகு விபீஷணனைக் கண்டு யார் என்று அறிந்து கொள்ளாமல் இந்திரஜித்தின் மாயையால் இம்சிக்கப்பட்ட வானரர்கள் இப்படிப் பயந்து ஓடுகிறார்கள் என்பதை அறிந்தான்.

ஜாம்பவான் மூலம் வானரர்களுக்கு விஷயம் தெரியப்படுத்தி அவர்களை




ஓடாமல் தடுத்து நிறுத்தி அமைதியை ஏற்படுத்தினான்.

விபீஷணன் ராம லக்ஷ்மணர்களைப் பார்த்தான். அவர்கள் காயப்பட்டு உடல் நிறைய அம்புகள் பாய்ந்து அசையாமல் கிடப்பதைப் பார்த்து அழ ஆரம்பித்தான்.


''காரியம் எல்லாம் கெட்டுவிட்டதே. இனி என்ன செய்வது!'' என்று விபீஷணன் பிரலாபிப்பதைப் பார்த்து, சுக்ரீவன் அவனுக்குத் தைரியம் சொன்னான். தன் மாமன் சுஷேணனைப் பார்த்து, ''நீர் ராம லக்ஷ்மணர்களை எடுத்துக் கொண்டு கிஷ்கிந்தைக்குப் போவீர்.





வரகூர் ஸ்ரீ கல்யாணசுந்தர சாஸ்திரிகளுக்கு அறுபத்தொரு வயது பூர்த்தியானதையொட்டி ஏப்ரல் 9ந் தேதி சென்னையில் ஒரு விழா நடந்தது. அறிஞர்கள் பலர் பாராட்டுரை வழங்கினார்கள். அவ்வமயம் காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் அனுக்கிரகித்து அனுப்பி வைத்த பொன்னாடையை ஸ்ரீ கல்யாண சுந்தர சாஸ்திரிகளுக்குப் போர்த்துகிறார், வேப்பத்தூர் ஸ்ரீ வைத்தியநாத சாஸ்திரிகள்.

அமதாபாத் நூலாலை ஊழியர்களுள் தென்னிந்தியர்கள் வசிக்கும் சூரியநகர் பகுதியில் பாலமுருகனுக்கு ஒரு கோயில் எழுப்ப ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இவ்வாண்டு விமரிசையாகக் கொண்டாடப்பட்ட பங்குனி உத்தர விழாவின் போது தென்னிந்தியர்கள் மட்டுமன்றி நூலாலை ஊழியர்கள் அனைவருமே பங்குபற்றிப் பாலமுருகன் அருள் பெற்றனர். நூலாலை ஊழியர்களின் நன்முயற்சியால் பாலமுருகன் தேவஸ்தானம் அமைக்கப்பட்டுக் கோயில் கட்ட நிலமும் ஆர்ஜிதம் செய்தாகிவிட்டது. தற்போது ஒரு பூஜா மண்டபம் மட்டும் எழுப்பியிருக்கிறார்கள். பாலமுருகன் கோயில் கம்பீரமாக உருவாகப் பண உதவி செய்ய விரும்புவோர்: Sri Balamurugan Devasthanam, Suryanagar khokhra, Ahmedabad-8 என்ற விலாசத்துக்கு அனுப்பலாம்.



நான் இந்த ராவணனைத் தொலைத்து விட்டு, சீதையை மீட்டுக் கொண்டு வருவேன்'' என்றான்.

சுஷேணன், ''இந்த ராஜகுமாரர்களின் காயங்களைச் சொஸ்தப்படுத்தும் மருந்துகள் உண்டு. அந்த மூலிகைகள் இருக்கும் இடம் நம்மில் சிலருக்குத் தெரியும். இதோ இருக்கிறாரே, ஹனுமான், இவரை அனுப்பினால் அந்த மருந்துகளைக் கொண்டு வருவார்'' என்றான்.

இப்படி இவர்கள் பேசிக் கொண்டிருந்த சமயம் காற்றும் கடலும் கலங்கிற்று. பார்க்கையில் மிகப் பெரிய பறவை — கருடன் — வருவதைக் கண்டார்கள்.

கருடன் வந்ததும் ராம லக்ஷ்மணர்களின் உடல்களில் பாய்ந்திருந்த பாணங்கள் அப்படியே மாயமாய் ஓடி மறைந்தன. அவை யாவும் விஷநாகங்கள். இந்திரஜித்தின் மந்திர பலத்தால் அம்புகளாக வடிவம் கொண்டு அவன் மாயையால் ராம லக்ஷ்மணர்களின் உடலில் பாய்ந்திருந்தன. தங்களுடைய யமனாகிய கருடன் வந்ததும் ராமலக்ஷ்மணர்களின் தேகங்களை விட்டு ஓடி விட்டன.

பிறகு கருடன் ராம லக்ஷ்மணர்களைத் தடவிக் கொடுத்து, அவர்களுக்குச் சகல சக்தியும் மறுபடியும் உண்டாக்கிவிட்டான். காயங்கள் எல்லாம் உடனே போய் முன்னைவிட பலமும் தேஜசும் பெற்று எழுந்தார்கள்.

''எங்களுக்கு இந்த உபகாரம் செய்த நீர் யார்?'' என்று ராமன் கேட்டதற்குக் கருடன், ''நான் உனக்குப் பரம சிநேகிதன், தோழன். உனக்கு மங்களம். நான் போய் வருகிறேன். யுத்தத்தில் வெற்றி பெறுவாய். பிறகு நான் யார் என்பதைப் பேசிக் கொள்ளலாம்'' என்று ஹரிவாகனன் சொல்லிச் சென்று விட்டான்.

ராமலக்ஷ்மணர்கள் மறுபடியும் பூரண பலத்துடன் ஆரோக்கியமடைந்து நின்றதும் வானரர்கள் மிக மகிழ்ச்சியும் உற்சாகமும் அடைந்து, ராவணன் கோட்டையைத் தாக்கினார்கள். (தொடரும்)

போர்ட் ஆப் ஸ்பெயின் கிரிக்கெட் மைதானம். ஞாயிற்றுக்கிழமை யன்று பேபி காவஸ்கர் இருநூற்றுத் தொண்ணூறு நிமிஷங்கள் அபாரமாக ஆடி, 22 பவுண்டரிகளை நாலா பக்கமும் அடித்து சோபர்ஸ் குழுவினரைத் திணற அடித்துத் தம் இரண்டு சதங்களை எட்டினார். உடனே கிரிக்கெட் ரசிகர்கள் மைதானத்தில் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள். அவருக்கு மலர் மாலைகளை அணிவித்தனர். வட்டமாகச் சூழ்ந்து கொண்டு அவரை நாற்காலியில் அமர்த்திப் பைகளில் ரூபாய் நோட்டுக்களையும் நாணயங்களையும் திணித்தனர். இப்படி அவரை இன்பத் தொந்தரவில் ஆழ்த்திய ரசிகர்களைப் போலீசார் மைதானத்தை விட்டு விலக்கிச் சமாளித்தனர். இருபத்தொரு வயதான காவஸ்கர் அறுநூறை மேற்கிந்தியத் தீவு கிரிக்கெட்



கையிலும் திரு எம். கே. மந்திரி ஒழுக்கம் கடைப்பிடிப்பவர். இளம் வயதிலிருந்து காவஸ்கரை உருவாக்குவதில் திரு எம். கே. மந்திரிக்குப் பங்கு உண்டு.

கயில் காவஸ்கர் ஆறாவது டெஸ்டில் நூற்றெண்பது ரன்களைக் குவித்திருந்தபோது தாதரில் திரு காவஸ்கரின் இல்லத்தில் அவரது அன்னை மீனாள் காவஸ்கரும், சகோதரிகள் கவிதா, நூதனும் காவஸ்கர் மறுநாள் இரு சதங்களைத் தாண்டுவதற்கும் இந்தியாவின் வெற்றிக்கும் பிரார்த்தனை புரிந்து கொண்டிருந்தார்கள். காவஸ்கரின் தந்தை மனோகர் காவஸ்கர் அன்றிரவு தமது தொழில் நிமித்தமாகக் கல்கத்தாவுக்கு விமானம் ஏறினார். மறுநாள் காவஸ்கர் 220 ரன்களை எடுத்து விட்டார் என்ற செய்தியைக் கேள்வியுற்றதும், காவஸ்கரின் அன்னையும், சகோதரிகளும் மகிழ்ச்சிப் பூரிப்பில் ஆழ்ந்து தங்கள் பிரார்த்தனையை நிறைவேற்றிய ஆண்டவனுக்கு நன்றி சொன்னார்கள்.

'காவஸ்கர் குடும்பமே தெய்வ பக்தியில் மூழ்கியுள்ள குடும்பம்' என்கிறார் நெருங்கிய நண்பர் பரஞ்சபே.

கல்கத்தாவில் காவஸ்கரின் மகத்தான 220 ரன்கள் பற்றிக் கேள்விப்பட்ட தந்தை மனோகர் காவஸ்கர் பேசும் சக்தியையும் இழந்து

எண்கள் குவிந்தன; எண்ணங்கள் மலைத்தன!

டெஸ்ட் பந்தயங்களில் தாண்டியவர்களில் ஆறாவது நபராவார். ஹெண்ட்ரன், ஹட்டன், ஹார்வி, ஹனீப், சர்தேசாய் ஆகியோர் இந்தச் சாதனையை இதற்குமுன் புரிந்திருக்கிறார்கள்.

காவஸ்கர் பிறக்கும்போதே அவரது ரத்தத்தில் கிரிக்கெட் ஊறியிருந்தது என்று சொன்னால் மிகையாகாது. அவரது தகப்பனார் மனோகர் காவஸ்கர் கிரிக்கெட் ஆட்டக்காரர். காவஸ்கரின் மாமா திரு எம். கே. மந்திரி கிரிக்கெட் ஆட்டத்தில் வல்லவர்; விக்கெட் கீப்பர். 1951ம் வருஷம் இந்தியக் கிரிக்கெட் டெஸ்ட்களில் விக்கெட் கீப்பிங் கலையில் தேர்ந்தவர்களான ஸென்னுக்கும் மாதவ் மந்திரிக்கும் பலத்த போட்டி. இருவருமே ஒருவருக்கொருவர் சளைத்தவர்களல்ல. எம். கே. மந்திரிக்கு பாட்ஸ்மன் என்ற திறமையும் கூடுதலாக இருந்தது. விக்கெட் கீப்பிங்கில் திரு எம். கே. மந்திரி 71 விக்கெட்டுகளை வீழ்த்திப் புகழ் பெற்றவர். அவற்றில் அவர் ஸ்டம்பு அவுட் செய்தது 21.

1941ம் ஆண்டில் வடக்கத்திய பிரிவுக்கு எதிராக ஒரே மாட்சில் ஒன்பது பாட்ஸ்மன்களை வீழ்த்திய பெருமை இவருக்கு உண்டு. அவற்றில் அவர் பாய்ந்து 'ஸ்டம்பு அவுட்' செய்தது ஐந்து. 1948ல் பம்பாய் கோஷ்டிக்காக ஆடிய திரு எம். கே. மந்திரி வங்காள கோஷ்டிக்கு எதிராக 117 ரன்களும், சென்னைக்கு எதிராக 116 ரன்களும், மகாராஷ்டிரத்துக்கு எதிராக 200 ரன்களும் எடுத்தவர். கிரிக்கெட் ஆட்டத்திலும் வாழ்க்



படங்கள்: எம். கே. மந்திரி. காவஸ்கர்.

மெய்மறந்து நின்றார். மகன் எண்ணைக் குவித்தார்; தந்தை எண்ணங்கள் மலைக்க நின்றார்.


காவஸ்கர் பம்பாயில் ஜூனியர் எம். ஏ. மாணவர். நல்ல காலம்! அவர் ஜூனியர் மாணவராதலால் பரீட்சை எழுத வேண்டியதில்லை. மூன்று மாத காலமாக அவர் கல்லூரிக்கே செல்லாமலிருப்பது பற்றிச் சர்வகலாசாலையே முடிவெடுக்க வேண்டும். பூஜ்யர் மின்குட்டா சொல்கிறார்: ''மாபெரும் வெற்றியோடு திரும்பும் காவஸ்கர் மறுபடியும் மாணவராகப் பயில வருவாரா என்பதே கேள்விக்குறி. வெற்றிப் புகழோடு தாயகம் திரும்பும் காவஸ்கருக்கு எத்தனையோ பேர் முண்டியடித்துக் கொண்டு பல பெரிய வேலைகளைத் தர முன்வருவார்களே!'' -குண்டுமணி

ஆதாரம்: டைம்ஸ் ஆப் இந்தியா


சிங்கக் கழுகு
பீட்டர் ஓ டான்னல்
17
லாம்ப்ஸனின் பெரிய கப்பல் சிங்கக் கழுகுடன் வரும் சிறு கப்பலை மூன் னேற்பாடான இடத்தில் சந்திக்கிறது.
மாடஸ்டி! என்ன அது?
ஒரு சிலை - உன் கப்பலின் மேல் தளத்தில் இதை இறக்க ஏற்பாடுசெய்!
இந்த நிமிஷங்களுக்குப் பின்....
சிலை ரொம்ப உசத்தி என்று தோன்றவில்லை எனக்கு. மேலும் பீடத்துடன் தூக்கி வருவானேன்?
பீடத்தை ரொம்ப நாளுக்காக உடைக்க வேண்டும் என்பதால் தான், லாம்ப்-ஸன்!
நாயிடு கடலின் அடிவாரத் துக்குப் போய்விட்டான். நாம் வந்த கப்பலை என்ன செய்ய?
இங்கேயே மிதக்கட்டும். சீக்கிரமே வெளியி லிருந்து யாரேனும் வந்து அதைக் கரை சேர்ப்பார்கள்.
எனக்கு ஒன்றுமே புரியவில்லை என்பது வரை நன்றாகப் புரிகிறது.
1784
லாம்ப்ஸன்! கப்பல் டாக்டரை எழுப்பு!
டாக்டர் இல்லை, மாடஸ்டி! கப்பலுக்கு வர்ணம் பூசிக்கொண்டிருந்தபோது நீ போன் பண்ணினாய். அகப்பட்ட மாலுமிகளை அழைத் துக்கொண்டு உடனே கிளம்பி விட்டேன்.
அப்படியானால் நானே கரங்களைச் சுத்தப் படுத்திக்கொண்டு காயத்தை ஆராய வேண்டியதுதான்.
டாக்டர்களைவிட எனக்கு உன் வைத்தியமே தேவலாம்.
மயக்கம் தர மருந்து ஏதுமில்லையே?
தூக்க மாத்திரை கொடுத்து விட்டுத் தோளில் உள்ள தாரை நீக்கிக் குண்டையும் வெளியே எடுக் கிறேன். வேறு வழி?



இரண்டு நாட்கள் கப்பல் அட்லாண்டிக் கடலில் தெற்கு நோக்கிச் செல்கிறது. பிறகு மீண்டும் வடக்குத் திக்கில் திரும்பி சிசிலிக்குப் பயணப் படுகிறது.






மூன்று மணி நேர உழைப்புக்குப் பின்....
மிஸ்டர் கார்வின்! இங்கு ஏதோ இருக்கிறது.
கார்வின்! ஜாக்கிரதையாக அதைத் தோண்டி எடு!
அதுதான்!.
1799
பிரமாதம்! நீ இவற்றைக் கடத்திக் கொண்டு வருமுன்னர் யாருக்குச் சொந்தமாக இருந்தன?
நான் கடத்திக்கொண்டு வர வில்லை, லாம்ப்ஸன்! மாக்ஸ் யாருக்காகப் பணியாற்றி வந்தானோ அந்த ஆசாமிக்குத் தான் இவை சொந்தம்.
ரோமுக்கு வந்த மாடஸ்டி யாருக்காக மாக்ஸ் டாஸ்லோ இவை வாங்கி அரண் மனையைப் புதுப் பிக்கும் வேலையில் ஈடுபட்டிருந் தாரோ அதே செனியந்தரைக் காண வருகிறாள்.
மிஸ் மாடஸ்டி! வணக்கம்; வாருங்கள்!
உங்களைப் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன். மாக்ஸின் நண்பர் நீங்கள் என்பதும் தெரியும். என் அநுதாபங்களை ஏற்றுக் கொள்ளுங்கள். மாக்ஸ் நம்பிக்கையானவன்.
எனக்கு ரொம்பப் பிடித்தமானவன். அப்படி ஒரு விபத்து அவனுக்கு நேர்ந்திருக்க வேண்டாம்.
அது விபத்து இல்லை; கொலை!
கொலையா?!
(தொடரும்)



KMS-1 PREM ASSOCIATES TM



முப்பத்தோன்றும் அத்தியாயம்

"வேளை வந்து விட்டது!"

சென்ற அத்தியாயத்தில் கூறிய நிகழ்ச்சிகளோடு இந்தக் கதையை முடித்துவிடக் கூடுமானால் எவ்வளவோ நன்றாயிருக்கும். நேயர்களில் சிலர் ஒரு வேளை அவ்விதம் எதிர்பார்க்கவும் கூடும். ஆனால் அது இயலாத காரியமாயிருக்கிறது. அதே தினத்தில் ஏறக்குறைய அதே நேரத்தில் கடம்பூர் சம்புவரையரின் மாளிகையில் நடந்த பயங்கர நிகழ்ச்சியைப் பற்றி நாம் இனி சொல்ல வேண்டியிருக்கிறது.

*   *   *

நந்தினி அவளுடைய அந்தப்புர அறையில் தனியாக அங்கு மிங்கும்

பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

நடந்து கொண்டிருந்தாள். அவளுடைய உள்ளத்தில் குடிகொண்டிருந்த பரபரப்பை அவளுடைய முகத் தோற்றம் காட்டியது. அவளுடைய கண்களில் ஓர் அபூர்வமான மின்னொளி சுடர் விட்டுத் தோன்றி மறைந்தது. அந்த அறைக்குள்ளே வருவதற்கு அமைந்திருந்த பல வழிகளையும் அவள் அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தாள். அந்த வழிகளில் ஏதாவது காலடிச் சத்தம் கேட்கிறதா என்று அவளுடைய செவிகள் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தன. ''வேளை நெருங்கி விட்டது!'' என்று அவளுடைய உதடுகள் அடிக்கடி முணுமுணுத்துக் கொண்டிருந்தன. சில சமயம் அவ்விதம் முணுமுணுத்த அவளுடைய உதடுகள் துடித்தன. இன்னும் சில சமயம் அவளுடைய கண்ணிமைகளும் புருவங்களும் துடித்தன. ஒவ்வொரு தடவை அவள் உடம்பு முழுவதுமே ஆவேசக்காரனுடைய தேகம் துடிப்பது போல் பதறித் துடிதுடித்தது.

நந்தினி படுப்பதற்காக அமைத்திருந்த பஞ்சணை மெத்தை விரித்த கட்டிலில் நாலு பக்கமும் திரைச் சீலைகள் தொங்கின. அவை கட்டிலை அடியோடு மறைத்துக் கொண்டிருந்தன. நந்தினி ஒரு பக்கத்துத் திரைச்சீலையை மெதுவாகத் தூக்கினாள். படுக்கையில் நீள வாட்டில் வைத்திருந்த கொலை வாளைப் பார்த்தாள். கொல்லன் உலைக்களத்தில் ஜொலிக்கும் தீயினாலேயே செய்த வாளைப் போல் அது மின்னிட்டுத் திகழ்ந்தது. அந்தத் தீயினால் மெத்தையும் கட்டிலும் திரைச் சீலைகளும் எரிந்து போகவில்லை என்பது ஆச்சரியத்துக்கிடமாயிருந்தது. இதை நினைத்துப் பார்த்துத்தான் அது செந்தழலினால் செய்த வாள் அல்லவென்றும், இரும்பினால் செய்த வாள்தான் என்றும் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது.

நந்தினி அந்த வாளைக் கையில் எடுத்தாள்; தூக்கிப் பிடித்தாள். தீபத்தின் ஒளியில் அதை இன்னும் நன்றாக மின்னிடும்படி செய்து பார்த்து உவந்தாள். பிறகு, அதைத் தன் மார்புடன் அணைத்துக் கொண்டாள். கன்னத்தோடு சேர்த்து வைத்துக் கொண்டு



முத்தமிட்டான். அந்த வாளுடன் உரையாடவும் செய்தாள். ''தெய்வ வாளே! நீ உன்னுடைய வேலையைச் செய்ய வேண்டிய வேளை நெருங்கி விட்டது! என்னைக் கைவிட மாட்டாயல்லவா? இல்லை. இல்லை! நீ என்னைக் கைவிட மாட்டாய்! என்னுடைய கைகளேதான் என்னைக் கைவிட்டால் விடும்!'' என்று கூறினாள்.

பிறகு, தன் கரங்களைப் பார்த்து, "கரங்களே! நீங்கள் உறுதியாக இருப்பீர்களா? சீச்சீ! இப்போதே இப்படி நடுங்குகிறீர்களே? சமயம் வரும்போது என்ன செய்வீர்கள்? ஆம், ஆம்! உங்களை நம்புவதில் பயனில்லை. வேறு இரண்டு கரங்களைத்தான் இன்றைக்கு நான் சம்பாதித்துக் கொள்ள வேண்டும்!" என்றாள்.

திடீரென்று நந்தினியின் உடம்பு முழுவதும் ஒரு தடவை சிலிர்த்தது. வெறிக் கனல் பாய்ந்த கண்களினால் மேல் நோக்காகப் பார்த்தாள். "ஆகா! நீ வந்து விட்டாயா? வா! வா! சரியான சமயத்திலேதான் வந்தாய்! என் அன்பே! என் அரசே! வா! வீரபாண்டியன் தலையே! ஏன் கூரை ஓரத்திலேயே இருக்கிறாய்? இறங்கி வா! இங்கே யாரும் இல்லை! உன் அடியாளைத் தவிர வேறு யாரும் இல்லை. ஏன் இப்படி விழித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறாய்? வாயைத் திறந்து ஒரு வார்த்தை சொல்! 'இந்தக் கண்டத்துக்குத் தப்பி உயிர் பிழைத்தால் உன்னைப் பாண்டிய சிங்காதனத்தில் ஏற்றி வைப்பேன்!' என்று சொன்னாயே! அதை நான் மறக்கவில்லை. உனக்கு நான் கொடுத்த வாக்குறுதியையும் மறக்கவில்லை. அதை நிறைவேற்றும் வேளை நெருங்கிவிட்டது. அதற்காக நான் எத்தனை காலம் பொறுமையாகக் காத்திருந்தேன்? என்னென்ன வேஷங்கள் போட்டேன்?—எல்லாம் நீ பார்த்துக் கொண்டுதான் இருந்தாய்! இப்போதும் பார்த்துக் கொண்டிரு! கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிரு. நீதான் கண் கொட்டுவதே கிடையாதே! நானும் கண்ணை மூடித் தூங்க முடியாமல் செய்து வருகிறாய்! இன்று இரவு உனக்குப் பழி வாங்கி விட்டேனானால், அப்புறமாவது என்னை விட்டுப் போவாய் அல்லவா? அப்புறமாவது என்னைத் தூங்க விடுவாய் அல்லவா? மாட்டாயா? பாண்டிய சிங்காதனத்தில் நான் ஏறி அமர்வதைப் பார்த்த பிறகுதான் போவாயா? என்னுடைய வாக்குறுதியை நான் நிறைவேற்றினால் உன்னுடைய வாக்குறுதியை நீ நிறைவேற்றுவதாகச் சொல்கிறாயா? இல்லை, இல்லை! எனக்குச் சிங்காதனமும் வேண்டாம், மணிமகுடமும் வேண்டாம். உன் மகன் என்று யாரோ ஒரு சிறுவனைக் கொண்டு வந்தார்கள். அவனைச் சிங்காதனத்தில் ஏற்றி மணிமகுடமும் சூட்டியாயிற்று. உனக்குப் பழிக்குப் பழி வாங்கி விட்டேனானால், அதைக் கொண்டு நீ திருப்தி அடைவாய்! பின்னராவது என்னை விட்டுச் செல்வாய்! போரில் இறந்தவர்கள் எல்லாரும் எந்த வீர சொர்க்கத்துக்குப் போகிறார்களோ, அந்த வீர சொர்க்கத்துக்கு நீயும் போவாய்! அங்கே என்னைப் போல் எத்தனையோ பெண்கள் இருப்பார்கள்! அவர்களில் ஒருத்தியை... என்ன? மாட்டேன் என்கிறாயா? கடவுளே! நானும் உன்னோடு வரவேண்டும் என்கிறாயா?... சரி, சரி! அதைப் பற்றிப் பிறகு பேசிக் கொள்வோம்! என் அன்பே! யாரோ வருகிறார்கள் போலிருக்கிறது. நீ மறைந்து விடு!.... நானும் இந்தப் பழி வாங்கும் வாளை மறைத்து வைக்கிறேன்...."

அச்சமயம் வாசற்படிக்கு அருகில் உண்மையாகவே காலடிச் சத்தம் கேட்டது. நந்தினி வாளைக் கட்டிலில் வைத்துக் கொண்டிருக்கும் போதே மணிமேகலை உள்ளே வந்தாள்.

சற்றுமுன் வெறி பிடித்துப் புலம்பிய நந்தினி ஒரு கண நேரத்தில் முற்றும் மாறுதல் அடைந்தவளாய், "நீதானா, மணிமேகலை? வா! வா!" என்றாள். அவள் குரலில் அமைதி நிலவியது.

"அக்கா! இது என்ன? எப்போதும் வாளும் கையுமாகவே இருக்கிறீர்களே?" என்றாள் மணிமேகலை.

"பின், என்ன செய்வது? ஆண் பிள்ளைகள் இவ்வளவு தூர்த்தர்களாயிருந்தால், நாம் வாளைத் துணை கொள்ள வேண்டியதுதானே?"

"தேவி! நான் ஒருத்தி துணை இருக்கிறேனே? என்னிடம் தங்களுக்கு நம்பிக்கை இல்லையா?"

"உன்னிடம் நம்பிக்கை இல்லாமலா என்னுடைய அந்தரங்கத்தையெல்லாம் உன்னிடம் சொன்னேன், மணிமேகலை! இந்த உலகிலேயே நான் நம்பிக்கை வைத்திருப்பவள் நீ ஒருத்திதான். ஆனாலும், உன் கூடப் பிறந்த சகோதரனுக்கு எதிராக உன்னால் ஒன்றும் செய்ய முடியாதல்லவா?"

"அக்கா! எனக்குக் கூடப் பிறந்த சகோதரன் இல்லை என்று முடிவு செய்து கொண்டு விட்டேன்...."

"ஏன் அவ்விதம் சொல்கிறாய்? எப்படியும் அவன் உன் சகோதரன்...."

"சகோதரனாவது? சகோதரியாவது? அந்த உறவெல்லாம் வெறும் பிரமை என்று தெரிந்து கொண்டேன். கந்தமாறன் என்னுடைய விருப்பத்துக்கு எதிராக, — தன்னுடைய சௌகரியத்துக்காக, — என்னை வற்புறுத்திக் கட்டிக் கொடுக்கப் பார்க்கிறான்! உண்மையான சகோதர பாசம் இருந்தால், இப்படிச் செய்வானா?...."

''தங்காய் ! உன்னுடைய நன்மைக்காகவே அவன் உன்னை இளவரசருக்கு மணம் செய்து கொடுக்க விரும்பலாம் அல்லவா ?''

'' ஆமாம் ; என்னுடைய நன்மை தீமையை இவன் கண்டுவிட்டானாக்கும்! உண்மையில், என்னுடைய நன்மையை அவன் கருதவேயில்லை, அக்கா!''

''ஈழம் முதல் வட பெண்ணை வரையில் பரந்த சோழ ராஜ்யத்தின் சிங்காதனத்தில் நீ பட்டமகிஷியாக வீற்றிருக்க வேண்டும் என்று உன் தமையன் விரும்புவது உன்னுடைய நன்மைக்கு அல்லவா?''

''இல்லவே இல்லை! நான் தஞ்சாவூர் ராணியானால், இவன் முதன்மந்திரியாகலாம்; அல்லது பெரிய பழுவேட்டரையரைப் போல் தனாதிகாரியாகலாம் என்ற ஆசைதான் காரணம் ! அக்கா! அக்கா...!'' என்று மணிமேகலை மேலே சொல்லத் தயங்கினாள்.

''சொல், மணிமேகலை! உன் மனத்தில் உள்ளது எதுவானாலும் தாராளமாய்ச் சொல்லலாம். என்னிடம் உனக்குள்ள அன்பைக் குறித்து நீ சொன்னதெல்லாம் உண்மைதானே ?''

''அக்கா! அதைப் பற்றிச் சந்தேகிக்க வேண்டாம். இந்த உலகத்திலேயே நான் அன்பு வைத்திருப்பது இரண்டு பேரிடந்தான். ஒருவர் தாங்கள்....''

'' இன்னொருவர் யார் ?''

''உங்கள் மனத்துக்கு அது தெரியும். என்னை ஏன் கேட்கிறீர்கள்....?''

''தங்காய்! உனக்கு அது சந்தோஷமாய் இருக்கும் என்று நினைத்தேன். கதைகளும் காவியங்களும் நீ கேட்டதில்லையா? ஒரு பெண்ணின் உள்ளத்தில் காதல் உதயமானால் அதைப் பற்றி அவள் யாரிடமாவது பேச விரும்புவது இயல்பு அல்லவா? அந்தரங்கத் தோழி என்பது பின் எதற்காக....?''

''அது உண்மைதான், அக்கா! என் அந்தரங்கத்தையும் தங்களிடம் தெரியப்படுத்தி யிருக்கிறேன். ஆனால் இப்போது நான் தங்களிடம் அவசரமாக வந்தது வேறு ஒரு செய்தி சொல்வதற்காக. மிக்க கவலை தரும் செய்தி, அக்கா !''

நந்தினி திடுக்கிட்டு, ''என்ன? என்ன?'' என்று கேட்டாள். எத்தனையோ காலமாகத் திட்டமிட்டுக் கொண்டிருந்து இன்று நிறைவேற்றலாம் என்று எண்ணியிருந்த காரியத்துக்கு ஏதாவது தடங்கல் ஏற்படுமோ என்ற பீதி அவள் மனத்தில் குடிகொண்டது. அதன் அறிகுறி அவள் முகத்திலும் தோன்றியது.

''அக்கா! தனாதிகாரி பழுவேட்டரையர் இன்னும் தஞ்சாவூருக்குப் போய்ச் சேரவில்லையாம். வழியில்....''

'' வழியில் என்ன நேர்ந்தது ? ஒரு வேளை மனத்தை மாற்றிக் கொண்டு திரும்பி விட்டாரா ?'' என்று நந்தினி கேட்ட கேள்வியில் பீதி குறைந்திருக்கவில்லை.

'' அப்படி அவர் திரும்பியிருந்தால் நன்றாயிருக்கும், அக்கா ! அன்றைக்கு நாம் ஏரித் தீவில் இருந்தபோது புயல் அடித்ததல்லவா ? அந்தப் புயல் கொள்ளிடத்திலும் அப்பாலும் ரொம்பக் கடுமையாக அடித்ததாம். பழுவேட்டரையர் கொள்ளிடத்தில் படகில் சென்ற போது புயல் பலமாக இருந்ததாம்......''

''அப்புறம்?'' என்று நந்தினி பரபரப்புடனேதான் கேட்டாள். ஆயினும் கவலைத்தொனி சிறிது குறைந்திருந்தது.

''அக்கரை சேரும் சமயத்தில் படகு கவிழ்ந்து விட்டதாம் !''

'' ஐயோ !''

''தப்பிக் கரை ஏறியவர்கள் கொள்ளிடக் கரையில் எங்கும் தேடிப் பார்த்தார்கள். தங்கள் கணவர் மட்டும் அகப்படவில்லை!'' என்றாள் மணிமேகலை.

இந்தச் செய்தியைக் கேட்டதும் நந்தினி விம்மி அழுவாள் என்று மணிமேகலை எதிர்பார்த்து, அவளுக்கு ஆறுதல் சொல்லத் தயாராயிருந்தாள். ஆனால் நந்தினியோ அப்படியொன்றும் செய்யவில்லை. சிறிதும் படபடப்புக் காட்டாமல், அவநம்பிக்கை தொனித்த குரலில், ''இந்தச் செய்தி உனக்கு எப்படித் தெரிந்தது ?'' என்றாள்.

''பழுவேட்டரையரோடு போன ஆட்களில் ஒருவன் திரும்பி வந்திருக்கிறான். அவன் என் தமையனிடம் சொல்லிக் கொண்டிருந்தான். நானே என் காதினால் கேட்டேன், அக்கா ! தங்களிடம் இந்தச் செய்தியை எப்படித் தெரிவிப்பது என்று என் தமையன் தயங்கி, இளவரசரிடம் யோசனை கேட்டுக் கொண்டிருந்தான். நான் எப்படியாவது தங்களிடம் சொல்லி விடுவது என்று ஓடி வந்தேன்.....''

இவ்விதம் கூறிய மணிமேகலை துயரம் தாங்காமல் விம்மத் தொடங்கினாள்.

நந்தினி அவளைக் கட்டி அணைத்துக் கொண்டு, ''என் கண்ணே! என்னிடம் நீ எவ்வளவு அன்பு வைத்திருக்கிறாய் என்று தெரிந்து கொண்டேன். ஆனால், நீ வருத்தப்பட வேண்டாம்!'' என்றாள்.

மணிமேகலை சிறிது வியப்புடனேயே நந்தினியை நிமிர்ந்து பார்த்தாள். 'இவ

ளுடைய நெஞ்சு எவ்வளவு கல் நெஞ்சு?" என்று அவள் மனத்தில் தோன்றிய எண்ணத்தை நந்தினி தெரிந்து கொண்டாள்.

"தங்காய்! துக்கச் செய்தியைக் கூறி எனக்கு ஆறுதல் சொல்வதற்காக நீ ஓடி வந்தாய். ஆனால் உனக்கு நான் தேறுதல் கூற வேண்டியிருக்கிறது. நீ வருத்தப்பட வேண்டாம். என் கணவருடைய உயிருக்கு ஆபத்து ஒன்றும் வரவில்லை என்பது நிச்சயம். அப்படி ஏதாவது நேர்ந்திருந்தால் என் நெஞ்சே எனக்கு உணர்த்தியிருக்கும். அதனாலேதான் நான் கவலைப்படவில்லை. ஆனால் நீ கேள்விப்பட்டதை இன்னும் விவரமாய்ச் சொல்! என் மனத்தில் வேறொரு சந்தேகம் உதித்திருக்கிறது...."

"என்ன சந்தேகம், அக்கா?"

"உன் தமையனும் அந்தப் பல்லவ பார்த்திபேந்திரனும் சேர்ந்து என் கணவருக்கு ஏதேனும் கெடுதல் செய்யத் திட்டமிட்டிருக்கிறார்களோ என்று எண்ணுகிறேன். அதற்கு, முன்ஜாக்கிரதையாக இம்மாதிரி ஒரு செய்தியை அவர்களே தயாரித்திருக்கலாமல்லவா?"

"எனக்கு விளங்கவில்லை, அக்கா! அவர்கள் ஏன் பழுவேட்டரையருக்குத் தீங்கு செய்ய வேண்டும்?"

"நீ பச்சைக் குழந்தையாகவே இருக்கிறாய், மணிமேகலை! உன் தமையனும் பார்த்திபேந்திரனும் என்மீது துர் எண்ணம் கொண்டிருக்கிறார்கள் என்று நான் சொல்லவில்லையா? அதற்காகத்தான் இந்த வாளை எப்போதும் அருகிலேயே வைத்துக் கொண்டிருக்கிறேன் என்றும் சொல்லவில்லையா?...."

"சொன்னீர்கள்! அதனால் கந்தமாறனை இனிமேல் என் தமையன் என்று சொல்ல வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டேன். அந்தப் பாதகனை என் உடன் பிறந்தவனாக நான் இனிக் கருத மாட்டேன். இருந்தாலும்.... அவர்கள் பழுவேட்டரையருக்கு ஏன் தீங்கு செய்ய வேண்டும்?"

"தங்காய்! இதுகூடவா நீ தெரிந்து கொள்ள முடியவில்லை? கிழவரைக் கலியாணம் செய்து கொண்டு தனிக்கும் நான், அவர் போய்விட்டால் மனத்துக்குள் சந்தோஷப்படுவேன், பிறகு அவர்களுடைய துர்நோக்கத்துக்கும் இணங்குவேன் என்றுதான். உன் தமையன் இப்படிப்பட்டவன் என்று தெரிந்திருந்தால் அவனை என் வீட்டில் வைத்திருந்து சகோதரனைப் போல் கருதிப் பணிவிடை செய்திருக்க மாட்டேன். யமலோகத்தின் வாசல் வரை சென்றவனைக் காப்பாற்றியிருக்க மாட்டேன்...."

"அக்கா! இனி நான் தங்களை விட்டு ஒரு கணமும் பிரிய மாட்டேன். அந்த இருவரில் ஒருவர் இங்கு வந்தால், என்னுடைய கையாலேயே அவர்களைக் கொன்று விடுவேன்!"

"மணிமேகலை! அந்தக் கவலை உனக்கு வேண்டாம். என்னை நானே காப்பாற்றிக் கொள்வேன். கந்தமாறனும் பார்த்திபேந்திரனும் என் அருகில் நெருங்கினால், என்றும் மறக்காதபடி அவர்களுக்குப் புத்தி கற்பித்து அனுப்புவேன். அவர்களிடம் எனக்குச் சிறிதும் பயமில்லை. முரட்டு இளவரசரைப் பற்றி மட்டுந்தான் கொஞ்சம் பயம் இருந்தது. நல்ல வேளையாக அந்த அபாயத்திலிருந்து என்னை நீயே காப்பாற்றி விட்டாய்!"

"நான் தங்களைக் காப்பாற்றினேனா? அது எப்படி?"

"இளவரசரின் உள்ளத்தை நீ கவர்ந்துவிட்டாய் என்பதை அறியவில்லையா, மணிமேகலை! வாணர் குலத்து வீரரைக் கையைப் பிடித்து இழுத்து அப்பால் தள்ளிவிட்டு உன்னை அவர் ஏரித் தண்ணீரிலிருந்து எடுத்துக் காப்பாற்றியதன் காரணம் என்ன? அதற்குப் பிறகும் அவரை நான் கவனித்துக் கொண்டுதான் வருகிறேன். உன் மனத்துக்கு அது தெரியவில்லையா, மணிமேகலை?"

"தெரியாமல் என்ன? தெரிந்துதானிருக்கிறது. இளவரசரை நினைத்தாலே எனக்குப் பயமாயிருக்கிறது. அவர் அருகில் வந்தால் என் உடம்பு நடுங்குகிறது. என் தமையன் என்று சொல்லிக் கொள்ளும் கிராதகன் இருக்கிறான் அல்லவா? அவன் வேறு ஓயாமல் என் பிராணனை வாங்கிக் கொண்டிருக்கிறான்..."

"இளவரசரை நீ மணந்துகொள்ள வேண்டும் என்றுதானே?"

"ஆம்; தனியாக என்னை ஒரு கணம் பார்த்தால் போதும்! உடனே எனக்கு அவன் உபதேசம் செய்ய ஆரம்பித்து விடுகிறான். அவனுடைய தொந்தரவுக்காகவே......"

"அவனுடைய தொந்தரவுக்காக இளவரசரை மணந்து கொண்டு விடலாம் என்று முடிவு செய்துவிட்டாயா?"

"தாங்கள்கூட இவ்விதம் சொல்லுகிறீர்களே?" என்று மணிமேகலை விம்மி அழத் தொடங்கினாள். அவளுடைய கண்களில் கண்ணீர் அருவி பெருகிற்று.

நந்தினி அவளைச் சமாதானப்படுத்தினாள். "ஏதோ விளையாட்டுக்காகச் சொன்னேன். அதற்காக இப்படி அழ ஆரம்பித்து விட்டாயே?" என்று சொல்லிக் கண்ணீரைத் துடைத்தாள்.

மணிமேகலை சிறிது சமாதானம் அடைந்ததும், ''என் கண்ணே! உன் மனத்தை நன்றாகச் சோதித்துப் பார்த்துப் பதில் சொல். உண்மையாகவே, நீ இளவரசர் கரிகாலரை விரும்ப வில்லையா? அவரை மணந்து கொண்டு சோழ சாம்ராஜ்யத்தின் பட்டமகிஷியாக இருக்க ஆசைப்பட வில்லையா?'' என்றாள் நந்தினி.

''ஒரு தடவை கேட்டாலும் நூறு தடவை கேட்டாலும் என் பதில் ஒன்று தான், அக்கா! அந்த ஆசை எனக்குக் கிடையவே கிடையாது.''

''வாணர்குலத்து வந்தியத்தேவரிடம் உன் மனத்தைப் பறிகொடுத்திருக்கிறாய் என்பதும் உண்மைதானே ?''

''ஆம், அக்கா! ஆனால் அவருடைய மனம் எப்படியிருக்கிறதோ ?''

''அவருடைய மனம் எப்படியிருந்தால் என்ன? அவர் உயிரோடிருந்தால் அல்லவா அவர் மனத்தைப் பற்றிக் கேட்க வேண்டும் ?''

மணிமேகலை திடுக்கிட்டு, ''என்ன சொல்கிறீர்கள், அக்கா!'' என்றாள்.

''மணிமேகலை! நீ இன்னும் உண்மையைத் தெரிந்து கொள்ளவில்லை. உன்னுடைய நிலைமையையும் உன் அன்புக்குரியவனுடைய நிலைமையையும் உணரவில்லை. என்னைப் பற்றி நீ கவலைப்படுகிறாய்; என் கணவரைப் பற்றிக் கவலைப்படுகிறாய். எங்களைப் பற்றி உண்மையில் நீ கவலைப்பட வேண்டியதேயில்லை. என் கணவர் எப்பேர்ப்பட்டவர் என்பது உனக்குத் தெரியும். அவர் வாயசைத்தால் இந்த நாடே அசையும். சுந்தர சோழ சக்கரவர்த்தி அவர் இட்ட கோட்டைத் தாண்ட மாட்டார். என் கணவர் வார்த்தைக்கு மாறாக முதன் மந்திரி வார்த்தையையும் கேட்க மாட்டார். அவருடைய சொந்தப் பெண்டு பிள்ளைகளின் பேச்சுக்கும் செவி கொடுக்கமாட்டார். பழுவேட்டரையரை வயதாகி கிழவர் என்று உன் தமையனைப்போன்ற மூடர்கள் எண்ணிப் பரிகாசமும் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர் ஒரு மூச்சுவிட்டால், உன் தமையனையும் பார்த்திபேந்திரனையும் போன்ற நூறு வாலிபர்கள் பல்லாந்து விழுவார்கள். ஆகையால் பழுவேட்டரையருக்கு யாரும் தீங்கு செய்துவிட முடியாது. என் கண்ணே! என்னைக் காப்பாற்றிக் கொள்ளவும் எனக்குத் தெரியும். இதைக் காட்டிலும் எத்தனையோ இக்கட்டான நிலைமைகளில் என்னை நான் காப்பாற்றிக் கொண்டிருக்கிறேன். உண்மையாகவே இப்போது நான் கவலைப்படுவதெல்லாம் உன்னைப் பற்றித்



கேரளத்தில் கனி காணுதல் சித்திரை வருஷம் பிறப்பன்று நடக்கும் விநோத சம்பிரதாயம். முந்தின நாள் இரவே ஒவ்வொரு மலையாளி வீட்டிலும் உள்ள வயதான அம்மாள் ஒரு தட்டில் அரிசி, பழம், மாங்காய், தேங்காய், அப்பம், வேஷ்டி, நாணயங்கள் புதிய பலாக்காய், கொன்றைப் பூ ஆகியவற்றை அடுக்கி, இரண்டு குத்து விளக்குகளும் அலங்கரித்து வைப்பாள். காலை மூன்றரை நான்கு மணிக்கே அந்த மூதாட்டி எழுந்திருந்து குத்துவிளக்கை ஏற்றிக் கனி காணுவதோடு வீட்டிலுள்ள எல்லோரையும் எழுப்புவாள். அனைவரும் கண்களை மூடிக் கொண்டே வந்து முதலில் கார் விடும் குத்து விளக்குகளையும் கனிகளையும் காண்பார்கள். கனி கண்ட பிறகு குழந்தைகள் தீபாவளி மாதிரி பட்டாசுகள் சுடுவார்கள். குடும்பத் தலைவன் குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும் ஒரு நாணயத்தைக் 'கைநீட்டமாக' (வெகுமதி) கொடுப்பான். அன்று வீட்டுக்கு வரும் ஒவ்வொருவருக்கும் 'கைநீட்டம்' கொடுப்பது சம்பிரதாயம். நிலத்தில் உழைக்கும் பாட்டாளிகள் தங்கள் நிலச் சொந்தக்காரரின் இல்லத்துக்கு அன்று வெள்ளரிக்காய், சேனைக்கிழங்கு போன்ற கறிகாய்களைக் கொணர்ந்து தருவார்கள். நிலச் சொந்தக்காரர் அவர்களுக்குக் கைநீட்டமும் புதுத் துணிகளும் தருவார். - பி. எஸ். எம்.

விவரித்தவர்: பு. எம். ஆர். பணிக்கர்

தான். 'இந்தப் பெண் நம்மிடம் இவ்வளவு அன்பு வைத்திருக்கிறாளே? இவளுக்கு ஒன்றும் நேராமலிருக்க வேண்டுமே ?' என்று கவலைப்படுகிறேன். நீ இந்த அறைக்குள் சற்று முன் வந்த போதுகூட உன்னைப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருந்தேன்...''

''தாங்கள் சொல்வது ஒன்றும் புரியவில்லை, அக்கா ! எனக்கு அப்படி என்ன அபாயம் வந்து விடும்?''

''பேதைப் பெண்ணே! வேண்டாத புருஷனுக்கு வாழ்க்கைப்படுவதைக் காட்டிலும் பெண்களுக்கு நேரக்கூடிய அபாயம் வேறு என்ன இருக்கமுடியும்?''

''அது ஒருநாளும் நடவாத காரியம்.''

''உன் தமையன் உன்னை இளவரசருக்கு மணம் செய்விப்பது என்று தீர்மானம் செய்து விட்டான்; உன் தந்தையும் சம்மதித்து விட்டார்.''

''அவர்களுடைய தீர்மானமும் சம்மதமும் என்னை என்ன செய்யும் ? நான் சம்மதித்தால்தானே ?''

''இப்படிக் குழந்தைபோல் பேசுகிறாயே ? சிற்றரசர் குலத்துப் பெண்

கனைக் கலியாணம் செய்து கொடுப்பது. அந்தப் பெண்களின் சம்மதத்தைக் கேட்டுக் கொண்டுதான் உலகத்தில் நடைபெறுகிறதா? அதிலும், மூவுலகையும் ஆளும் சக்கரவர்த்தியின் மூத்த குமாரர், — பட்டத்து இளவரசர், — உன்னை மணந்துகொள்ள விரும்பினால், அதற்கு யார் தடை சொல்ல முடியும்?''

''ஏன்? என்னால் முடியும். இளவரசரிடம் நேரே சொல்லி விடுவேன்.''

''என்ன சொல்லுவாய் ?''

''அவரை மணந்துகொள்ள எனக்கு இஷ்டம் இல்லை என்று சொல்வேன்...''

'' காரணம் கேட்டால் ?''

''உண்மையான காரணத்தைத்தான் சொல்வேன். என் மனம் அவருடைய சிநேகிதர் வல்லவரையரிடம் ஈடுபட்டு விட்டது என்று சொல்வேன்.....''

'' பேதைப் பெண்ணே ! இதை நீ சொல்லவே வேண்டாம். அவர்களுக்கு ஏற்கனவே தெரிந்திருக்கிறது.''

''தெரிந்திருந்தால் என்னை ஏன் வற்புறுத்துகிறார்கள் ? அப்படி அதிகமாக வற்புறுத்தினால், இதோ நானும் ஒரு கத்தி வைத்திருக்கிறேன், அக்கா !'' என்று சொல்லி மணிமேகலை தன் இடுப்பில் செருகியிருந்த சிறிய கத்தி ஒன்றை எடுத்துக் காட்டினாள்.

''என் அருமைத் தங்கையே! உன் அறியாமையைக் கண்டு ஒரு பக்கம் எனக்கு அழுகை வருகிறது; இன்னொரு பக்கம் சிரிப்பும் வருகிறது.''

''அப்படி என்ன நான் உளறிவிட்டேன், அக்கா !''

''உன்னை யாரோ வற்புறுத்தப் போவதாக எண்ணியிருக்கிறாய். உன்னுடைய சம்மதத்தைக் கேட்பார்கள் என்றும் நினைத்திருக்கிறாய். அவ்விதம் ஒன்றும் அவர்கள் செய்யப் போவதில்லை. நீ இளவரசரை மணந்து கொள்ளத் தடையாக இருக்கும் காரணத்தை நீக்கி விடப் போகிறார்கள் !''

''என்ன சொல்லுகிறீர்கள், அக்கா?''

''நீ யாரிடம் உன் மனத்தைப் பறி கொடுத்திருக்கிறாயோ, அவருடைய உயிருக்கு அபாயம் நெருங்கி யிருக்கிறது என்று சொல்லுகிறேன்....''

''ஐயையோ !''

''உன் தமையன் ஏற்கனவே அவனுடைய பழைய சிநேகிதன் மீது துவேஷம் கொண்டிருக்கிறான். இந்த அரண்மனையில் சில மாதங்களுக்கு முன்னால் சிற்றரசர்கள் கூடிச் செய்த சதியாலோசனையைப் பற்றி இளவரசனிடம் சொல்லிக் கொடுத்து விட்டான் என்று அவனுக்குக் கோபம். தன் முதுகிலே குத்திக் கொல்ல முயன்றதாக வேறு குற்றம் சாட்டிக் கொண்டிருக்கிறான். வேறொரு காரணத்தினால் பார்த்திபேந்திரனுக்கும் உன் காதலன் பேரில் அளவில்லாத கோபம்....''

''இவர்களுடைய கோபம் அவரை என்ன செய்து விடும், அக்கா! அவர் சுத்த வீரர் அல்லவா ?''

'' சுத்த வீரராயிருந்தால் என்ன? திடீரென்று சூழ்ந்து கொள்ளும் பல கொலைகாரர்களுக்கு மத்தியில் கையில் ஆயுதம் ஒன்றும் இல்லாத ஒரு சுத்த வீரன் என்ன செய்ய முடியும்?....''

'' ஐயோ! அவரைக் கொன்று விடுவார்கள் என்று சொல்கிறீர்கள்?''

'' கொல்ல மாட்டார்கள் ; கண்ட துண்டமாக வெட்டி நரிகளுக்கும் நாய்களுக்கும் போட்டு விடுவார்கள்....''

''ஐயோ ! என்ன கர்ண கடூரம்?''

''கேட்பதற்கே உனக்குக் கர்ண கடூரமாக இருக்கிறதே? உண்மையில் நடந்து விட்டால், என்ன பாடுபடுவாய்?''

''அக்கா! இப்போதே என் உயிரும் உள்ளமும் துடிக்கின்றன. நிஜமாக, அப்படியும் செய்து விடுவார்களா? அவர் இளவரசருடைய அத்தியந்த சிநேகிதராயிற்றே ?''

''அத்தியந்த சிநேகிதர்கள் கொடிய பகைவர்களாக மாறுவதைப் பற்றி நீ கேட்டதில்லையா, தங்காய்! உன் தமையனும் பார்த்திபேந்திரனும் அப்படியெல்லாம் இளவரசரிடம் தூபம் போட்டு விட்டிருக்கிறார்கள்.....''

'' சண்டாளர்கள் ! இதெல்லாம் தங்களுக்கு......''

''எனக்கு எப்படித் தெரிந்தது என்று தானே கேட்கிறாய்? இன்று பகலில் பார்த்திபேந்திரன் என்னிடம் விடை பெற்றுச் செல்லும் வியாஜத்தை வைத்துக் கொண்டு வந்திருந்தான்....''

''அந்தப் பாதகன் எங்கே போகிறான்?''

''அதிக தூரம் போகவில்லை. திருக்கோவலூர்க் கிழவன் மலையமான் ஒரு பெரிய சைன்யத்தைத் திரட்டிக் கொண்டு இந்த ஊரை நோக்கி வந்து கொண்டிருக்கிறான் என்று நீ கேள்விப் பட்டாய் அல்லவா ?''

''கேள்விப்பட்டேன். அது என்னத்துக்காக என்று ஆச்சரியப்பட்டேன்.''

''அதுவும் உன் நிமித்தமாகத்தானாம்! இன்று மத்தியானம் இளவரசர் அதைப் பற்றிப் பிரஸ்தாபித்தாராம். 'மணிமேகலையை எனக்கு மணம் செய்து கொடுக்காவிட்டால், மலையமான் சைன்யம் வந்தவுடன் இந்தக் கோட்டை — அரண்மனை எல்லாவற்றையும் தகர்த்துத் தரை மட்டமாக்கிவிடப் போகி



ஒவ்வொருவரின்
மேனிக்கும்
பாதுகாப்பு தேவை
CINTHOL
வியர்வை துர்நாற்றத்-
திருந்தும், அதனால்
நுண்ணிய கிருமிகளிட
மிருந்தும் உங்களுக்கும்,
மற்றவர்களுக்கும் ஏற்படும்
சங்கடத்திலிருந்தும் பாது
காப் பளிக்கிறது.
ஜி-11 (ஹெக்ஸாக்ளோ-
ரோஃபீன்) கலந்த
சிந்தால் டாய்லெட் பவுடர்
இந்தப் பாதுகாப்பைத்
தருகிறது. அதோடு...
அன்றலர்ந்த மலரின்
நறுமணத்தையும் தருகிறது.
சிந்தால்—
துர்நாற்றத்தை அறவே
போக்கிப் பாதுகாப்பளிக்
கும் டாய்லெட் பவுடர்.
Interpub/GP/3 Tam

றேன்!' என்றாராம். அப்போதுதான் உன் தமையன் 'அதற்குத் தடையாயிருப்பது நாங்கள் அல்ல; உங்கள் சிநேகிதன் வந்தியத்தேவன்தான்' என்றானாம். 'அந்தத் தடையை நீக்க உங்களால் முடியாதா?' என்று இளவரசர் கேட்டாராம். 'கட்டளை அளித்தால் முடியும்' என்றானாம் உன் அண்ணன். என் அருமைச் சகோதரி! பார்த்திபேந்திரனிடம் மேலும் பேச்சுக் கொடுத்துச் சில விவரங்களை அறிந்தேன். உன் ஆருயிர்க் காதலனுடைய உயிருக்கு ஆபத்து நெருங்கி யிருப்பது நிச்சயம். நீ உடனே முயற்சி எடுக்காவிட்டால், கலியாணம் ஆவதற்கு முன்பே கணவனை இழந்து விடுவாய்!'' என்றாள் நந்தினி.

இதைக் கேட்ட மணிமேகலையின் உடலும் உள்ளமும் துடிதுடித்ததில் வியப்பு ஒன்றும் இல்லை அல்லவா ?

''ஐயோ! அவருக்கு எப்படியாவது உடனே எச்சரிக்கை செய்ய வேண்டுமே !'' என்று தட்டுத் தடுமாறிக் கொண்டே கூறினாள்.

'' எச்சரிக்கை செய்யலாம். ஆனால், உன் காதலன் சுத்த வீரன் என்று நீ தானே சற்றுமுன் கூறினாய் ? அவனுடைய உயிருக்கு அபாயம் என்று கேட்டுப் பயந்து ஓடி விடுவானா? மாட்டான்! 'இன்னும் அவனுடைய பிடிவாதம் அதிகமாகும்'' என்றாள் நந்தினி.

''தாங்கள்தான் யோசனை சொல்ல வேண்டும். என் தலை சுற்றுகிறது. என்ன செய்கிறது என்று தெரியவில்லை'' என்றாள் மணிமேகலை.

''நீ இங்கே வரும்போது அதைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தேன். எனக்கும் ஒன்றும் புரியவில்லை. நல்லவேளையாக நீ ஒரு செய்திகொண்டு வந்தாய். அதிலிருந்து வல்லவரையரைக் காப்பாற்ற ஒருயோசனை தோன்றியது.''

''நான் கொண்டு வந்த செய்தியிலிருந்தா ? அது என்ன செய்தி?''

'' பழுவேட்டரையருடைய படகு கவிழ்ந்ததென்றும் பிறகு அவரைப் பற்றித் தகவல் தெரியவில்லை என்றும் சொன்னாய் அல்லவா ?''

''ஆமாம்!''

''வந்தியத்தேவரிடம் நான் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். எனக்காக அவர் போய் என் கணவரைப் பற்றிய உண்மை தெரிந்து வரவேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன். நீயும் எனக்காகப் பரிந்து பேசு. இரண்டு பேதைப் பெண்களின் வேண்டுகோளை அந்த வீரர் புறக்கணிக்க மாட்டார். அவரை உடனே இந்த இடத்திலிருந்து வெளியே அனுப்புவதுதான் அவர் உயிரைக் காப்பாற்றும் வழி. வேறு உபாயம் ஒன்றுமில்லை. அவர் போனபிறகு நீ உன் தமையனிடமும் தந்தையிடமும் இளவரசரிடமும் தைரியமாக உன் மனத்தை வெளியிட்டுப் பேசலாம். நானும் உனக்காகப் பேசுகிறேன். 'இஷ்டமில்லாத பெண்ணை வற்புறுத்துவது சோழ குலத்தில் பிறந்தவர்களுக்கு அழகு அல்ல' என்று சொல்லுகிறேன்.''

'' தங்கள் பேச்சையும் அவர்கள் கேட்காவிட்டால், என் கையில் கத்தி இருக்கிறது!''

''சரி, சரி! இப்போது முதலில் உன் காதலரை வெளியேற்றிக் காப்பாற்ற முயல்வோம். அவர் இருக்குமிடம் உனக்குத் தெரியும் அல்லவா? நீ நேரில் அவரைப் பார்க்க முடியா விட்டால், உன் தோழி சந்திரமதியை அனுப்பு. இல்லாவிடில், இடும்பன்காரியை அனுப்பு. எப்படியாவது அவரை இங்கே அழைத்துக் கொண்டு வா!''

'' அவர் போகச் சம்மதித்தாலும் இங்கேயிருந்து எப்படி வெளியில் போவார், அக்கா ? என் அண்ணன் தடுத்து நிறுத்தி விட்டால்....?''

''உன் அண்ணனுக்கு ஏன் தெரிய வேண்டும், மணிமேகலை! முதன் முதலில் அவர் இந்த அறைக்குள் வந்து உன்னைத் திடுக்கிடச் செய்தாரே? அந்தச் சுரங்க வழியிலேயே அனுப்பி விட்டால் போகிறது! சீக்கிரம் போ, தங்காய்! வந்தியத்தேவர் இனி இந்தக் கோட்டையில் இருக்கும் ஒவ்வொரு நிமிடமும் அவருடைய உயிருக்கு அபாயம் அதிகமாகும். உன் தமையன் ஏவும் கொலைகாரர்கள் எப்போது அவரைத் தாக்குவார்கள் என்று நமக்கு என்ன தெரியும்?''

''இதோ போகிறேன், அக்கா! எப்படியாவது அவரை அழைத்துக்கொண்டுதான் திரும்பி வருவேன்'' என்று சொல்லிவிட்டு மணிமேகலை சென்றாள்.

அவளுடைய காலடிச் சத்தம் மறைந்ததும், பக்கத்திலிருந்த வேட்டை மண்டபத்தின் இரகசியக் கதவை யாரோ தட்டுவது போன்ற சத்தம் கேட்டது.

நந்தினி இரகசியக் கதவின் அருகில் சென்று, அதன் உட்கதவைத் திறந்தாள். இருட்டில் ஒரு கோரமான முகம் இலேசாகத் தெரிந்தது.

''மந்திரவாதி ! வந்து விட்டாயா?'' என்றாள் நந்தினி.


''வந்துவிட்டேன், ராணி! வேளையும் வந்துவிட்டது!'' என்றான் ரவிதாஸன்.

(தொடரும்)

சுட்ட புண்கள்! வெட்டுக் காயங்கள்!
விரைவில் இட்டுப் பாருங்கள் பர்னால்

குளுமையுடன் இதமளிக்கும் நிவாரணி









பர்னால் 40 ஆண்டுகளுக்கும் மேலாக கணக்கற்ற இல்லங்களில் காயமாற்றிவரும் நம்பகமான நிவாரணி



பூட்ஸ் ப்யூர் டிரக் கம்பெனி (இந்தியா) லிட்.

ASP/8/8-15 TM

பாதுகாப்பிற்கு
ஒரு பூட்டு உள்ள
தெனில் அது
நவ-தால் ஒன்றே
ஒன்றுதான் !




நவ-தால்


நம்பிக்கையானது. அதனால் தான் பாங்குகளும் தொழிற் சாலைகளும், இடங்குகளும் நவ-தால் பூட்டையே உபயோகிக்கின்றனர். அதிநுட்பமான தயாரிப்பு! ஒவ்வொரு பூட்டுக்கும் மாறுபட்ட இணைப்புமுறையில் வெட்டப் பட்ட சாவிகள். உடைத்து திறக்க இயலாதபடி அதிக பாதுகாப்பு அளிப்பதற் கேற்ற முறையில் செய்யப் பட்டது நவ-தால். பித்தளை, எஃகிலுலான இரட்டைக்கூடு அதை மிகமிக உறுதியாக்குகிறது. தயாரிப்பவர்கள்: கோத்ரெஜ்-பாதுகாப்பு உபகரணங்களைத் தயாரிப்பதில் 70 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமுடையவர்கள்.

4 அளவுகள் :
40 mm (5 லீவர்கள்)
50 mm (6 லீவர்கள்)
67 mm (7 லீவர்கள்)
85 mm (8 லீவர்கள்)

Godrej கோத்ரெஜ் எப்போதும் நக்ஷத்ரம் மார்க் பூட்டுகளையே கேட்டு வாங்குங்கள்







கவிதை பிறந்த கதை

குழந்தை எழுத்தாளர் சங்கம் நிறுவப் பெற்ற 1950ம் ஆண்டிலும், சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் குழந்தைப் புத்தகக் காட்சி நடத்த ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. தமிழ் நாட்டில் முதல் முதலாக நடந்த குழந்தைப் புத்தகக் காட்சி அதுதான். விழாவுக்கான அழைப்பிதழை எழுதி அச்சிடக் கொடுத்திருந்தார் சங்கத் தலைவர் திரு அழ. வள்ளியப்பா.

ஒரு விகடக் கச்சேரி குழந்தைகளை மகிழ்விக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அழைப்பிதழின் கடைசிப் பக்கத்தில் கட்டம் கட்டி மேற்படி நிகழ்ச்சி பற்றிய அறிவிப்பை அச்சிடும்படி கூறியிருந்தார் வள்ளியப்பா. ஆனால் அழைப்பிதழ் அச்சாவதற்கு அரை மணி நேரம் முன்பாக, விகடக் கச்சேரி செய்வதாய் ஒப்புக்கொண்டிருந்தவர் டெலிபோன் செய்து, எதிர்பாராத காரணங்களால் தாம் அன்று விகடம் செய்ய முடியாது என்று கூறிவிட்டார். உடனே அச்சகத்துக்கு ஓடினார். கடைசிப் பக்கத்தில் உள்ள விஷயத்தை அகற்றிவிட்டு அச்சிடுமாறு அச்சகத்தாரைக் கேட்டுக் கொண்டார். அப்போது அந்த அச்சக ஃபோர்மேன் கன்னியப்பன், ''கடைசிப் பக்கத்தைக் காலியாகவிட வேண்டாம், சார். இந்தக் கட்டம் இப்படியே இருக்கட்டும். நீங்கள் ஒரு பாட்டு எழுதிக் கொடுங்கள். கட்டத்துக்குள் அச்சிட்டு விடலாம்'' என்றார்.

உடனே வள்ளியப்பா ஒரு துண்டுக் காகிதத்தில்,

''ஏடு தூக்கிப் பள்ளியில்
இன்று பயிலும் சிறுவனே
நாடு காக்கும் தலைவனும்
நானே விளங்கப் போகிறேன்''

என்று எழுதிக் கொடுத்தார். விழாவுக்கு வாழ்த்து அனுப்பிய பலர் இந்த வரிகளைக் குறிப்பிட்டு எழுதியிருந்தார்கள். கவிதை பிறக்கக் காரணமாக இருந்த கன்னியப்பனைக் கவிஞர் மறக்கவேயில்லை!

முன்பெல்லாம் இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பௌர்ணமி சமயம் கடற்கரைக்குக் குழந்தைகளுடன் சென்று, நிலாச் சாப்பாடு சாப்பிடுவது கவிஞருக்கு வழக்கம்.

ஒரு நாள் நிலாச் சாப்பாடு சாப்பிடுவதற்கு முன்பு குழந்தைகள் வழக்கம்போல் மணல் வீடு கட்டிக் கொண்டிருந்தார்கள். அப்போது கவிஞரின் மகன் அழகப்பன், ''அப்பா, நாங்கள் கட்டுகிற இந்த வீட்டைப் பாருங்கள். இதற்குச் செங்கல் வேண்டாம், சிமெண்ட் வேண்டாம்'' என்றான். உடனே அவர் மகள் அலமு, ''ஆமாப்பா, இதற்குக் கொத்தரும் வேண்டாம், தச்சரும் வேண்டாம்'' என்றாள்.

பழைய நாடோடிப் பாடல் ஒன்று. கவிஞருக்கு மிகவும் பிடித்திருந்தது.

''ஆக்கவேண்டாம் அரைக்கவேண்டாம்
அம்மணிப் பொண்ணே - நீ
அருகிருந்தால் போதுமடி
அம்மணிப் பொண்ணே!''

என்று தொடங்குகிறது அந்தப் பாடல். அதையொட்டிப் புதிய பாடல் ஒன்றைப் பாட முனைந்தார் குழந்தைக் கவிஞர்.

''செங்கல் வேண்டாம் சிமெண்டும் வேண்டாம்
செலவும் வேண்டாம் தம்பி - வெகு
சீக்கிரமாக் கட்டிடலாம்
சிறந்த வீடு தம்பி''

என்று தொடங்கும் அந்தப் பாடல், அந்த வீட்டின் சிறப்பை விளக்குகிறது.

மழைக் காலத்தில் ஒரு நாள் இரவு வீட்டின் முன் அறையில் உட்கார்ந்து கொண்டு கவிஞர் பேசிக் கொண்டிருந்தார். அப்போது எப்படியோ ஒரு தவளை வீட்டுக்குள்ளே வந்து விட்டது. கவிஞருடன் இருந்த சிறுவன் ராமு, ''தவளையார்! அதோ தவளையார் வருகிறார்!'' என்றான். ''எங்கே? எங்கே?'' என்று எல்லோரும் கேட்டனர். ''அதோ, தத்தித் தத்தி ஓடி வருகிறார்'' என்று சுட்டிக் காட்டினான் ராமு. உடனே கவிஞர்,

''தத்தித் தத்தி ஓடிவரும் தவளையாரே - கொஞ்சம்
தயவுசெய்து நின்றிடுவீர் தவளையாரே!''

என்று வேடிக்கையாகப் பாடினார். உடனே ராமுவும் மற்றக் குழந்தைகளும் தவளையின் எதிரில் போய் நின்றுகொண்டு, கவிஞர் சொன்ன வரிகளைக் குஷியாகக் குதித்துக் கொண்டே பாடினார்கள். ஆனால் அந்தத் தவளையார் தயவு செய்யவுமில்லை; நிற்கவுமில்லை. மேலும் மேலும் தாவிக்கொண்டே இருந்தார்! பாடல் வளர்ந்தது.

''குழந்தைகள் மத்தியிலே பிறப்பெடுத்த அந்தப் பாடலை அன்றிரவே குழந்தைகளை வைத்துக் கொண்டே பூர்த்தி செய்தேன்'' என்கிறார் குழந்தைக் கவிஞர். பேட்டி: பி.வி.கி

சுழிக்காற்று



அத்தியாயம் எட்டு

முதலாளி என்று ராமு குறிப்பிட்டது தருமலிங்கத்தையா கந்தசாமியையா என்பதைப் பற்றிய விவாதத்துக்கு இடமே கிடையாது. ஏனென்றால் இரண்டு பேருமே நோயாளிகளாகிப் படுக்கையில் கிடந்தனர். இருந்தாலும் மஞ்சுளாவின் தந்தை கந்தசாமியைக் கவனிப்பதற்காகத்தான் நிர்மலா நியமிக்கப்பட்டிருந்தாள். அவரது அறையில் இருக்க வேண்டியவள் நிர்மலா. ஆகவே ராமு குறிப்பிட்டுக் கேட்டது கந்தசாமியைப் பற்றித்தான் இருக்க வேண்டும். ஆனால் நிர்மலாவோ அதை இப்படி நிச்சயமாகச் சொல்லும் மன நிலையில் இல்லை. நீண்ட நேர மௌனத்துக்குப் பிறகு தொடர்ந்து கூறினாள் நிர்மலா :

''ராமுவின் கேள்வி என்னைத் திகைக்க வைத்தது. கெட்டதொரு கனவில் பயப் பிராந்தி ஏற்பட்டால் எப்படி ஒன்றும் செய்ய முடியாமல் தவிப்போமோ அப்படிப்பட்ட நிலையில் இருந்தேன் நான். என்னால் என் உடலில் ஓர் அங்கத்தையும் அசைக்க முடியவில்லை. என்னுடைய அந்த நிலையைக் கண்ட ராமு மறுபடியும் பரபரப்புடன் அங்கிருந்து வெளியேறுவதை உணர்ந்தேன். அதன் பிறகு எனக்கு ஒன்றுமே தெரியவில்லை. எல்லாம் ஒரே இருளாகத் தோன்றியது'' என்று நிர்மலா சொல்லிக் கொண்டு போனாள். ஏதோ ஒரு வெறிதான் அப்படி அவளைப் பேச வைத்துக் கொண்டிருந்தது. நடந்தது முழுவதையும் யாரிடமாவது சொன்னால்தான் தாபம் தீரும் என்ற ஒரு நிலையிலிருந்தாள் அவள் அப்போது.

''மறுபடியும் எனக்கு நினைவு வந்த போது நன்றாக விடிந்திருந்தது. காலைக் கதிரவன் சோபையுடன் பிரகாசித்துக் கொண்டிருந்தான். நான் இதையெல்லாம் ராமுவைப் பற்றிய குற்றச்சாட்டைப் புலன் விசாரித்துக் கொண்டிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் ஏகாம்பரத்திடம் கூறினேன். ஆனால் அவர் இவையெல்லாம் ராமு அன்றிரவு இங்கு வந்தான் என்பதை நிரூபிப்பதற்குப் போதுமான ஆதாரங்களாகாது என்று கூறிவிட்டார். என் அறையில் தரையில் தேங்கியிருந்த தண்ணீ

ரைக் கூட அவர் நம்ப மறுத்து விட்டார்'' என்றுன் நிர்மலா. அவள் குரலில் சோகம் கப்பிக் கிடந்தது. அதற்குமேல் அவளால் பேச முடியவில்லை. குரல் கம்மிவிட்டது.

''உன் அறையில் தண்ணீர் தேங்கி யிருந்ததா, அது என்ன?...'' என்று கேட்டாள் மஞ்சுளா ஆவலுடன். தன் உணர்ச்சிகளை ஒருநிலைப் படுத்திக் கொண்டு நிர்மலா கூறினுள்: ''புயல் வீசிய அன்று மறுநாள் காலை, கட்டிலில் படுத்திருந்த நான் கண் விழித்ததும் ஆயாசத்துடன் படுக்கையிலிருந்து தரையில் காலை வைத்தேன். அப்போது ஜில் லென்று கீழே தேங்கியிருந்த தண்ணீரை என் பாதங்கள் ஸ்பரிசித்தன. மழையில் நனைந்து வந்த ஒருவர் சொட்டச் சொட்ட என் கட்டிலின் அருகே சிறிது நேரம் நின்றிருந்தால் எப்படி அங்கு நீர் தேங்கி யிருக்குமோ, அப்படித் தண்ணீர் தேங்கி நின்றிருந்தது அங்கு. உடனே முதல் நாள் இரவு மயங்கிய நிலையில் நான் கேட்ட குரல்கள் உணர்ந்த ஸ்பரிசங்கள் எல்லாம் புகைப் படலம் போல என் நினைவுக்கு வந்தன'' என்றுள் நிர்மலா.

''அப்படியானும் அது ராமுவேதான். அதில் சந்தேகமே இல்லை. அப்பாவின் உத்தரவுப்படி அவன் அங்கிருந்து கிளம்பி வந்திருக்கிறுன். வழியில் புயல் பலமாகி யிருக்கிறது. அப்படி இருந்தும் அவன் தன் பிரயாணத்தை நிறுத்த வில்லை. புயலில் சிக்கி நனைந்தபடியே நள்ளிரவில் இங்கு வந்து சேர்ந்திருக்க வேண்டும். வந்தவன் நேரே அப்பாவின் அறைக்குப் போய்விட்டு உன்னைப்



பார்க்க வந்திருக்க வேண்டும்'' என்று படபடத்தாள் மஞ்சுளா.

''ஆனால் இதை யாருமே நம்பத் தயாராக இல்லையே மஞ்சுளா. அன்று அவர் என்னை உலுக்கி எழுப்பியதும் எனக்கு விழிப்பு வந்திருக்குமானால் இந்த விபரீதங்கள் ஏதும் நடந்திருக்காதோ என்றுகூட நான் நினைக்க வேண்டியிருக்கிறது.''

''ஒரு வேளை அன்றிரவு உன்னை எழுப்பியது . என் சிற்றன்னையாக இருக்கலாமோ?'' என்றாள் யோசனையுடன், மஞ்சுளா.

''உன் சித்தியும் அதைத்தான் கூறுகிறாள். உன்னை வந்து இரண்டு முறை உலுப்பி எழுப்பியது நான்தான் என்று. ஆனால் எனக்கென்னவோ அந்த மழைத் தண்ணீர், கனவில் கேட்டது போன்ற அந்தக் குரல் எல்லாம் அது கட்டாயம் ராமுவேதான் என்று தோன்றுகிறது. நள்ளிரவில், புயல் உக்கிரமான கட்டத்தை அடைந்த போது உன் அப்பாவின் நிலை ரொம்ப மோசமாகி விட்டதாம். தன்னால் சமாளிக்க முடியாது என்று என்னை வந்து எழுப்பினாளாம். ஆனால் நான் எழுந்திருக்க வில்லை என்று சொல்லுகிறாள் உன் சித்தி. நான் எழுந்திருக்காத நிலையில் டாக்டர் ஈசுவரனுக்குப் போன் செய்தாளாம். ஆனால் அவரும் வரவில்லை. புயல் காரணமாக இருக்கலாம். ஆகவே, உன் சித்திக்கு டாக்டர் ஈசுவரன் மீது கடுங் கோபம் வந்து விட்டது. ஆபத்தான சமயத்துக்கு அவர் உதவி கிட்டாத போது தொடர்ந்து அவரது கவனிப்பே வேண்டாம் என்று தன் சகோதரன் டாக்டர் ரகுநாத்துக்குப் போன் செய்து வரவழைத்து நிலைமையைச் சீர்ப்படுத்தியதாகக் கூறுகிறாள். ஆனால் டாக்டர் ஈசுவரன் அன்று மாலை ஒரு சீரியஸ் கேஸ் விஷயமாகப் பக்கத்துக் கிராமத்துக்குப் போனவர் புயலில் அகப்பட்டுக் கொண்டு இரவு முழுதும் வீடு திரும்பாதது உன் சித்திக்குத் தெரிந்திருந்தால் மறு நாள் காலை அவர் வந்த போது அப்படி முகத்தில் அடித்தது போல் இனி அவருடைய சேவை தேவை இல்லை என்று கூறி இருக்கமாட்டாள். தெரிந்திருந்தும் அப்படிக் கூறினால் அதை அநாகரிகமென்றோ அகம்பாவம் என்றோதான் கூற வேண்டும்.''

அந்த அறையில் சேகர் இருப்பதையே மறந்தவர்களைப்போல் மஞ்சுளாவும், நிர்மலாவும் பேசிக் கொண்டிருந்தாலும் சேகர் அவர்களுடைய சம்பாஷணையைக் கவனிக்காமல் இல்லை. நிர்மலா கூறிய விஷயங்கள் அப்படியொன்றும் அலட்சியப்படுத்துபவையாக இல்லையே. உன்னிப்பாகக் கேட்டு வந்த அவன் கவனம் சட்டென்று திரும்பியது. எதையோ கண்டவன் போல் விருட்டென்று எழுந்தான். மஞ்சுளாவின் காதருகே குனிந்து, ''அப்படியே பேசிக் கொண்டிருங்கள். நான் வீட்டின் பின் பக்கம் வரை போய் வருகிறேன்'' என்று கிளம்பினான்.

கோபால் இன்னும் குளியலை முடித்துக் கொண்டு வரவில்லை. அவன் ஒரு நீர் யானை. இலேசில் குளித்து முடிக்க மாட்டான். யாராவது கட்டாயப்படுத்தினால்தான் அரை மனதோடு வெளிவருவான். இப்போதும் அப்படித்தான் அவன் பாத்ரூமில் பாடியபடி, உல்லாசமாக 'ஷவரின்' அடியில் நின்று கொண்டிருக்கும் காட்சி சேகரின் மனக் கண்ணில் தெரிந்தது. அப்படியானால் அது யார்? அவன் கேட்ட அந்தக் காலடி ஓசை யாருடையது? சிந்தனையோடு நடந்தான் சேகர்.

சேகர் ஓசையின்றி வீட்டின் பின் பக்கம் சென்றான்..... கோபால் குளிக்கும் சத்தம் கேட்டது, பாத்ரூமில். கொல்லைப்புறக் கதவைச் சத்தப்படுத்தாமல் திறந்தான். வெளியில் வந்தான். வெளியே இருள் கனத்துக் கிடந்தது. ஆனால் அந்த இருளிலும் அவன் கண்கள் ஏதோ அசைவைக் கவனித்தன. அவன் காதுகளுக்கே கேட்கக் கூடிய ஓர் ஓசை. அதையும் உன்னிப்பாகக் கிரகித்தது. கொல்லைப்புறமிருந்து அப்படியே வீட்டைச் சுற்றி வர வராந்தா இருந்தது. அதன் வழியே வாசல்புறத்துக்கு வரலாம். அப்படி வரும்போது நடு ஹாலில் மஞ்சுளாவும் நிர்மலாவும் உட்கார்ந்து உரையாடிக் கொண்டிருப்பது நன்றாகத் தெரிந்தது. ஜன்னலின் அருகே நின்று அந்நியனைப் போல அவர்களைக் கவனித்தபோது அவர்கள் பேசுவதும் அவனுக்கு ஸ்பஷ்டமாகக் கேட்டது. எதையும் குதறி ஆராயும் அவன் மூளை தீவிரமாகச் செயல்பட்டது. நிர்மலாவையும் மஞ்சுளாவையும் யாரோ கண்காணிக்கிறார்கள். யார் அது? யாருக்கு அத்தனை அக்கறை? உள்ளம் கேள்விக்குறிகளைப் போடக் கண்கள் இருளில் எதையோ தேடின.

சட்டென்று பாண்ட் பாக்கெட்டில் கையை விட்டுத் தன்னிடமிருந்த நெருப்புப் பெட்டியை எடுத்தான். ஒரு தீக்குச்சியைக் கிழித்துக் கீழே புல் தரையின் பக்கம் நீட்டினான். அவனது கூரிய கண்களிலிருந்து எதுவும் தப்பிவிட முடியாது. பசும் புல் மிதிபட்டு அமுங்கிய அடையாளங்கள் தெரிந்தன.

'யாரோ ஒரு மனிதன்......' என்று அவன் வாய் முணு முணுத்தது. 'யார் அந்த மனிதன்?' என்ற வினா உள்ளத்திலே எழுந்தது.

சேகர் மறுபடியும் வாசல் பக்கத்து வழியாக உள்ளே நுழைந்த போது நிர்மலாவின் விரல்கள் கலங்கிய அவளது கண்களையும் அடைபட்ட மூக்கையும் துடைத்துக் கொள்ளுவதற்காகப் பரபரத்துக் கொண்டிருந்தன. மறைந்த காதலனையும் இறந்த சகோதரனையும் பற்றிய நினைவுகளை மஞ்சுளா உசுப்பி விட்டிருக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டான் சேகர். தன் அருகிலிருந்த டம்பப் பையில் இருக்கும் கைக்குட்டையை அவள் எடுத்த போது அதனுடன் பத்து ரூபாய் நோட்டொன்றும் வெளிப்பட்டுக் கீழே விழுந்தது.

அதை அவள் கவனிக்கவில்லை. உள்ளே வந்த சேகர் அதை எடுத்து அவளிடம் நீட்டினான். அதைப் பெற்றுக் கொண்டவள் பணத்தை உள்ளே வைக்கக் கைப் பையைத் திறந்த போது அதில் ரூபாய் நோட்டுக் கட்டுக்கள், திணித்து வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு திகைத்துப் போனான் சேகர்.

"இத்தனை பணத்தைக் கைப் பையில் இப்படி எதற்காக வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் ?" என்று அவனால் நிர்மலாவிடம் கேட்காமல் இருக்க முடியவில்லை.

சங்கோசத்துடன் முகம் சிவக்க, "நாளைக்கு டவுனுக்குப் போய் யாராவது ஒரு துப்பறிபவரின் உதவியை நாடலாம் என்றிருக்கிறேன். அதற்கு எத்தனை செலவாகும் என்று எனக்குத் தெரியாது. ஆகவே, பாங்கியில் என் பேரில் இருந்த எல்லாப் பணத்தையும் எடுத்து விட்டேன்" என்றாள் நிர்மலா.

"மிஸ் நிர்மலா, நாளைக்கு முதல் காரியமாக இந்தத் தொகையைக் கொண்டு போய்ப் பாங்கியில் கட்டுங்கள். ஒரு துப்பறிபவரை நீங்கள் முன்பே அமர்த்தி விட்டீர்கள். அவர் உங்களிடமிருந்து எவ்விதமான 'பீஸை'யும் வாங்க மாட்டார் என்று நினைக்கிறேன்" என்றான் சேகர் அமைதியாக.

இதைக் கேட்டதும் மஞ்சுளா, "சேகர் !" என்று கூவினாள். அதை அடுத்து அவள் உள்ளம், 'என் அன்பே!' என்று உருகியது. ஆர்வத்துடன் அவன் கையை இழுத்துப் பற்றிக் கொண்டாள். நிர்மலாவின் முகத்தில் தோன்றிய அந்த மகிழ்ச்சியை எப்படி விவரிப்பது? நன்றிப்பெருக்கால் திக்குமுக்காடிப் போனாள் அவள்.

கோபால் ஒரு விதமாகக் குளியலை முடித்துக்கொண்டு இடையில் பெரிய டர்க்கி டவலை, ரோமானிய 'ஸெனட்டரை'ப் போலச் சுற்றிக்கொண்டு கூடத்தில் பிரசன்னமானான். டாய்லெட் சோப்பின் நறுமணம் கம்மென்று பரவி மனத்துக்கு இதமாக இருந்தது. அவன் அத்தனை சீக்கிரம் (!) தன் குளியலை முடித்துக் கொண்டதற்குப் பசியும்கூட ஒரு காரணமாக இருக்க வேண்டும்.

"நீங்கள் யாரும் குளிக்கும் உத்தேசமில்லையா ?" என்று கேட்டான்.

அதே சமயம் டெலிபோன் மணி கிணு கிணுத்தது. அதை எடுத்துக் கேட்ட கோபாலின் முகம் மலர்ந்தது.

"சேகர், நமக்கு விருந்து தயாராகி ரெடியாக உள்ளதாம். மஞ்சுளாவின் சித்தி நம்மைச் சாப்பிட அழைக்கிறார்" என்றான் கோபால், காதில் புகுந்த நீரை விரலை விட்டுக் குடைந்து கொண்டே.

" நிர்மலா, நீயும் எங்களுடன் வாயேன் சாப்பிட..." என்று அழைத்தாள் மஞ்சுளா.

நிர்மலா தலையைப் பலமாக ஆட்டி, "ஊஹூம், உன் சித்தி நான் உன்னுடன் சாப்பிட வருவதை விரும்பமாட்டாள். தவிர நான் உடனே பஸ்ஸைப் பிடித்து டவுனுக்குப் போயாக வேண்டும். ஆஸ்பத்திரியில் எனக்கு இன்று இரவு டூட்டி. பத்து மணிக்கு நான் அங்கு ஆஜராகிவிட வேண்டும்....இங்கு உன் விடுதியிலேயே என் உத்தியோக உடைக்கு என்னை மாற்றிக் கொண்டு போக மட்டும் அனுமதி கொடு" என்றாள் நிர்மலா.

" அப்படியானால் ஒன்று செய்யேன். நாங்கள் சாப்பிட்டு விட்டு வரும் வரை இங்கேயே உட்கார்ந்திரு. நான் ஏதாவது ஒரு காருக்கு ஏற்பாடு செய்கிறேன். உன்னுடன் நானும் டவுனுக்கு வந்து உன்னை ஆஸ்பத்திரியில் விட்டுவிட்டுத் திரும்புகிறேன்" என்றாள் மஞ்சுளா. அவளுக்கு மஞ்சுளாவிடம் பேசி இன்னும் பல விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டும் என்ற துடிப்பு.

"அதெல்லாம் ஒன்றும் வேண்டாம் மஞ்சு. பிரயாண அலுப்புத் தீரப் பேசாமல் உண்ட பின் ஓய்வெடுத்துக் கொள். நான் நாளை வந்து உன்னை மறுபடி சந்திக்கிறேன். கொஞ்சம் நடந்தால் தான் எனக்கும் இரவு டூட்டிக்குத் தெம்பாக இருக்கும்" என்று அவளை ஆதுரத்துடன் அணைத்துக் கொண்டு விடைபெற்றாள் நிர்மலா.

சேகரும் மஞ்சுளாவும் கோபாலும் பண்ணை வீட்டுக்குச் சென்ற போது அங்கு கோகிலா இவர்களை எதிர் பார்த்துக் காத்துக் கொண்டிருந்தாள். இவர்கள் போய்ச் சேர்ந்த ஐந்தாவது

சோப் ஒன்று-பலன் மூன்று!

நிகோ *கிருமிநாசினி* சோப்

மற்றெந்த சோப்பையும் விட உங்கள் சருமத்திற்கு மிகுந்த பாதுகாப்பளிக்கிறது

1 நிகோ சருமக் கிருமிகளைக் கொல்லுகிறது

2 நிகோ உடல் துர்நாற்றத்தைப் போக்குகிறது

3 நிகோ உடலைத் துப்புரவாக்கிப் பாது-காப்பளிக்கிறது

நீங்கள் ஆரோக்கியமான சருமத்தைப் பெற, நாள்தோறும் நிகோ சோப் தேய்த்துக் குளியுங்கள். நிகோவின் கச்சகாச நுரைவளம் சரும நோய்க் கிருமிகளைக் கொன்று, உங்கள் சருமத்திற்கு ஆரோக்கியமளிக்கிறது. நிகோவிலுள்ள மருந்துப் பொருள்கள் வியர்வையினால் ஏற்படும் துர் நாற்றத்தைப் போக்குகின்றன. நிகோ சின்னஞ்சிறிய சருமத் தொற்றுகளையும் எதிர்த்துப் போராடி, சருமத்துக்கு மென்மையளிக்கிறது. அதோடு மினுமினுப்பும் புதுமையும் தருகிறது. இது மட்டுமல்ல, முகப் பருக்கள் மற்றும் வேர்க்குருவிலிருந்தும் உங்கள் சருமத்துக்குப் பாதுகாப்பு தருகிறது நிகோ. ஷாம்புவாகக்கூட இதைப் பயன்படுத்தலாம். இதனால் பொடுகு விழாமல் தடுக்கிறது நிகோ. எனவே, இன்று முதலே, நிகோ சோப் உபயோகிக்கத் தொடங்குங்கள்.



TRIPLE ACTION

NEKO

The Original Germicidal Soap

PARKE-DAVIS

JAISONS 72 Tam

நிமிஷத்தில் எல்லோரும் இலையின் முன் உட்கார்ந்து விட்டார்கள். சேகருக்காகத்தானோ என்னவோ ஒரு பெரிய விசாலமான மேஜையில் இலைகள் போடப்பட்டுப் பரிமாறப்பட்டிருந்தன. கிராமப்புறத்தில் டேபிள் சாப்பாட்டை எதிர்பார்க்காத சேகருக்கு இது திகைப்பாக இருந்தாலும் மகிழ்ச்சியையும் கொடுத்தது. அவனுக்கு டேபிளில் சாப்பிட்டுத்தான் பழக்கம்.

எண்ணிக் கச்சிதமாக மேஜையின் நான்கு பக்கங்களிலும் நான்கு இலைகள் தான் போடப்பட்டிருந்தன. சேகரும் மஞ்சுளாவும் எதிர் எதிராக அமர்ந்து கொண்டார்கள். நர்ஸ் மோகனு தங்களுடன் சாப்பிடக் கலந்து கொள்ளாதது கோபாலுக்கு ஒரு பெரிய குறையாகத்தான் இருந்தது.

இலையில் உட்கார்ந்த சற்று நேரத்துக்கெல்லாம், ஒரு மூதாட்டி அங்கு பதார்த்தங்களுடன் தோன்றினாள்.... எளிமையான தோற்றம், சாந்தம் தவழும் சிரித்த முகம். அந்த அம்மாளைக் கண்டதும் மஞ்சுளா, ''காவேரியம்மா!'' என்று தாவிப் போய் அணைத்துக் கொண்டாள். அந்த மூதாட்டியும் கையில் இருந்த பாத்திரத்தைக் கீழே வைத்துவிட்டு மஞ்சுளாவை வாஞ்சையுடன் தழுவிக் கொண்டு முகத்தைப் பிடித்துத் திருஷ்டி கழித்துத் தன் நெற்றியில் சொடுக்கிக் கொண்டாள்.

''சௌக்கியமாம்மா?'' என்று கேட்டுவிட்டு, ''இவங்கதான் என்னை வளர்த்தவங்க. இந்தப் பண்ணையில் உள்ளவர்களுக்கு நல்ல சுவையான உணவு வகைகளைத் தயாரிக்கும் காரியத்தைப் பல வருஷங்களாகச் செய்து வருகிறார். என் தாத்தாவுக்குக் காவேரியின் கைச் சமையல் இல்லா விட்டால் ஒன்றுமே ஓடாது'' என்று சேகருக்கு அறிமுகம் செய்து வைத்தாள். மஞ்சுளாவின் புகழுரைகளினால் காவேரியம்மாளின் முகம் சிவந்து விட்டது. தலை குனிந்தவாறே இலையில் பரிமாறிவிட்டு வேகமாக உள்ளே போனாள்.

''காவேரி யாரோ என்று எண்ணி விடாதீர்கள். நம்ம வேலப்பனுடைய மனைவியாக்கும்'' என்றாள் மஞ்சுளா தொடர்ந்து. இதற்குள் காவேரி இலையில் சாதம் பரிமாறிவிட்டு நெய் ஊற்றி விட்டுப் போனாள்.

ஏதாவது பேச வேண்டும் என்பதற்காகவோ என்னவோ கோகிலா, ''லலிதா தூக்கம் வருகிறது என்று சாப்பிடாமல் படுத்துக் கொண்டு விட்டாள்'' என்றாள்.

''குழந்தைதானே! தவிர நேரமும் ஆகிவிட்டதே!'' என்றாள் மஞ்சுளா.

'குழந்தைதானே' என்ற சொல்லில் தெறித்து விழுந்த கேலியை சேகர் மட்டும்தான் அநுபவித்தான்.

''குழந்தையாகவே இருக்கிறாளே.... என்றுதான் கவலை'' என்று கோகிலா சொல்லிக் கொண்டிருக்கும் போது காவேரி சமையல் அறையிலிருந்து தலையை நீட்டி, ''யாராவது வெளியே போகிறார்களா, அம்மா?'' என்றாள்.

''யாரும் எங்கும் போகவில்லை. இங்குள்ள நம்மைத் தவிர இந்த வீட்டில் எல்லோரும் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள்'' என்றாள் கோகிலா.

''தென்னண்டைக் கதவோ அல்லது மேலண்டைக் கதவோ திறக்கும் ஓசை கேட்டது. ஆனால் ஹால் விளக்கைப் போட்ட போது அங்கு யாரையும் காணோம். அதுதான் கேட்டேன்'' என்று கூறியபடியே உள்ளே போய்விட்டாள் காவேரி.

ஆனால் அடுத்த நிமிஷமே மறுபடி அங்கு தோன்றினாள். இப்போது அவளிடம் பதற்றம் காணப்பட்டது.... ''அம்மா, சமையலறையின் பக்கக் கதவை யாரோ தட்டுவது போலிருந்தது. திறந்து பார்த்தால் அங்கு யாரையும் காணோம்'' என்ற போது அந்த மூதாட்டியின் உடல் இலேசாக நடுங்கிக் கொண்டிருந்தது.

''நான்தான் சொல்லுகிறேனே, காவேரி. இந்த வீட்டில் எல்லாரும் தூங்கியாகி விட்டது. ஏதாவது பூனையாக இருக்கும். வீணாக அலட்டிக் கொள்ளாதே!'' என்ற கோகிலாவின் குரலில் கண்டிப்புக் கலந்திருந்தது.

''யாரும் இல்லேன்னா... பின்னே, யாரோ திணறுவது போலச் சத்தம் கேட்குதே!'' என்று மெதுவாக ஆனால் தனக்குத் தானே கூறிக் கொண்டு காவேரி திரும்பிய போது, கோகிலா சட்டென்று, ''காற்றிலே ஏதாவது மரம் அசைந்திருக்கும்'' என்று அதற்கும் காரணம் கூறினாள்.

''இல்லேம்மா, அந்தச் சத்தம் அப்படி இல்லே. ஏதோ விநோதமா ஒரு மாதிரியா இருந்தது....'' என்று கூறிய காவேரியின் குரலில் அவளது குழப்பமும் பீதியும் நன்கு தெரிந்தன. அதே சமயம் கோகிலா கண்களில் கோபம் பறக்க அவளைப் பார்த்த பார்வை? சேகரால் அந்த முகத்தை — கோகிலாவின் அந்தப் பார்வையை — மறக்கவே முடியாது — மறக்கவும் இல்லை.

(தொடரும்)

காதலுக்கு ஒரு தலை முழுக்கு

ஜோதிர்லதா கிரிஜா

இந்தக் கதையின் நாயகி நான்தான். இந்த முதல் வரியைப் படித்ததுமே என் நண்பர்கள், நண்பர்களல்லாதார், இன்னோரன்ன பிறர் முதுகை நெளித்துக் கொண்டும், கண்களை அகல விரித்துக்கொண்டும் நிமிர்ந்து உட்காருவார்கள் என்பது எனக்குத் தெரியும். தங்களுக்கு இருக்கும் ஆயிரம் கவலைகளுக்கிடையே என் சொந்த வாழ்க்கையைப்பற்றியும், நான் ஏன் இன்னமும் திருமணம் செய்துகொள்ளாமல் இருக்கிறேன் என்பதைப் பற்றியும் அறிய முயலுதலைத் தங்கள் ஆயிரத்தோராவது கவலையாக ஏற்றுக்கொண்டு மண்டையை உடைத்துக் கொள்ளும் இவர்களை யெல்லாம் நினைக்கும் போதே எனக்குச் 'சிரியோ சிரி' என்று சிரிக்கத் தோன்றும்.

என்னிடம் நெருங்கிப் பழகியவர்களிடம்கூட — ஏன், பழகிக் கொண்டிருக்கிறவர்களிடம் கூடத்தான் — நான் எனது வாழ்க்கை வரலாற்றைப் பற்றிமூச்சு விட்டதில்லை. அதற்குக் காரணம் என் வாழ்க்கை வரலாறு பிறரிடம் சொல்லிக் கொள்ள முடியாத நிகழ்ச்சிகள் நிறைந்தது என்பதல்ல. பிறரிடம் சொல்லிக் கொள்ளுவதால் நமக்குக் கிடைக்கப் போவதென்ன — அவர்களுக்குக் கிடைக்கப் போவதுதான் என்ன — என்ற மனநிலைதான்.

என் தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றி நேரடியாக வினவ அஞ்சி, மறைமுகமாகக் கேள்விகளைத் தொடுக்கும் எத்தனையோ பேர்களின் ஆவலாதியைப் பார்க்கும்போது எனக்கே வேடிக்கையாக இருக்கும். பிறருடைய சொந்த வாழ்க்கையைப்பற்றி அறிய முயலுதலைத் தரக் குறைவான செயல் என்று கருதும் வகையில் நாகரிகமான முறையில் வளர்க்கப்பட்டுள்ள நான் இதுவரையில் என்னிடம் மிக இணைந்து பழகியவர்களிடம் கூட அவர்களது அந்தரங்க வாழ்க்கையைப் பற்றி மறைமுகமாகவும் விசாரித்ததறியேன். இந்த என் ஒதுங்கிப் பழகும் தன்மையால் கூடப் பிறரை என்னிடமிருந்து ஒதுக்கிவைக்க முடியாமற் போனதை எண்ணி நான் வியந்தது உண்டு. என்னை ஏதோ 'மர்மம்' சூழ்ந்திருப்பதாகவும் அதனாலேயே நான் யாருடனும் ஒட்டாமல் ஒதுங்கி யிருப்பதாகவும் 'ஊகித்து' என்னைப் பற்றிக் காதைக் கடித்துக்கொள்ளும் பலரை எனக்குத் தெரியும்.



பலவகையான ஊகங்களும் பொய்த்துப் போன நிலையில் நான் யாரையோ காதலித்துத் தோற்றுப் போயிருக்க வேண்டும் என்பது முடிவில் பலர் செய்த ஒருமுகமான தீர்மானமாகும். இந்தத் தீர்மானம் உண்மையில் கொஞ்சம் புத்திசாலித்தனமானதுதான் என்பதை நான் ஒப்புக் கொண்டே தீர வேண்டும். போகட்டும். எனது காதல் கதைக்கு வருவோம்....

தேவராஜனுக்கும் எனக்குமிடையே காதல் மலர்ந்ததற்கு வழக்கமான காரணமாக அமையும் கவர்ச்சியோ அல்லது அழகோ காரணமாக அமையவில்லை. அந்தவகையில் எங்கள் காதல் சற்று நூதனமானது. ஏனென்றால் நாங்கள் இருவருமே அழகோடு சேர்த்தியில்லை.

ஒரு தடவை நான் அலுவலர் கையெழுத்துக்காக எழுதி அனுப்பிய நீண்ட கடிதம் ஒன்றைத் தற்செயலாகப் படிக்க நேர்ந்த அவர் — எங்கள் பிரிவில் வேலை செய்யும் தம் நண்பர் ஒருவரைப் பார்க்க வந்தபோது — அதைப் பற்றிக் குறிப்பிட்டுப் பாராட்டினார்.

''மிஸ் ஜலஜா! ஆடிட் அப்ஜெக்‌ஷன் சம்பந்தமாக நீங்கள் எழுதியிருக்கிற ட்ராஃப்ட் மிகப் பிரமாதம். டைரக்டர் ஸ்டெனோவின் அறையில் அதை நான் பார்க்க நேர்ந்தது. எல்லா மறுப்புக்களையும் தகர்க்கும் வகையில் மிகவும் ஆணித்தரமாக எழுதியிருக்கிறீர்கள்'' என்று அவர் கூறியபோது நான் வெட்கமும் மகிழ்ச்சியும் அடைந்தேன்.

எங்கள் அலுவலகத்தில் உள்ள திருமணமாகாத ஆண்களில் தேவையின்றிப் பெண்களிடம் பேசும் வழக்கமில்லாதவரான தேவராஜன் பளிச்சென்று பாராட்டு மொழிகளை உதிர்த்ததும் என்ன சொல்வது என்று தோன்றாமல் சில விநாடிகள் பேசாதிருந்து பிறகு ''தாங்க் யூ'' என்றேன்.

அதுதான் எங்களுக்குள் நடந்த முதல் பேச்சு என்று சொல்ல வேண்டும். அதற்கு முன்பு அந்தி பூத்தாற்போல் நாங்கள் பேசியிருக்கக் கூடியவை எந்த வகையான முதன்மையும் வாய்ந்தவை யல்ல. மிகவும் அற்பமானவை.

மேற்குறித்த பாராட்டுரையை வழங்கிய தற்குப் பிறகு அவர் என்னைப் பார்க்கும் போதெல்லாம் இதழ் விரியாமல் என்னைக் கடந்து சென்றதில்லை. அவர் கண்களை என்னால் படிக்க முடிந்தது. இதனால் அவரது பார்வையை ஒரு கணத்துக்கு மேல் தாள முடியாமல் நான் இமைகளைத் தாழ்த்தலானேன்....

நான் எதிர்பார்த்திருந்த அந்த நாளும் வந்தது. ஒரு நாள் அவர் தற்செயலாக என்னைக் கடைத் தெருவில் சந்தித்தார். அலுவலக நண்பரானாலும் தெருவில் சந்திக்கும்போது சிரிப்பது முறையல்ல என்ற எண்ணத்தால் நான் அவரைக் கவனியாதவள் போல் நடந்து செல்ல முனைந்த போது, 'குட் ஈவினிங்' என்ற சொற்களுடன் என்னை அவர் நெருங்கி விட்டார்.

"குட் ஈவினிங்" என்றேன்.

"என்ன? கடைக்கு வந்தேளா?"

"ஆமாம்."

"உங்கள் வீடு இங்கே தான் பக்கத்தில் இருக்கிறதா?"

"ஆமாம்."

"அப்படி ஓரமாக நிற்கலாமே?" என்றார். நான் ஓரமாக நகர்ந்தேன். சில விநாடிகள் பேசாமல் நின்றார்.

"உங்களுக்கு அப்பா அம்மா இருக்கிறார்களா?"

"இருக்கிறார்கள்."

"உங்கள் தகப்பனாரைச் சந்தித்துப் பேச விரும்புகிறேன். அதற்கு உங்கள் அனுமதி உண்டா?" என்று ஆங்கிலத்தில் கேட்டார். அப்போது அவரது முகத்தில் தவழ்ந்த புன்னகையும் பொருள் பொதிந்த பார்வையும் அவரது உள்ளக் கிடக்கையைச் சொல்லாமற் சொல்லின. நான் சிரித்தபடியே தலையைக் குனிந்தேன்...

அதற்குப் பிறகு நடந்ததை யெல்லாம் விவரிக்கத் தேவையில்லை. அப்பாவின் மனமுவந்த இணக்கம் எனக்குக் கிடைத்தது. எங்கள் எண்ணம் ஈடேற எந்தத் தடையும் இல்லை என்று தோன்றிற்று. அவருக்கு ஒரு தங்கை இருந்ததால் அவளுக்குத் திருமணம்



ஆகும்வரையில் நாங்கள் காத்திருக்க வேண்டும் என்பதைத் தவிர.

நான் வானத்தில் மிதந்தேன் என்றோ, அல்லது தரையில் கால்கள் பாவாமல் நடந்தேன் என்றோ சொன்னால் அது மிகையாகாது. எனது நோக்கங்களுக்கு உறுதுணையாக இருக்கக்கூடியவர் என்று நான் நம்பிய ஒருவரை வாழ்க்கைத் துணைவராக அடையப் போகும் பேறு பெற்றவள் என்ற மகிழ்ச்சியால் எனக்குத் தலைகால் தெரியவில்லை...

நாங்கள் அலுவலகத்தில் தற்செயலாகச் சந்திக்க நேரும்போது பார்த்துக்கொண்டதோடு சரி. எங்கள் உறவு யாருக்கும் தெரியக் கூடாது என்பதில் அவர் மிகவும் கவனமாக இருந்தார். நாலு பேர் வம்பு பேசுவதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்ற அவரது கருத்து அவர் மேல் ஏற்கனவே நான் கொண்டிருந்த கருத்தை உயர்த்தியது.

என் தகப்பனாரை அவர் சந்தித்துப் பேசியதற்குப் பிறகு இரண்டு மாதங்களுக்கெல்லாம் தேவ்ராஜன் சென்னையிலேயே இயங்கிய ஜில்லா அலுவலகத்துக்கு மாற்றப்பட்டார். இதற்குப் பிறகு நாங்கள் அடிக்கடி உள்ளூர் அஞ்சலில் கடிதம் எழுதிக் கொள்ளத் தலைப்பட்டோம். எப்போதேனும் எங்கள் அலுவலகத்துக்கு அவர் வரும்போது மட்டும் நாங்கள் ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்வதுண்டு. மற்றப்படி நாங்கள் கடற்கரை, சினிமா, பூங்கா என்றெல்லாம் போய் நாலு பேர்கள் பார்வையில் பட்டு, அவர்கள் வாய்களில் விழுந்து புறப்பட்டும் எங்கள் பேரைக் கெடுத்துக் கொள்ளும் அளவுக்குத் துணிந்த கட்டைகளாக இருக்கவில்லை.

எங்கள் உறவு எதிர்பாராத திருப்பத்தையும் அதன் விளைவான முறிவையும் அடைந்த கட்டம் திடீரென்றும் சிறிதும் நம்பத் தகாத வகையிலும் நிகழ்ந்தது. வெளிக்குத் தெரிகிற ஆசாமிக்கும் உள்ளே இருக்கிற ஆசாமிக்கும் இடையே மகத்தான வேறுபாடு உண்டு என்ற கசப்பான உண்மையை உணர்த்தியதோடு, இனி காதல் என்ற சொல்லைக்கூட நினைத்தும் பார்க்கக் கூடாது என்ற வெறுப்புக் கலந்த தீர்மானத்தையும் விரக்தியையும் என்னுள் ஏற்படுத்தியது அந்த நிகழ்ச்சி. அதைப்பற்றி நினைக்கும்தோறும் அப்படி ஒரு நிகழ்ச்சி நடந்திரா விட்டால் நான் வாழ்நாள் முழுதும் வருந்தும்படியான பொய்ம்மையில் சிக்கிக் கொண்டிருந்திருப்பேன் என்ற உணர்வும், அதைத் தொடரும் விடுதலைப் பெருமூச்சுமே வருகின்றன.

அப்பாவைச் சந்தித்துப் பேசிச் சென்றதற்குப் பிறகு நான்கு மாதங்கள் கழித்து அவர் திண்டுக்கல்லுக்கு மாற்றப்பட்டார். தம் பெற்றோர் திண்டுக்கல்லில் இருந்ததால் அவ்வூருக்கு மாற்றல் கேட்டுத் தாம் விண்ணப்பித்திருந்ததைப் பற்றி ஏற்கனவே அவர் என்னிடம் கூறியிருந்தார்.

தாம் மாற்றப்பட்டுவிட்ட செய்தியைத் தெரிவித்து அவர் உடனே எனக்குக் கடிதம் எழுதினார். எங்கள் திருமணத்துக்குப் பிறகு நானும் மாற்றல் கேட்டுக் கொண்டு திண்டுக்கல்லுக்கு வரலாமென்றும் எழுதியிருந்தார். தாமே விரும்பிக் கேட்ட மாற்றமாதலால் சென்னையிலிருந்து கிளம்பித் திண்டுக்கல் ஆபீசுக்குப் போகப் பிடிக்கும் பயண காலத்துக்குரிய சம்பளம், பயணப் படி ஆகியவற்றைத் தாம் இழக்க வேண்டி வரும் என்றும் அவர் ஆங்கிலத்தில் தெரிவித்திருந்தார். வழக்கம்போல் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்த அந்தக் கடிதத்துக்கு நான் எழுதிய பதிலால் தான் எங்கள் உறவில் நான் சற்றும் எதிர்பாராததும் நம்பத் தகாததுமான அந்தத் திருப்பம் விளைந்தது.

'பயண காலப்படி, சம்பளம் ஆகிய இரண்டையும் நான் இழக்க வேண்டியது வரும்' என்று அவர் எழுதியிருந்த ஆங்கில வாக்கியத்தில் 'இழக்க' என்ற சொல்லுக்கு இணையான 'ஃபோர்கோ' என்ற ஆங்கிலச்சொல்லை அவர் உபயோகித்திருந்தார். 'ஃபோர்கோ' என்ற அந்தச் சொல்லை இரண்டு விதமாக எழுதலாம் என்பதை நான் அறிந்திருந்தேன். 'Forgo' என்றும், 'Forego' என்றும் எழுதலாம் என்றும், ஆனால் 'E' இல்லாமல் எழுதுவதுதான் சிறப்பு என்றும் 'சேம்பர்ஸ்' ஆங்கில அகராதியில் காணப்படுகிறது. ஆனால் 'ஆக்ஸ்போர்ட்' ஆங்கில அகராதியின்படி 'E' போடக் கூடாது.

அவரது கடிதத்தைப் படித்தபோதும் சரி, அதே சொல்லை நான் அவருக்கு எழுதிய பதிலில் உபயோகித்தபோதும் சரி, அதை இரண்டு விதமாக எழுதலாம் என்பதைப் பற்றியோ, அல்லது 'E' இல்லாமல் 'Forgo' என்று எழுதுவதுதான் சிறப்பு என்பதைப் பற்றியோ நான் நினைக்கவே இல்லை. அவர் 'E' போட்டுச் சிறப்புக் குறைவாக எழுதியிருந்தார் என்பதையும் நான் மனத்தில் வாங்கிக் கொள்ளவில்லை.

நம் அன்புக்குப் பாத்திரமானவர்கள், நம் இதயத்துக்கு மிக அருகில் இருக்கிறவர்கள் ஆகியோரிடமிருந்து கடிதம் வரும்போது கடிதத்தில் ஒலிக்கிற அன்பைத்தான் நாம் கவனிப்போமே தவிர அதில் காணப்படுகிற இலக்கணப் பிழைகளையோ அல்லது எழுத்துப் பிழைகளையோவா பார்த்துக் கொண்டிருப்போம்?

எனவே, நான் எழுதிய பதிலில், 'நல்ல வேளையாகத் திண்டுக்கல் ரொம்பத் தொலைவில் இல்லாததால் நீங்கள் இழக்க நேரும் தொகை கொஞ்சம்தான்' என்ற வாக்கியத்தில் என்னையும் அறியாமல் 'Forgo' என்று சரியாக எழுதித் தொலைத்து விட்டேன் போலிருக்கிறது!...

மறு தபாலில் அவரிடமிருந்து பதில் சீறிக் கொண்டு வந்து விட்டது.

'உன் கடிதம் ('மை டியர் ஜானு'வைக் காணவில்லை). நீ ஆங்கிலத்திலும் சரி, மற்றவற்றிலும் சரி, என்னைவிடப் பதினாயிரம் மடங்கு கெட்டிக்காரியாய் இருக்கலாம். ஆனால் உன் கெட்டிக்காரத்தனத்தையும் புலமையையும் எனக்கு நீ எழுதும் கடிதங்களில் பறைசாற்றிக் கொண்டிருக்க வேண்டியதில்லை என்று நான் கருதுகிறேன். உன் புலமையைப் பலவாறாகவும் நீ வெளிப்படுத்திக் கொள்வது நாம் நடத்தப் போகும் இல்வாழ்க்கை, சுமுகமான முறையில் நடப்பதற்கு வழி வகுக்காது என்று அறியவும். உன் ஆங்கிலப்


க்ரிஸ்டல் புன்னகையின்
இரகசியம் என்ன?
சொத்தையற்ற
பளிச்சிடும் பற்கள்...
துர்நாற்றமில்லாத
மூச்சுக்காற்று!
க்ரிஸ்டல்
டூத் பேஸ்ட்
KRISTAL
TOOTH PASTE

புலமையை நீ வெளிக்காட்டிக் கொள்வது இது முதல் தடவையல்ல...'

கடிதத்தில் கண்டிருந்தவை மேற்கண்ட இந்தே வாக்கியங்கள்தாம். அதைப் படித்து முடித்ததும் எனக்கு ஒன்றுமே புரியவில்லை. சில விநாடிகளுக்கு நான் நானாகவே இல்லை.

எனது ஆங்கிலப் புலமையை வெளிப்படுத்திக்கொள்ளுமளவுக்கு எனது சொல் கடிதத்திலாகட்டும், அதற்கு முன்பு எழுதிய கடிதங்களிலாகட்டும் — நான் அப்படி என்ன எழுதி விட்டேன் என்பது எவ்வளவு சிந்தித்தும் எனக்குப் புரியவில்லை. தவிர, அவரை விடவும் புலமை நிறைந்தவனாக என்னை நான் கருதிக் கொண்டதுமில்லை. அப்படி நான் தப்பித் தவறிக் கருத முற்பட்டால் அது சரியுமல்ல என்பதும் எனக்குத் தெரியும். ஏனென்றால், உண்மையைச் சொல்லப் போனால் அவர் எழுதிய ஆங்கிலக் கடிதங்களில் அவர் உபயோகப்படுத்திய கடுமையான — பகட்டான — சொற்களுக்குப் பொருள் தெரியாமல் நான் திண்டாடிப் போய் அகராதியின் உதவியைப் பல தடவைகளில் நாடியிருக்கிறேன். பொதுவான வழக்கில் இல்லாத அரிய பெரிய சொற்களையும் சொற்றொடர்களையும் அவர் தமது கடிதங்களில் உபயோகப்படுத்தியதைப் பார்த்து அவரது புலமையை எண்ணி நான் பல தடவைகளில் வியந்து மகிழ்ந்திருக்கிறேன். தப்பில்லாமல் ஆங்கிலம் எழுதுவேனே தவிர எனது நடை எளிமையானது என்பதால் திருமணத்துக்குப் பிறகு அவரிடம் ஆங்கிலம் கற்றுக் கொண்டு எனது புலமையை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று நான் கோட்டை கட்டிக் கொண்டிருந்த நிலையில் அவரது அபாண்டமான குற்றச்சாட்டு என் தலையில் பேரிடியாக வந்து தாக்கி என்னை அச்சுறுத்தியது. என் புலமை வெளிப்படுமளவுக்கு அந்தக் கடிதம் அப்படியொன்றும் பகட்டாக இல்லையே என்று குழம்பித் தவித்தேன். அழுகை வரும் போலிருந்தது.


மறு தபாலில் நானும் பதில் போட்டேன்.

'அன்பு மிக்கவருக்கு,

உங்கள் கடிதம் எனக்குப் புரியவில்லை. என் புலமையை — புலமை எனக்கு இருப்பதாக நான் நினைக்கவே இல்லை என்பது ஒருபுறமிருக்க—யாரிடமும் — முக்கியமாக உங்களிடம் நான் காட்டிக் கொண்டதாக நான் அறிந்த வரை எனக்குத் தெரியவில்லை. புலமை என்பது என் உடைமையாக இருந்து, அது அப்படியே எப்போதேனும் வெளிப்பட்டிருந்தால் என்னையும் அறியாமல் தற்செயலாக அது வெளிப்பட்டிருக்கலாமே யல்லாது, நான் வேண்டுமென்றே காட்டிக் கொண்டதாக இருக்க முடியாது. எனது சென்ற கடிதம் மிகவும் எளிய நடையில்—ஏனெனில் உங்களைப் போல் அமர்க்களமான நடையில் எனக்கு எழுத வராது — அமைந்திருந்ததை நினைவு கூரும்போது, உங்கள் கடிதத்தின் கடுமை எனக்குப் புரிய மாட்டேன் என்கிறது. உடனே பதில். உங்கள் கடிதம் வரும்வரையில் நான் தூங்க மாட்டேன்.'

அவரிடமிருந்து மறு தபாலில் பதில் வந்து விட்டது.

'உன் கடிதத்தைத் திருப்பி அனுப்பியிருக்கிறேன். நீயே பார்த்துக்கொள். 'ஸ்போர்ஜே'



"இது என்ன தெரியுமா? சொல்லுங்க!"

"..........."

"குதிரைமேல் கட்டுவார்களே அதுதான் இது. இப்போ சொல்லுங்க பார்க்கலாம்!"

"பணத்துக்கு இன்னொரு பெயருங்களா?"


என்ற சொல்லை நான் தப்பாக எழுதியிருந்ததைச் சுட்டிக் காட்டுவதற்காக அந்தச் சொல்லை நீ உன் கடிதத்தில் தேவையில்லாமல் உபயோகித்திருக்கிறாய். இதற்கு முன்னும் நீ எழுதிய கடிதங்களிலும் இதே போன்று நான் தப்பாக எழுதியிருந்த சில சொற்களைச் சுட்டிக் காட்டியிருக்கிறாய். உனது இந்தப் போக்கு எனக்குப் பிடிக்கவில்லை. இதை நீ வேண்டுமென்றே செய்யவில்லை என்பதை நான் நம்ப மாட்டேன். எனக்கு மனைவியாக வருகிறவள், 'இவனுக்கு இதுகூடத் தெரியவில்லையே?' என்று என் முதுகுப்புறம் நின்று மனசுக்குள் சிரிப்பதை என்னால் மன்னிக்க முடியாது....'

நான் அதிர்ந்து போனேன். அவர் எந்தச் சொல்லையும் தப்பாக எழுதியதாக எனக்கு நினைவு வரவில்லை. நான் கவனிக்கத் தவறியிருக்கலாம். அவரைத் திருத்துவதற்காக அவற்றை வேண்டுமென்றே நான் என் கடிதங்களில் தேவையில்லாமலே உபயோகப்படுத்தவும் இல்லை.

ஆழ்ந்து சிந்தித்த பிறகு, 'அப்படியே நான் அவற்றைச் சரியாக எழுதி அவரது பிழைகளை நாசூக்காகச் சுட்டிக் காட்டியிருந்தால் கூட அவர் எனக்கு நன்றியல்லவா பாராட்ட வேண்டும்? 'என்றுதான் தோன்றிற்று. 'ஆடிட் அப்ஜெக்ஷன்' சம்பந்தமாக நீங்கள் எழுதியிருந்த டிராஃப்ட் பிரமாதம்' என்று பாராட்டிய அதே மனிதர்தானா இவர் என்று நான் நினைத்தேன். திகைப்பைக் காட்டிலும் திடுக்கிடு அதிகமாக இருந்தது. அன்று பாராட்டிய தேவராஜன் போலி மனிதர் என்பதும், தமக்குத் தெரியாதது எனக்குத் தெரிந்திருப்பது கண்டு இன்று காய்கிற தேவராஜனே அசல் மனிதர் என்பதும் புரிந்தபோது என் மனம் அதிர்ந்தது. அதுகாறும் நான் அவர்மீது

புதிய கோத்ரெஜ் ஸ்டோர்வெல்

கொண்டுள்ள குணநலன்கள்



கொண்டிருந்த காதலின் இடத்தில் அச்சம் குடிபுகுந்தது.

அன்று முழுதும் எனக்கு ஒன்றுமே ஓடவில்லை. நெஞ்சு பாறாங்கல்லாய்க் கனத்தது....

மாலை வீட்டுக்குப் போனதும் என் கையில் அப்பா மகிழ்ச்சியோடு ஓர் உறையை நீட்டினார். ஏற்கனவே அவரால் பிரிக்கப்பட்டிருந்த உறையிலிருந்து கடிதத்தை எடுத்துப் பிரித்தேன். அமெரிக்காவிலிருந்து அனைத்துலகக் கலாசாரத் தொடர்பகத்தின் செயலாளர்தாம் அதை அனுப்பி யிருந்தார். கிட்டத்தட்ட ஓர் ஆண்டுக்கு முன்னர் 'கிழக்கிந்திய நாகரிகம்' என்ற தலைப்பின் கீழ் இந்தியா போன்ற கீழ்த்திசை நாடுகளில் உள்ள மக்களிடையே வைக்கப்பட்டிருந்த ஆராய்ச்சிக் கட்டுரைப் போட்டியில் எனக்கு முதற் பரிசு ஆயிரம் டாலர்கள் வழங்கப்பட்டிருந்ததை அறிவித்து வந்திருந்த அந்தக் கடிதத்தை இரண்டு தடவைகள் படித்த பிறகும் என் கண்களை நானே நம்ப முடியாமல் திகைப்புடன் நிமிர்ந்து என் அப்பாவைப் பார்த்தேன்.

வாயெல்லாம் பல்லாக அப்பா என்னையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தார்.

"கட்டுரை எழுதி அனுப்பியிருப்பதாக என்னிடம் சொல்லவே யில்லையே அம்மா நீ?"

"எனக்கு அவநம்பிக்கையாக இருந்தது, அப்பா. தவிர, கூச்சமாகவும் இருந்தது. நீங்கள் சிரிப்பீர்களோ என்று..."

"ரொம்ப அழகா யிருக்கிறதம்மா.... போகட்டும். எதைப் பற்றி எழுதினாய்?"

"நமது நாகரிகத்தைப் பற்றிய தவறான கருத்துக்களும் மதிப்பீடும் மேலை நாடுகளில் நிலவுவதைச் சுட்டிக் காட்டியும், இந்திய நாகரிகமும், பண்பாடுகளும், சமூக நெறியும், சட்ட திட்டங்களும் மனித குலம் முழுவதினுடையவும் மேம்பாட்டுக்கு எவ்வளவு இன்றியமையாதவை என்பதை எடுத்துக்காட்டியும் என் கட்டுரையை எழுதி யிருந்தேன்..."

"வெரி குட்." அப்பாவின் கண்கள் பளபளத்தன. ஒரு தந்தைக்குரிய பூரிப்பால் அவர் முகமே ஊதிப் போயிருந்தது.

தேவராஜனின் கடுமை நிறைந்த கடிதங்களைப் பற்றிய உறுத்தல் சட்டென்று என் மனத்தில் பாளைக் துரும்பாக நெருடிற்று. பரிசு கிடைத்ததால் கிடைத்த மகிழ்ச்சி முழுதும் அவிந்துவிட்டாற் போல் என் மனத்தில் இருள் சூழ்ந்தது.

காப்பியைக் குடித்துவிட்டு நான் மொட்டை மாடிக்குப் போய்ப் புத்தகமும் கையுமாக உட்கார்ந்தேன். புத்தகத்தின் தாள்களைக் கை புரட்டிக் கொண்டிருக்க என் மனம் கனத்த சிந்தனையில் ஈடுபட்டிருந்தது...

வெகு நேரத்துக்குப் பின்னர் நான் ஒரு முடிவுக்கு வந்தேன்.

'அன்பு மிக்க தேவராஜன் அவர்களுக்கு,

உங்கள் கடிதம் கிடைத்தது. அது எனக்கு அளித்த அதிர்ச்சி எவ்வளவு என்பதை என்னால் விளக்க முடியாது. ஆனால் ஒன்று மட்டும் எனக்குப் புரிந்தது. — உங்களால் என்னோடு மகிழ்ச்சியாக வாழ முடியாது என்பது.

இதுகாறும் நீங்கள் எனக்கு எழுதியுள்ள கடிதங்களில் சில சொற்களைத் தப்பாக எழுதியிருந்ததை நான் கவனித்ததில்லை. கவனித்திருந்தாலும் அதே சொற்களை நான் என் கடிதங்களில் கையாண்டபோது அவை சரியாக எழுதப்பட்டது தற்செயல்தானே தவிர உங்கள் பிழைகளை எடுத்துக் காட்டுவதற்காகவோ அல்லது என் புலமையைக் காட்டிக் கொள்ளுவதற்காகவோ நான் வேண்டுமென்றே புரிந்த செயல் அல்ல. ஆனால் என் கூற்றை நீங்கள் நம்ப மாட்டீர்கள் என்பதை நான் நன்றாக உணர்கிறேன். ஏனென்றால், 'இதை நீ வேண்டுமென்றே செய்யவில்லை என்பதை நான் நம்ப மாட்டேன்' என்று ஆணித்தரமாக எழுதி யிருக்கிறீர்கள். உங்கள் உள்ளுணர்வின் மேல் உங்களுக்குள்ள அசைக்க முடியாத நம்பிக்கையோடு வாழ்நாள் முழுவதும் போராடிக் கொண்டிருக்க எனக்கு விருப்பமில்லை.

உங்களிடம் இதுவரை நான் சொல்லாமல் இருந்த ஒரு விஷயத்தைப் பற்றி இப்போது சொல்லுவதில் தப்பில்லை என்று நான் நினைக்கிறேன். 'மலைமகள்' என்ற புனைபெயரில் தமிழ்நாட்டு இதழ்களில் இதுவரை நான் சுமார் ஐம்பது கதைகள் எழுதியிருக்கிறேன். ஆங்கில இதழ்களில் எனது கட்டுரைகள் சில வந்திருக்கின்றன. இதைப் பற்றி நான் உங்களிடம் இதுவரையில் கூறாததற்குக் காரணம் வீண் பெருமை அடித்துக் கொள்ள வேண்டாமே என்பதுதான்.

உங்களை நான் மணப்பெறுவதில் அதற்குப் பிறகு நான் எழுதக் கூடியவற்றில் காணப்படும் சொற் பிரயோகங்களில் சிலவற்றை நான் வேண்டுமென்றே உங்களைத் திருத்துவதற்காகக் கையாண்டிருக்கிறேன் என்று நீங்கள் நினைக்கக் கூடும். எழுத்தாளர்களுக்கு எழுதுவதுதான் மூச்சு என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இந்த நிலையில் என்னால் ஒரே ஒரு முடிவுக்குத்தான் வர முடிகிறது. நான் உங்களுக்கு ஏற்றவள் இல்லை என்பதுதான் அது.

உங்களது அமர்க்களமான ஆங்கில நடையைக் கண்டு அகமகிழ்ந்து போனதோடு மட்டுமின்றி, எனது ஆங்கிலக் கட்டுரைகளை உங்களிடம் திருத்தி வாங்கிக் கொள்ளலாம், உங்கள் ஒத்தாசையோடு எனது ஆங்கில அறிவை மேலும் வளர்த்துக் கொள்ளலாம் என்றெல்லாம் கோட்டை கட்டிய எனது மனப் போக்குக்கும் இந்த உங்கள் மனப் போக்குக்கும் இடையே உள்ள வேறுபாடு ஒரு பெண்ணும் ஓர் ஆணும் ஒருவரையொருவர் அணுகுகிற விதங்களிடையே காணப்படும் அடிப்படையான வேறுபாடு என்றே எனக்குத் தோன்றுகிறது.

ஆணின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப ஒரு பெண் தனக்கென்று எதுவுமே இல்லாமல் எல்லாவற்றையும் துறந்து அவனில் 'கரைந்து போக' முன்வருவதுதான் காதல் என்றால், அப்படிப்பட்ட காதல் எனக்கு உங்கள் மேல் இல்லை என்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். எதிர்பார்ப்பு என்பது ஆணுக்கு மட்டும்தானா என்று நான் கேட்டால் அதில் உள்ள நியாயம் நீங்கள் ஒரு பெண்ணுக்குத் தந்தையான பிறகுதான் உங்களுக்குப் புரியும்.'

கடிதத்தை உறையில் வைத்து மூடினேன். கண்களிலிருந்து சிந்திய கண்ணீர் உறையின்

சாதாரண சரும நோய்களுக்கு நிவாரணம்

வயோஃபார்ம்

க்ரீம்

CIBA/VIO-89 TM

CIBA

ஆஸ்துமா நிவாரண மூலிகை

ராஜஸ்தான் பிரபல அரசியல் சமூகத் தலைவர் காலஞ்சென்ற ஸ்ரீ சம்புநாத் அவர்களின் பேரன் ஸ்ரீ கேசவ் மோஹன்லால் ஏழைகளுக்கு ஆஸ்துமா நிவாரண மூலிகை விநியோகிக்கிறார். ஸ்ரீ சம்புநாத் அவர்களுக்கு இந்த மூலிகை ஒரு சந்நியாசியால் கொடுக்கப்பட்டு கடந்த 40 ஆண்டுகளாக இலவசமாக விநியோகிக்கப்பட்டது. இத்தன்னலமற்ற சேவைக்கு அரசாங்கம் உபகாரச் சம்பளம் அளித்தது. ஆனால் இந்த நற்பணியை அவர் தன் பேரனிடம் ஒப்படைத்து விட்டு துறவியானார். தற்பொழுது இப் பணியை பேரன் நடத்துவதோடு இதற்குப் பண உதவி செய்யுமாறு தனவந்தர்களைக் கேட்டுக் கொள்கிறார். மூன்று டோஸ் மருந்து சாப்பிட்டதுமே ஆஸ்துமாவினால் அவதியுறும் பலர் நிவாரணமடைந்துள்ளனர். ஆஸ்துமாவினால் அவதியுறுபவர்கள் மூலிகைக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு ஆங்கிலத்தில் எழுதவும்.

SRI KESHAV MOHAN LAL

5, Haralaldas Lane, Jorabagan Park, West
CALCUTTA-6 (India)

எங்களுக்கு கிளை ஆபீஸ்கள் இல்லை

மேற்கு வங்காள சங்கங்கள் ரிஜிஸ்டிரேஷன் ஆக்ட 1961 ழ் நிறுவப்பட்ட பாபா ஸ்ரீ சம்புநாத் சேவா கேந்திராவினால் வியாபாரஸ்தர்கள், டாக்டர்கள், மருத்துவர்கள் அளிக்கும் நன்கொடையின் மூலம் ஆஸ்துமாவினால் அவதியுறுபவர்களின் நலனுக்காக வெளியிடப்பட்டது.

மூல நோயை

முற்றவிடாமல் நம்பிக்கையான

ஹைடன்ஸா

உபயோகித்து நிவாரணம் அடையுங்கள்;

—ரண சிகிச்சையையும் தடுங்கள்

மேல் சிதறி முகவரியை அழித்ததால் அதைக் கிழித்துவிட்டு இன்னோர் உறையை எடுத்து அதில் கடிதத்தை வைத்து ஒட்டினேன்.

...'பெண் கல்வி என்பது இந்தியாவுக்குப் புதிதல்ல. வேத காலத்தில் வேதம் படித்து ஆண்களுக்கு நிகராகக் கல்வி பயின்ற யோகினிகள் இருந்திருக்கிறார்கள். மைத்ரேயி போன்ற யோகினியர் தர்க்க சாஸ்திரத்தில் ஆண்களை வென்ற விளைவுதான் 'பெண்கள் படிக்கக் கூடாது என்று பொறாமை கொண்ட ஆண்கள் கொண்டு வந்த சட்டம்' என்று 'இந்தியாவே விழித்தெழு' என்ற புத்தகத்தில் அன்னிபெசன்ட் சொல்லியிருப்பது எனக்கு நினைவு வந்தபோது நெஞ்செல்லாம் கசந்தது.

இதுவரையில் நான் நினைத்துக்கூடப் பார்த்திராத ஒரு நிகழ்ச்சியும் என் நினைவில் தோன்றியது.

தேவராஜனுக்கும் எனக்குமிடையே புதிய உறவு தோன்றியதற்குப் பிறகு ஒரு நாள் தம் நண்பரைப் பார்ப்பதற்காக என் பிரிவுக்கு வந்த அவர், 'மிஸ் ஜமுனா! இந்திப் பரீட்சையில் தேறியதற்காக உங்களுக்கு வரவேண்டிய பரிசுத் தொகை வந்து விட்டதா?'' என்று வினவினார்.

''இன்னும் வரவில்லை'' என்றேன்.

''ஒரு ரிமைண்டர் அனுப்புவதுதானே?''

''அனுப்ப வேண்டும்.''

''இப்போதே உட்கார்ந்து முதலில் அதை எழுதுங்கள். ஆபீஸ் வேலை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்...''

நான் ஃபைலை நகர்த்தி வைத்துவிட்டுக் கடிதத்தை எழுதி முடித்தேன். 'இது போதுமா?' என்று அவரிடம் கடிதத்தைக் காட்டினேன்.

அதை அவர் படித்துப் பார்த்துவிட்டு ஒன்றுமே சொல்லாமல் சட்டென்று கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டுவிட்டுத் தாமே என் சார்பில் ஒரு கடிதத்தை வேறு பாணியில் பரபரவென்று எழுதி என்னிடம் கொடுத்து விட்டு, ''இப்படி எழுதுங்கள்'' என்றார். அவர் எழுதிய அந்தக் கடிதம் உண்மையில் என்னுடையதைவிட வன்மையாக எழுதப்பட்டிருந்தது.

நான், 'தாங்க்யூ' என்றபடி அதை நகல் எடுக்கலானேன்.

உண்மையாகச் சொல்கிறேன், நான் எழுதிய கடிதத்தை அவர் என் முகத்தில் அறைந்தாற்போல் சுக்கல் சுக்கலாகக் கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டதைப் பற்றியோ அதில் பொதிந்திருந்த அநாகரிகத்தைப் பற்றியோ இதுகாறும் நான் நினைத்துப் பார்த்ததில்லை. அவர் என்னிடம் எடுத்துக் கொண்ட உரிமை அது என்ற அளவுக்குத்தான் எண்ணி என்னுள் பெருமை கொள்ள முடித்தது. ஆனால் இப்போது அவர் எழுதியிருந்த குற்றச்சாட்டுக் கடிதம் அந்த நிகழ்ச்சியை நினைத்துப் பார்க்க என்னைத் தூண்டியதோடல்லாமல் அதை வேறு கோணத்தில் ஆராயவும் என்னை முற்படுத்தியது. என்னைச் சிறுமைப்படுத்துகிற முறையில் என் கடிதத்தை ஒரு பியூனுக்கு எதிரில் கிழித்து இவர் குப்பைக் கூடையில் போடலாமாம். ஆனால் அவர் தப்பு விடுகிற சொற்களை — அவர் மனம் புண்படாதிருப்பதற்காக — நானும் தப்பாகவே எழுத வேண்டுமாம். தம் தப்பு திருத்தப்பட்டதற்கு நன்றி கொள்ள வேண்டிய ஒருவர் நினைக்கிற நினைப்பைப் பாருங்கள்.

—இப்படியாகத்தானே எனது காதல் வாழ்க்கைக்கு நான் ஒரு நிலையான தலை முழுக்குப் போட்டேன். ஆமாம். என்னைப் பொறுத்தவரையில் தலைமுழுக்குத்தான்.

'நீங்கள் எழுதியிருக்கும் டிராஃப்ட் மிகப் பிரமாதம்' என்று ஒரு பெண்ணை ஓர் ஆண் புகழ்வதெல்லாம் அவள் மனத்தை ஈர்ப்பதற்காக அவன் செய்கிற பித்தலாட்டமே என்பது புரிந்து போய்விட்ட நிலையில் இனி யாருடைய புகழ்ச்சியிலும் நான் மயங்கிப் பல்லிளிக்க மாட்டேன்.

என் முடிவு சரிதான் என்பதை நேயர்களுக்கு உணர்த்த இன்னோர் உண்மையையும் சொல்லிவிட வேண்டுமென்று தோன்றுகிறது. அமெரிக்காவில் உள்ள அனைத்துலக கலாசாரத் தொடர்பகத்தினர் வைத்திருந்த கட்டுரைப் போட்டியில் அவரும் கலந்து கொண்டிருந்த உண்மைதான் அது. எங்களிடையே காதல் மலர்வதற்கு முன்னர் வைக்கப்பட்ட போட்டியாகும் அது. அதில் தாம் கலந்து கொண்டிருந்ததைப் பற்றி அவர் தம் கடிதம் ஒன்றில் கூறியிருந்தார். அமர்க்களமான நடையில் ஆங்கிலம் எழுதுகிற அவர் கலந்து கொண்ட போட்டியில் நானும் கலந்துகொண்டுள்ளதைப் பற்றி அவருக்குத் தெரிவிக்க என் கூச்சம் தடை செய்ததால் நான் அதை அவருக்குச் சொல்லவில்லை. இப்போது... அதில் முதற்பரிசு எனக்குக் கிடைத்திருப்பதை நினைக்கும்போது...

நீங்களும் எத்தனையோ காதல் முறிவுக் கதைகள் படித்திருப்பீர்கள். என்னுடைய காதல் விவகாரம் மாதிரி நூதனமான — உண்மை கற்பனையைவிட அதிசயமானது என்பதை விளக்கும் வகையில் அமைந்த நம்பத் தகாத — ஒன்றை எந்தக் கதையிலும் படித்திருக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன்.


மேற்கண்ட எனது சுயபுராணத்தைப் படித்த பிறகாவது நான் மணம் செய்து கொள்ளாதது குறித்துத் தங்கள் தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கும் என் அருமை நண்பர்கள் தலையைக் கலைத்துக் கொள்ளுவதை நிறுத்துவார்கள் என்று நான் எதிர்பார்க்கலாமா?



சித்திரத்திறன் சிறைவாசம்

சீனத் தலைவர் மாவோவின் சித்திரத்தைச் சுவரில் ஒட்டிய ஒரு சீன விவசாயிக்குச் சிறை வாசம் கிட்டியது! காரணம்?

பசைக்கும் பதில் அரிசிச் சாதத்தைப் பிசைந்து தடவிச் சித்திரத்தை ஒட்டிவிட்டார் விவசாயி. சாதப் பசையைத் தின்று தீர்த்த கரப்பான் பூச்சிகள் மாவோவையும் சேர்த்து விழுங்கிவிட்டன! தலைவரை அவமதித்த குற்றம் அந்த விவசாயியைச் சிறைக்கு அனுப்பி விட்டது! லிங் என்ட் — பி. ருக்மிணி.


வெப்பத்தை வென்றிட பஜாஜ் மின்விசிறிகள்.
நீங்கள் தேர்ந்தெடுக்க அற்புதமான பற்பல
பஜாஜ் வகைகள்
ஸூப்பர் டீலக்ஸ் ஸீலிங் மின்விசிறி:
ஓசைபடாத சுகமான இயக்கம்,
ஆண்டாண்டு சேவை.
ப்ரீஸ்மாஸ்டர் டேபிள் மின்விசிறி,
நாளுக்கான நலமின்ப வசதி, தங்குதடையற்ற
இயக்கம். தவிர, விசேஷ நோக்கங்களுக்குரிய
மின்விசிறிகளின் அணி வரிசை:
பெடஸ்டல், எய்ர் ஸர்க்குலேட்டர்கள், கேபின்.
இதையும் தவிர
பஜாஜ் அழகு மின்விசிறிகள்:
அழகான மூன்று மாடல்கள்: 225 மி.மீ;
400 மி.மீ; 500 மி.மீ. வீச்சு
bajaj
MEMBER
FAIR TRADE PRACTICES ASSOCIATION
பஜாஜ் எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட்
45-47, வீர் நரிமான் ரோடு, பம்பாய்-1.
இந்தியாவெங்கும் கிளைகள்



காசுக்காக அல்ல!

''மாமீ, ஜலம் கொண்டு வந்திருக்கேன்!''

இந்த அறிவிப்பு இரண்டு முறைகள் ஒலித்து விட்டது. அப்படியும் உரிய நடவடிக்கை எவரும் எடுத்ததாகத் தெரிய வில்லை. வீட்டு எசமானர் ராதாகிருஷ்ணனுக்குக் கோபம் வந்து விட்டது. காமிரா உள்ளிலே எதையோ குடைந்து கொண்டிருந்தவர் கூடத்துக்குச் சென்று அடுக்களையை எட்டிப் பார்த்தார். ஒருவரும் அங்கு இல்லை.

''ஏண்டி, எல்லாருமாகக் கொல்லையிலே என்ன பண்ண றேள்? பிந்து வந்து 'ஜலம் கொண்டு வந்திருக்கேன், ஜலம் கொண்டு வந்திருக்கேன்'னு ஒரு நாழியாக் கத்திண்டு நிக்க றான்'' எனக் கேட்டவாறு அவர் குறுக்கே நடந்து புறக்கடைக்குச் சென்றார்.

மனைவி, மக்கள் எல்லாரும் அங்கு இருந்தனர்.

''கொல்லையிலே நின்னு என்ன பண்ணறேள்? பிந்து ஜலம் கொண்டு வந்து நிக்கறான். எல்லாருமாவா இங்கே வந்தூடணும்? சமையல் உள்ளிலே ஒருத்தரையும் காணுமே?''

பதில் பேசாது, மனைவி மட்டும் உள்ளே ஓடினாள்.

''அவசரப்படாதேங்கோ, மாமா! நான் காத்திண்டு நின்னாப் பரவாயில்லே!'' என்று கூறி விட்டுத் தண்ணீர்க் காரப் பையன் உள்ளே சென்று தோளிலிருந்த குடத்தை அண்டாவில் சரித்து ஜலத்தை நிரப்பினான்.

''ஒன்னும் ஏகப்பட்ட வீடு இருக்கோல்லியோ உனக்கு? இப்படி நீ காத்திண்டு நிக்கறதா இருந்தா, நீ இப்போதைக்கு வீட்டுக்குப் போக முடியாது. இந்த வேலையை முடிச்சுட்டு.''

''பரவாயில்லே, மாமா! வீட்டுலே எனக்கு என்ன -வலே? சும்மாத்தானே இருக்கப் போறேன்?''



தங்கம் கேட்டான் — ''அடுத்த நடை எப்ப வருவே ? ரெண்டாம் குடத்தையும் புடிச்சிண்டு வந்துட்டு. மத்தவா வீடுகளுக்குப் போயேன்.''

''சரி, மாமி. நான் ஒரு நடை தெரு முழுசும் முடிச்சுட்டு, ரெண்டாம் சுத்து ஆரம்பிக்கலாம்னு நெனைச்சேன். ஏன்னு எல்லார் வீட்டிலேயும் ஒரு குடமாவது புதுத் தண்ணி இருந்தா, சமையல் ஆரம்பிக்கலாம், பாருங்கோ.''

காலிக் குடத்தைத் தூக்கித் தோளில் வைத்துக் கொண்டு அவன் கிளம்பிவிட்டான். தோள்கள் இரண்டும் தண்ணீர்க் குடம் தூக்கித் தூக்கிக் காய்த்துப் போயிருந்தன. உடலில் ஒரு கூனலும் விழுந்திருந்தது—கூனல் கூட அல்ல; முன் பக்கம் மார்புக்கு மேலே ஒரு சாய்வு. அவனையே பார்த்துக் கொண்டு நின்றார் ராதா.

உள்ளேயிருந்து குரல் வந்தது. பேசியது தங்கம்தான். ''பித்து போயிட்டானு ?.... பாருங்கோ !''

வாசலில் சின்னத் திண்ணையில் உட்கார முடியாமல் உட்கார்ந்திருந்தார் ராதா. அவர் உடம்பு சற்றுப் பெரிது.

'' ஏன் ?'' என்று ஓர் அரைக் கண்ணால் உள்ளே பார்த்தவாறு அவர் கேட்டார்.

'' சொல்ல மறந்து விட்டேன். நாளைக்கு மாமனார் சிராத்தம் ஆச்சே. கூட ரெண்டு குடம் தீர்த்தம் கொண்டு வரச் சொல்லணும். அவன் வந்தப்போ, என்னவோ யோசனையா இருந்துட்டேன். அதுதான் சொல்லணும், அவன்கிட்டே.''

ராதா அவன் வருவதை எதிர்பார்த்துக் கொண்டு அமர்ந்தார். ஒவ்வொரு வீட்டுக்கும் குறைந்தது ஏழெட்டு நிமிஷங்களாவது ஆகும். தெரு திரும்பியதும் உள்ள குழாயடியில் போய்த் தண்ணீர் பிடித்துக் கொண்டு வரவேண்டும். ஆனால், அவனைக் குழாயடியில் எவருமே காக்க வைக்க மாட்டார்கள். அநாதைப் பிள்ளை, இந்த வயதிலேயே உழைத்துச் சாப்பிடுகிறான் என்று, அவன் மீது யாருக்கும் ஒரு பரிவு உண்டு.

சும்மா சொல்லப்படாது. அவன் நடக்கவே மாட்டான். ஒரே ஓட்டம்தான். குடம் தோளில் ஏறியதுமே, ஒரு வேகம் அவனுக்கு. தீ மிதியில் ஓடுவார்களே, அந்த மாதிரியான ஓர் அசுர வேகம் அவன் நடையில் உண்டு. செக்கச் செவேரென்ற உடம்பு. மார்பு, கை, கால் எல்லாமே எலும்பும் தோலுமாகத்தான் இருப்பான். பின்னே ஏழைப் பையன் வேறு எப்படி இருப்பான் ? நெற்றியிலே ஒரு சாந்துப் பொட்டு, குளித்தாயிற்று என்பதற்குச் சாட்சியம் போல் இருக்கும். சில நாட்கள் கன்னங்களுக்கு வெளியே கீழே சந்தனமும் தீற்றியிருக்கும், கன்னங்களில்.

இதோ, பித்து வந்தாயிற்று ! சின்னத் திண்ணையில் அமர்ந்திருந்த ராதா தம்மை அவன் இடித்துத் தள்ளிவிடாமல் உள்ளே செல்ல வேண்டுமே என்று எண்ணினாற்போல், எழுந்து வழி விட்டு நின்றார். மடமடவென்று ஆவேசம் வந்தாற் போலப் பாய்ந்தான் பித்து மாதவராவ் — ஆம், இதுதான் அவன் முழுப் பெயர்.

''மாமி உன்னைப் பார்க்கணும்னு சொன்னாடா பித்து'' என்றார் ராதா.

உள்ளே குடம் தோளிலிருந்து இறங்கியது. ஜலம் கலம் மாறியது. பித்து குரல் கொடுத்தான். ''மாமி, என்னைத் தேடினேளாமே, ஏதோ சொல்லணும்னுட்டு ?''

''ஆமாண்டா, பித்து. நாளைக்கு இந்த வீட்டு மாமாவோட அப்பாவுக்கு சிராத்தம். நீ நாலு குடம் தீர்த்தம் கொண்டு வரணும். வழக்கம் போல, ரெண்டு குடம் போதாது. நான் நாளைக்கு, வாயிலே ஈ பூந்தாக்கூடத் தெரியாமக் கைக்காரியமா இருப்பேன். அதான் இப்பவே சொல்லிட்டேன்.''

''சரி, மாமி.''

பித்து கிளம்பினான்.

திரும்ப அவனிடம் தங்கம் கூறினாள். ''மத்தியானம் ஒரு மணிக்கு இலை போட்டாயிடும். சாப்பிட வந்துடு. விஷ்ணு இலையிலே நீதான் சாப்பிடணும். மறக்காமெ வந்துடு. ஒரு மணிக்கெல்லாம் பிராமணாள் சாப்பிடறச்சயே வந்துடு.''

''ஆகட்டும், மாமி!'' என்று பித்து கிளம்பினான்.

ஒரு குடத்துக்குப் பத்து காசு. குடம் என்றால், நல்ல பெரிய அளவு; முக்கால் தவலைத் திட்டம் இருக்கும். அதைத் தூக்கித் தூக்கிக் கறுத்துப் போன அவனுடைய தோள்களைப் பார்க்கையில் எவருக்குமே பரிவு சுரக்கும். ராதா ஒரு பெருமூச்செறிந்து கொண்டே உள்ளே சென்றார்.

''மாமா!'' என்று அழைத்துக் கொண்டு நுழைந்தவன் பித்துதான்.

''மாமா, வெளியிலே போயிருக்கார்டா, ராமநவமி வருஷத்துக்காக.'' தங்கம் உள்ளிருந்து வந்தாள்.

''ஒங்களுக்குத் தெரிஞ்சிருக்குமே, மாமி. வாசல்லே தெரு நெடுக எதுக்கு இப்படிக் குழி தோண்டி வச்சிருக்கா ?'' என்று கேட்டான்.

தங்கத்தின் வாயிலிருந்து வார்த்தை எதும் வரவில்லை. பித்து புறப்படும்போது, மீரா உள்ளே வந்தாள்.

''டேய், பித்து! வாசல்லே பார்த்தியா ? நம்ம தெருவிலே குழாய் வரப் போறது. அதுதான் குழி தோண்ட ஆரம்பிச்சிருக்கா. ஜம்னு எங்க வீட்டிலே குழாய் வச்சுடுவா.''

உள்ளே தங்கம் பல்லைக் கடித்தாள். ''இது ஒரு பரக்காவெட்டி, மீரா. குடுகுடும்னு போய், குழாய் வரப் போறதுன்னு அவன்கிட்டியே இதைச் சொல்லித் தொலைக்கிறதே!''

என்ன பல்லைக் கடித்தென்ன ? மீரா உண்மையைச் சொல்லியாகி விட்டதே!

''நெஜமாவா, மீரா? தெரு முழுசும் குழாய் வரப் போறதா ?'' என்று கேட்ட போது அவன் குரல் கம்மியது.

''பின்னே, நெஜமில்லாட்டா, நான் சொல்வேனா? அப்பாவும் அம்மாவும் ரெண்டு நாள் முன்னாடி பேசிண்டிருந்தா, நம் வீட்டுக்குக் குழாய் வைச்சுடலாம்னு. பெரியப்பா வீட்டிலேயும் எல்லார் வீடுகளிலும் குழாய் வைக்கறுவா !''

பித்துமாதவ ராவின் கண்கள் பளபளத்தன. அடிவயிற்றிலிருந்து அவனது கேள்வி பிறந்தது. ''உங்கப்பாவே சொன்னாளா?''


பார்கோ
உள்ளதை ஒளி கூட்டி
நீடித்து உழைப்பவை.
முழு விற்பனை ஏஜன்டுகள்:
பார்கோ சேல்ஸ் ஏஜன்ஸீஸ்
255-56, A to Z இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்
லோவர் பரேல், பம்பாய்-13

''என்னடா விஷயம் பிந்து? மீரா என்ன கதை பண்ணிண்டிருக்கா உன்கிட்டே?'' என்று கேட்டுக் கொண்டே ராதாகிருஷ்ணன் நுழைந்தார்.

அவனுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. அதோடு பேசினான்: ''மாமா! நீங்க வீட்டிலே குழாய் வைக்கப் போறேளாமே? மீரா சொன்னா.''

ராதா வாய் திறவாமல் இருந்தார்.

''மாமி ஒண்ணும் தெரியாதது மாதிரி இருந்துட்டா நான் கேட்டப்போ. மீரா சொல்லித்தான் தெரிஞ்சது நேக்கு. ஏன் மாமா, அப்படியா?''

ராதாகிருஷ்ணன் மென்று விழுங்கிப் பேசினார். ''அதெல்லாம் ஒண்ணும் இல்லேடா, பிந்து. குழாய் வரச்சே பார்த்துக்குவோம். இப்பத்தானே மண்வெட்ட ஆரம்பிச்சிருக்கா? அப்புறம் குழாய் எல்லாம் வந்தாகணும். வீட்டுக்கு வீடு கனெக்ஷன் கொடுத்தாகணும். எவ்வளவோ வேலை இருக்கு இன்னும்.''

பிந்துவுக்கு இந்தப் பேச்செல்லாம் திருப்தியளிக்கவில்லை.

''நான் வரேன், மாமா! என்ன இருந்தாலும் மீராதான் இந்த வீட்டிலே சரியா சொல்லறா!''

பிந்து சென்ற திக்கையே பார்த்துக் கொண்டு ராதாகிருஷ்ணன் நின்றார்.

வீட்டுக்கு வீடு குழாயெல்லாம் வந்தாயிற்று. வீதிக்கே தண்ணீர்ப் பையனாக இருந்த பிந்துமாதவ ராவ் வேலை போய் நாலைந்து நாட்கள் பிரமை பிடித்தவன் போல் அனுதைக்குத் தெய்வம் துணை என்ற கதையாக ஆஞ்சநேயர் ஆலயத்தோடு முடங்கிக் கிடந்தான். ஒரு நாள் தமிழ்ப் பத்திரிகையிலே செய்தி வாசித்தான். பாகிஸ்தானுக்கும் பாரதத்துக்கும் போர் மூண்ட சமயம். பட்டாளத்துக்கு ஊர் ஊராக ஆள் எடுப்பதைக் கண்ட அவன் கண்களில் ஓர் ஒளி பிறந்தது.

ஒரு நாள் ''ராதா மாமா'' என்று அழைத்துக் கொண்டு அவன் அவர் வேலை செய்யும் பாங்கிலேயே அவர் எதிரே சென்று நின்றான். ரூபாய் நோட்டுக்களை எண்ணியவண்ணம் இருந்த காஷியர் ராதா நிமிர்ந்து உட்கார்ந்தார்.

''என்ன பிந்து?''

''மாமா! நாளைக்காக் கச்சேரிக்குப் போனேன். அங்கே பட்டாளத்துக்கு ஆள் பொறுக்கிற அதிகாரிகள் வந்திருந்தா. என்னே எடுத்துக்கறேன்னு சொல்லியிருக்கா.''

ராதாகிருஷ்ணனுக்கு வியப்பாக இருந்தது. ''உன்னையா?''

''ஆமாம், மாமா. இதைப் பாருங்கோ. இந்தப்பாரத்தை எழுதிண்டு வரச்சொன்னா.''

ராதா வாங்கிப் பார்த்தார்.

பிந்து நாத்தழுதழுக்கப்பேசினான். ''மாமா! பாக்கி யெல்லாம் எழுதிட்டேன். நெருங்கிய உறவினர் விலாசம்னு கேட்டிருக்கு பாருங்கோ, அதுதான் எழுத முடியல்லே. ஸ்ரீஆஞ்சநேயஸ்வாமி அக்ரகாரம்னு எழுதலாமான்னு கேட்டேன். அவர் கூடாதுன்னு சொல்லிச் சிரிச்சார். உங்ககிட்டே ஓடி வந்தேன் மாமா! ஒங்களை நான் வேறொண்ணும் கேட்கலே மாமா. நான் அனுதை பாருங்கோ. அதுனலே நீங்க சம்மதிச்சா, ஒங்களோட பேரை அங்கே போட்டுப்பேன், 'ராதா மாமா, சீப்-காஷியர்'னுட்டு. அதுனலே உங்களுக்கு ஒண்ணும் தொந்தரவு இருக்காது. நான் நாளைக்குச் செத்துக்கித்துப் போயிட்டா ஒங்களுக்குக் காயிதம் வரும். ஏதாவது மானியம்கூட வருமோ என்னமோ?''

ராதாகிருஷ்ணன் தலையை அசைத்தார். ''அவ்வளவுதான்மாமா நேக்குவேண்டியது.''

பிந்து மாதவ ராவ் ஓடினான். காஷியர் மீண்டும் பணக் கட்டுக்களில் புகுந்தார்.

''மாமா...மாமா!''

இரவுச் சாப்பாடு நடந்து கொண்டிருக்கும் போது வாசற் கதவு தட்டுண்ட ஓசை வந்தது.

ராதாகிருஷ்ணனுக்கு அந்தக் குரல் பிந்துவினுடையது என்று உடனே தோன்றியது. தங்கம் போய்க் கதவைத் திறந்தாள்.

வந்து நின்றது பிந்துதான். ஓராண்டு கழித்து மீண்டும் அவர்கள் எதிரே வந்து நின்றான்.

''வா, பிந்து, வா!''

''வந்திருக்கேன், மாமி.''

கதவைத் தாளிட்டுக் கொண்டு, அவன் பின்னோடு உள்ளே நுழைந்தான்.

''மாமா, பாரதி—மீராவெல்லாம் சௌக்யமா?''

''சௌக்யம்தான். வா உள்ளே. எல்லாரும் சாப்பிட்டிண்டிருக்கா.''

''மாமா, நமஸ்தே!'' என்று பிந்து கரம் கூப்பினான்.

மீரா கூவினாள் — ''மேஜர் பிந்து மாதவ ராவ் வந்துட்டார் — பாகிஸ்தான் பட்டாளத்தை யெல்லாம் தோக்கடிச்சுட்டு!''

பிந்து சிரித்துக் கொண்டே சொன்னான்— ''ஆமாம், மீரா. நெஜமாகவே பட்டான் கோட் போர் முனையிலே நம்ம நாட் விமானமெல்லாம் என்ன சக்கைப் போடு போட்டுது, தெரியுமா? நீங்கள்ளாம் பத்திரிகையிலே படிச்சிருப்பேளே?''

தங்கம் ஒரு பலகையைப் போட்டாள். ''ஒக்காந்துக்கோ, பிந்து.''

''அதெல்லாம் வேண்டாம், மாமி!''


''ஒனக்கு இப்ப லீவா? எத்தனை நாட்கள் லீவிலே வந்திருக்கே?'' என்றாள் தங்கம்.

மணங் கமழும் மலரோவியம்

காகிதப் பூ மணக்காது. ஆனால் மணம் கமழும் மலர்களை சித்திரத்தில் தீட்டமுடியும்!

ஏதென்ஸ் (கிரீஸ்) நகரில் அண்மையில் விற்பனையான ஓர் ஓவியம் பார்க்க அழகாக இருந்ததுடன் இனிய நறுமணமும் வீசியதாம். கிரேக்க பெயிண்ட் தயாரிப்பாளர் ஒருவர் மணம் வீசும் பெயிண்ட் வகைகளைத் தயாரித்து வருகிறார். அந்த வண்ணங்களைக் கொண்டு தீட்டிய ஓவியம் மணம் கமழக் கேட்பானேன்?

இனி ஓவியர்கள் கண்கவர் வனப்புடன் மலர்களைச் சித்திரம் தீட்டலாம் - மணம் கமழும் வகையில்! வீக் எண்ட்-ரா. பா.



''வீடு இவு ஒன்னும் இல்லே மாமி, வெறுமனேதான் வந்தேன்'' என்றான் பிந்து.

''வெறுமனேதான்னு?'' என்று தங்கம், திரும்பக் கேட்க, பிந்து மெதுவாகக் கூறினான்: ''இப்பத்தானே வந்திருக்கேன். நிறையச் சொல்றதுக்கு இருக்கு மாமி. நான் போர் முனையிலே பார்த்தது, போனது வந்தது எல்லாம் சொல்ல வேண்டாமா?''

அவன் பேச்சு புதிராய் இருந்தது.

ஏதோ நினைத்துக் கொண்டவள் போல், தங்கம் அவனை, ''வெறுங்கையாவா வந்தே பொட்டி—சட்டி எல்லாம் எங்கே?'' என்று கேட்க, ''பார்த்தேளா? மறந்துட்டேன். வாசல்லியே வச்சுட்டு வந்துட்டேன். இருக்கான்னு பார்த்துட்டு வரேன்'' என்று கூறி அவன் எழுந்து நடந்தான்.

தங்கத்தின் கண்கள் திகைப்பில் அகல விரிந்தன. இதுவரை பேசாதிருந்த ராதா கிருஷ்ணனும் வாய் திறந்தார். ''என்னடா இது, பிந்து? நொண்டறியா, என்ன?'' என்று அவர் கேட்டதும், அவன் புன்முறுவலுடன் பேசினான்.

''ஆமாம், மாமா! நான் அதெல்லாம் தான் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லிக்கலாம் மெதுவான்னு நெனச்சேன். நீங்க அதுக்குள்ளே கேட்டுட்டேள்.''

இடது காலில் 'விழி'க்குக் கீழே ஒரு பெரிய வடு தெரிந்தது.

''இங்கே ஒரு குண்டு பட்டுக் கால் எலும்பு முறிஞ்சு போயிடுத்து மாமா. அதுனாலேதான் நொண்டறேன். பட்டான்கோட் போர் முனைக்குப் போனேன்கறதை நீங்க நம்பறது மோல்லியோ? அதுக்காக ஸ்வாமி இப்படிப் பண்ணிருர் போலிருக்கு. அதுனாலே இனிமே நான் ராணுவத்திலே வேலே செய்ய முடியாதுன்னு என்னே அனுப்பிட்டா மாமா. இதுக்காக நேக்குப் பென்ஷன் மட்டும் கொடுப்பா — ஆயிசுக்கு.''

தங்கம், பாரதி, மீரா மூவரும் அவன் காலையே நோக்கினர். ராதாகிருஷ்ணன் அவன் முகத்தையே கவனித்தார்.

''நேக்கு க்ளாஸ் டூ மெடல் ஒன்னு தரப் போறு, மாமா. எங்க டிவிஷனல் கமாண்டிங் ஆபீஸர் ரெகமெண்ட் பண்ணிப் போயிருக்கு'' என்று அவன் பெருமையோடு பேசியது எதுவுமே அவர் காதில் விழவில்லை. கால் காயத்திலேயே அவர் ஊன்றியிருந்தார்.

ராதாகிருஷ்ணன் திண்ணையில் உட்கார்ந்திருந்தார். முகத்தில் ஒரே விசாரம் மண்டிக் கிடந்தது. தங்கம் பக்கத்திலேயே நின்ற நிலையில் இருந்தாள். நொண்டி நொண்டி நடந்து சென்ற பிந்து, ''மாமா'' என்று அழைத்து நின்றான். ''என்ன மாமா, ஒரு மாதிரியா இருக்கேள்?'' என்று அவன் கேட்க, அருகில் நின்ற தங்கம் முந்திக் கொண்டு பேசினாள்: ''நாளைக்கு மாமாவோட அப்பா திவசம் நடக்கணும்டா, பிந்து.''

''சரி'' என்று மேலே என்ன என்று கேட்கிறவன் போல் பிந்து நின்றான்.

''இப்பன்னு பார்த்து, எங்க ரெண்டு வீடுகளுக்கும் வர தண்ணி பைப்லே ஏதோ கோளாறும். ஒரு சொட்டு நல்ல தண்ணி கிடையாது. நாளைக்கு என்ன பண்ணறதுன்னு புரியலே. காரியங்க ளெல்லாம் நடந்தாகணும்.''

என்ன அர்த்தத்தோடு தங்கம் இவ்வளவையும் அவனை அழைத்துக் கூறினளோ?

அவன் இயல்பாகக் குதித்துக் கொண்டு சொன்னான்: ''நீங்க கொஞ்சம் கூடப் பயப்படாதேங்கோ, மாமா. நான் பார்த்துக்கறேன். எட்டுக் குடம் வேணாலும் கொண்டு வந்து தரேன். தீர்த்தம் ஒங்களுக்கு வேண்டியது, அவ்வளவுதானே மாமி?''

தங்கம் மனநிறைவோடு ''என்னவோ உன் புண்ணியத்துலே நாளைக்கு எல்லாம் சரியா நடந்தால் சரி'' என்று முடித்தாள்.

அவன் கிளம்பினான்.

ராதா அவனை நிறுத்திச் சொன்னார்: ''அப்படியே விஷ்ணு இலேலே சாப்பிடறதுக்கும் வந்துடு. மறந்துடாதே.''

மறுநாள் அவன் குடம் குடமாகக் குடிநீர் கொண்டு வந்து அண்டா—கங்காளம் எல்லாம் நிரப்பித் தந்தான். கடைசியில் விஷ்ணு இலையில் சாப்பிடவும் செய்தான்.

சாப்பிட்டுவிட்டுக் கைகழுவ அவன் குழாயடிக்குச் சென்றான்.

தங்கமும் அவள் கணவரும் கசமுசவென்று ஏதோ பேசிக் கொண்டனர். தங்கம் உள் அறையில் போய் ஏதோ எடுத்தாள்.

அதற்குள் பிந்து கை கழுவிக் கொண்டு வந்தான்.

''வரட்டுமா, மாமா. வரேன் மாமி'' என்று அவன் விடை கூறினான், கிளம்புகிற முறையில்.

''ஒரு நிமிஷம் இரு, பிந்து. மாமி ஏதோ கொண்டு வரா'' என்றார் ராதா.

பிந்து நின்றான்.

தங்கம் தட்டு ஒன்றை ஏந்தி வந்தாள். ''இந்தாங்கோ, பிந்துவுக்குக் கொடுங்கோ இதை.''

''நீயேதான் கொடேன்'' என்றார் ராதா.

தட்டில் நாலு வெற்றிலே, இரண்டு பாக்கு இருந்தன. கூட ஒரு வெள்ளி அரை ரூபாய் நாணயம் கண்ணைப் பறித்தது.

''இந்தா, பிந்து, எடுத்துக்கோ.''

''என்ன, மாமா இதெல்லாம்?''

''எடுத்துக்கோ, பரவாயில்லே.''

''என்னத்துக்குக் காசு?''

தம்பதி இருவரும் விழித்தனர். தங்கம் துணிந்து விளக்க முற்பட்டாள். ''உன் ஒத்தாசை இல்லாட்டா இன்னிக்குத் திவசமே நடந்திருக்காது. நீ கொஞ்சமாவா தண்ணி கொண்டு வந்து கொட்டி யிருக்கே?''

பிந்து மாதவ ராவ் பேசினான்: ''மாமா! அந்தக் காலத்திலே இந்தக் காசுக்காகத்தான் நான் வீடு வீடாத் தண்ணி கொண்டுவந்து கொட்டினேன். நான் ஒப்புக்கிறேன். அதை நான் இல்லேன்னு மறைக்கலே. ஆனு, இன்னிக்கு நான் ஒரு உபகாரமா இந்த வீட்டுத் தாத்தா சிராத்தத்துக்கு ஒரு கைங்கரியமா நெனச்சுத்தான் செஞ்சேன். நீங்களும் மாமியும் நெனைக்கிறபடி காசுக்காக இல்லே.''

விருட்டென்று கூறிவிட்டு விந்தி விந்தி நடந்து சென்றுவிட்ட அவனைப் பார்த்துக் கொண்டு நின்றனர் தங்கமும் ராதாவும்.

மாதங்களில் பழமொழிகள்

[ஆவணி புரட்டாசி மாதங்கள் பற்றிய பழமொழிகள் எழுதி அனுப்புமாறு நேயர்களைக் கேட்டிருந்தோம். வந்த பழமொழிகளில் அபூர்வமாகவும் சுவாரசியமாகவும் இருந்த சிலவற்றைப் பரிசுக்குரியனவாகத் தேர்ந்தெடுத்துக் கீழே பிரசுரித்துள்ளோம்.

— ஆசிரியர்]

அறுநான்கில் பெற்ற
பிள்ளையும் ஆவணி
ஐம்மூன்றில் நடுகை
யும் அநுகூலம்.

-- ரமா ராமநாதன்

★

ஆவணி மருதாணி
அரக்காய்ப் பற்றும்.

-- லீலா நாகராஜன்





ஆவணி மாதம்
தாவணி
போட்டவள்
புரட்டாசி மாதம்
புருஷன் வீடு
போனாளாம்.

-- எஸ். விஜயராஜன்

★

பொல்லாத காலம்
சொல்லாமல் வரும்
புரட்டாசியிலே.

-- பெ. க. இளகராசன்


உனக்குக் கொடுப்
பேனு ஒரு காசு
நெற்றேடு போச்சுது
புரட்டா(சி)சு.

-- ஆர். சுப்பிரமணியன்

★

புரட்டாசி மாதத்தில்
கோவிந்தா என்ற
குரலுக்குப் பஞ்சமா?

-- வே. லலிதா





ஆவணி பறந்தால்
புரட்டாசி வரும்.
தாவணி பறந்தால்
புடவையாசி
(புடவையாசை)
வரும்.

-- ராஜு

★

புரட்டாசிச் சம்பா
பொன்போல்
விளையும்

-- டி. உ. உலகநாதன்

வேதபாடசாலைக்கு வித்தியார்த்திகள் தேவை

1953-ம் ஆண்டிலிருந்து திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாச்ரமத்தில் நடைபெற்றுவரும் வேத பாடசாலையில் இவ்வாண்டு முதல் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களுக்கு ஒரு புது சலுகை தரப்படும். அவர்களுக்கு இலவச உணவு, இடவசதியுடன் மாதம் ரூ. 25/- வரையில் யுக்தம் போல் தீர்மானித்து உபகார சம்பளமாகக் கொடுக்கப்படும். சேருவதற்கு முன்னர் அவர்களுக்கு உபநயனம் ஆகி இருக்க வேண்டும். எட்டு வயது முதல் பன்னிரண்டு வயதுள்ளவர்களே சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். சேர விரும்புவோர்கள் பெயர், வயது, ஊர், பெற்றோர்களின் விபரம் முதலியவற்றுடன் மே மாத இறுதிக்குள்: தலைவர், ஸ்ரீ ரமணாச்ரமம், திருவண்ணாமலை என்ற முகவரிக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.



V. B. J. எலக்ட்ரிகல்ஸ் ஸ்தாபனத்தின் பங்குதாரர் ஸ்ரீ A. N. விஜயராகவன் அவர்களுக்கும் -

பாபநாசம் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மிக்கும் கும்பகோணத்தில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!



எண்ணத்திலே இருந்தவன்

காடவன்

அந்தத் தெருவின் கடைசியில் ஒரு குளம் உண்டு. அந்தக் குளத்துக்கும் கிழக்காய் முன்பு பரந்து கிடந்த ஒரு இடம் இன்று கட்டுக்கோப்பான குடியிருப்பு மனையாக மாறி விட்டிருந்தது. அம்மனையில் அமைந்திருந்த மிக நவீனமான புதிய வீடொன்றின் முகப்பில் — முன் வராந்தாவில்—கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு கொஞ்சம் ஆழ்ந்த சிந்தனையோடு அப்படியும் இப்படியுமாய் நடந்து கொண்டிருந்தான் சாமியப்பன்!

சாமியப்பனுக்கு வயது நாற்பத்தைந்து இருக்கும். அவன் மனைவிக்கோ வயது இருபத்தைந்துதான்! அவளுடைய தாயார் அசல் மலாய்க்காரி! தகப்பன் தமிழ் நாட்டைச் சேர்ந்தவன். அவர்களை முறைப்படி கல்யாணம் செய்து கொண்டவர்கள் என்று சொல்ல முடியாது. அவர்களுக்குப் பிறந்தவள்தான் பாப்பா.

சாமியப்பனும் பாப்பாவும் முறைப்படி கல்யாணம் செய்து கொண்டவர்கள்தான். இதில் ஆச்சரியம் என்னவென்றால் சாமியப்பனைப் பாப்பா காதலித்தாள் என்பதுதான்.

சாமியப்பன் தோப்பு வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தான். பல ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் அவன் அந்தக் கிராமத்தில் கால்நடையாய் நடக்கிறான்.

இடக் கையில் விலை உயர்ந்த கடிகாரம் அணிந்திருந்தான் அவன். இரு கைகளின் விரல்களிலும் அபூர்வ வேலைப்பாடுகள் கொண்ட மோதிரங்கள் மின்னின!

சாமியப்பன் நின்று ஒரு திசைக்கு அப்படியே நேராய்த் திரும்பி விடாமல் சற்று வளைந்தாற்போல் நின்று கொண்டு முகத்தை மட்டும் சரி நேராய்த் திருப்பி அந்தத் தெருவைப் பார்த்தான். அதோ... அதுதான் மேட்டுத் தெரு! ஐந்தாறு வயல்களுக்கு அப்பால் காளியம்மன் கோயிலுக்குக் கிழக்காய் அப்படியே இருக்கிறது அது! அவன் பார்வைக்கு ஒரு வரிசை வீடுகளுள் கொஞ்சம் உயரமான இரண்டு மூன்று வீடுகளும் தென்பட்டன. அந்த... அந்தப் பெரிய வீடுதான் மைனருடையது. கொஞ்ச நாட்களுக்கு முன்பு வரை அது ஒன்றுதான் அவ்வூரிலேயே பெரிய வீடு!

அவன் நின்றுகொண்டிருந்த அந்த மண் பாட்டையின் வலப்புற இறக்கத்தில் இருந்த அத்தனை வயல்களும் இன்றைக்கும்கூட மைனருக்குத்தான் சொந்தம்! ஆனால்... இப்போது சாமியப்பன் அதற்கு நேர் எதிர்ப்பக்கத்தைப் பார்த்தான். சிரிப்புச் செல்வச் செழிப்பின் மலர்ச்சியாய் அவன் முகத்தில் ஏற்பட்டது. சாமியப்பன் நடக்கத் தொடங்கினான்.

அவன் பத்து அடிகள்கூட நடந்திருக்க மாட்டான். எண்ணங்கள் பின்னோக்கி ஓடின.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பும் அந்தக் கிராமம் இன்றிருப்பதைப் போலவேதான் இருந்தது. அன்று இல்லாதது எதுவும் இன்று வந்துவிடவில்லை அவ்வூருக்கு.

சாமியப்பன் அப்போது வெறும் கூலிக்காரன்தான். விவசாய வேலைகள், தோட்ட வேலைகள் ஆகியவை அவனுக்கு நன்கு தெரியும்.

சாமியப்பனுக்குச் சொத்து என்று ஒரு குடிசைதான் இருந்தது. அவனுக்கு மனைவியும் மகன் ஒருத்தியும்கூட இருந்தனர்.

அவன் யாரிடமும் சிரித்துத்தான் பேசுவான். தான் சமைத்த சோற்றிலேயே கல் பொறுக்கும் சுபாவமும் அவனிடம் உண்டு. சாமியப்பனுக்கு வேலை கிடைத்துக் கூலியும் கிடைக்கும் நாட்களில் எல்லாம் மறக்காமல் அவன் ஒரு பூந்திப் பொட்டலமும் இரண்டு பாயும் புலிமார்க் சுருட்டுகளும் வாங்கிச் செல்வான். அவையனைத்தும் அவனுடைய மனைவிக்கு. அவள் எப்போதாவது சுருட்டு பிடிப்பாளாம்!

சாமியப்பனிடம் ஒரு விசேஷமும் இருந்தது. அவன் யாரிடமும் கடன் கேட்கமாட்டான். இருந்தால் சாப்பிடுவான், இல்லாவிட்டால் அப்படியே முடங்கிக் கிடப்பான். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் ரத்தினம்தான் அவனுக்கு உதவுவான் — அல்லது அவனுக்கு உதவும் பொருட்டுக் கடுமையாய் முயற்சி செய்வான்.

மேட்டுத் தெரு மைனருக்கு ஆரம்பத்தில் கொஞ்சம்தான் நிலம் இருந்ததாம். மைனர் தன் நிலத்துக்குப் பக்கத்து நிலக்காரர்களாய்ப் பார்த்து — அவர்களுள் திருப்பிக் கொடுக்க முடியாதவர்களாய்த் தேடிப் பிடித்து — கடன் கொடுத்தாராம். கொஞ்ச நாட்களில் தன்னிடம் கடன் பெற்றிருந்தவர்களை — அந்தப் பக்கத்து நிலக்காரர்களை நிர்ப்பந்தப்படுத்தி, ஒன்றுக்குப் பாதியாய் அவர்களுடைய நிலங்களுக்கு விலை பேசி அவற்றையும் தம் நிலத்தோடு சேர்த்துக் கொண்டு விட்டாராம். தொடர்ந்து இப்படிச் செய்து செய்தேதான் அவர் பணக்காரர் ஆனாராம்.

சாமியப்பன் இவ்விஷயத்தை மிக அழகாய்-வெகு அநாயாசமாய் — எல்லாரிடமும் சொல்லிக் கொண்டிருப்பான். இது மைனர் காதுகளையும் எட்டிவிட்டிருந்தது.

அப்போது சாமியப்பனின் மனைவி கர்ப்பிணியாயிருந்தாள். முதல் இரண்டும் பிறந்த உடனேயே போய் விட்டன. மூன்றாவதாய்ப் பிறந்த பெண் குழந்தை இருக்கிறாள். இது அவனுக்கு நான்காவது குழந்தை.

பக்கத்து ஊர்ச் சுகாதார நிலையத்துக்கு அவளை அழைத்துச் சென்றான் சாமியப்பன். அங்கே மருந்து எழுதிக் கொடுத்து வாங்கி வருமாறு சொல்லி விட்டனர். அது சாமியப்பனுக்கும் "சரிவர" வேலை கிடைக்காத நேரம். அவன் தவித்துக் கொண்டிருந்தான்.

அப்போது ரத்தினம் ஓடி வந்து, "அண்ணே! நாலும் நாலு இடத்திலே கேட்டுப் பார்த்தேன். எல்லாரும் கையை விரிச்சிட்டாங்க. கடைசியிலே ஒரு முடிவுக்கு வந்து, என் பெண்டாட்டியின் தாலியை விற்று இந்தப் பணத்தை வாங்கிக்கிட்டு வந்தேன். என்கிட்டே விற்கிறதுக்கு அது ஒண்ணுதான் இருந்தது. எப்படியும் அண்ணி உடம்பு முக்கியமில்லையா...?" என்று சொல்லிக் கொண்டே மூன்று பத்து ரூபாய் நோட்டுக்களைச் சாமியப்பனிடம் கொடுத்தான்.

அவற்றை வாங்கிக் கொண்ட சாமியப்பனுக்கு அப்போது கண்கள் ஒரு முறை கலங்கின. நட்புக்கு இலக்கணமாக விளங்கின, ரத்தினத்தின் குணங்கள்.

"ரத்தினம்! நீ மனுஷன் இல்லேப்பா!" சாமியப்பன் உணர்ச்சி வசப்பட்டுக் கூறினான்.

ரத்தினம் கொடுத்த பணம் மருந்து மாயம் என்று செலவழிந்துபோன உடனேயே — அப்பணத்தில் ஒரு காசுகூட மிச்சமில்லாத நேரத்தில் — அவனுடைய மனைவிக்குப் பிரசவ வேதனை கண்டது!

உள்ளூர் மருத்துவச்சி வந்து பார்த்து விட்டுக் கையை விரித்து விட்டாள். உடனடியாய் டவுன் பெரிய ஆஸ்பத்திரிக்கு அவளைக் கொண்டு போகும்படியும் யோசனை சொல்லி விட்டாள்.

"ரத்தினமும் ஊரில் இல்லையே!" அந்த நினைவே சாமியப்பனுக்கு மனத்தின் தவிப்பை அதிகப்படுத்தியது.

அது நள்ளிரவு நேரம். குடிசைக்கு முன்னால் நின்று கொண்டிருந்த சாமியப்பனை குடிசைக்கு உள்ளிருந்து அவனுடைய அருமை மனைவியின் பயங்கரமான ஓலம் அலை அலையாய்ப் புரண்டு வந்து தாக்கி அவனது புலன்களைப் பேதலிக்கச் செய்து கொண்டிருந்தது. வெளியிலும் சில்லென்ற காற்று வீசியது.

இனியும் தாமதித்துக் கொண்டிருந்தால் முடியாது என்பதை உணர்ந்து கொண்ட சாமியப்பனுக்கு உடனடியாய் ஒரு நினைவு ஏற்பட்டது.

"மேட்டுத் தெரு மைனர்....! மைனர்... மைனர்.....!"

அந்த ஊரிலேயே மைனர் ஒருவரிடம் தான் எந்த நேரத்திலும் பணம் இருக்கும்.

சாமியப்பன் மைனரைத் தேடி நடந்தான்.

அப்போது மைனர் தம் மனைவி வசிக்கும் மேட்டுத் தெரு வீட்டில் இருக்கமாட்டார் என்பது அவனுக்குத் தெரியும். தோட்டத்துக் கட்டடத்தில்தான் இருப்பார். இரவில் தோட்டத்து வீட்டில் அவர் தனியாகவும் தங்க மாட்டார்.

சாமியப்பன் அந்தத் தோட்டத்தை அடைந்து, 'கேட்'டுக்கு முன்னால் நின்று கொண்டு, "துரை ஐயா, துரை ஐயா!" என்று கொஞ்சம் அவசரப் பதற்றத்தோடு மைனரை அழைத்தான். மைனர் வரவில்லை.

"துரை ஐயா! மைனர் துரை ஐயா!" அவன் இப்போது சற்று உரக்கவே குரல் கொடுத்தான்.

கொஞ்ச நேரம் கழித்து வெளியே வந்த மைனர் பேசவில்லை. சாமியப்பன்தான் முதலில் பேசினான்.

"மைனர் ஐயா, என் பெண்டாட்டி பிரசவ வேதனையாலே கஷ்டப்பட்டுக்கிட்டிருக்காள். டவுன் ஆஸ்பத்திரிக்குத்தான் கொண்டு போகணும்னு மருத்துவச்சியும் சொல்லி விட்டாள். கையிலே பணம் இல்லே! நீங்கதான் ரூபாய் முப்பதோ நாற்பதோ கடனாய்க் கொடுத்து உதவணும்.... உங்க வண்டியும் வேணுங்க!"

மைனர் முகத்தில் மிக அழகான—அதிநுட்பமான மெல்லிய புன்னகை ஒன்று ஏற்பட்டது.

சாமியப்பன் தன் கைகளைக் குவித்து அவரைக் கும்பிட்டபடியே தழுதழுத்த குரலில், "எஜமான்....!" என்றான்.

"ஏன்டா, கூழைக் கும்பிடு போடுற பிச்சைக்கார நாயே! கடைசியிலே பணத்துக்கு என் கிட்டே தானே வந்திருக்கே!"

"எஜமான், என் பெண்டாட்டிக்குப் பத்து நாளாகவே உடம்பு சரியில்லே! ரத்தினம்

தான் தன் பெண்டாட்டியின் தாலியைவிற்றுக் கொஞ்சம் பணம் கொண்டு வந்து கொடுத்தான். அதிலேதான் மருந்து மாயம்னு வாங்கினேன்.... இப்போ உங்களைத்தான்.... நம்பி .... வந்திருக்கிறேன்...! எஜமான்...!''

மைனரது முகத்தின் புருவங்கள் இரண்டும் மேல் உயர்ந்தன.

'' ஏன்டா, அவன் பெண்டாட்டியின் தாலியை வித்தாச்சு; உன் பெண்டாட்டியின் தாலி அவள் கழுத்திலேயேதானே கிடக்கு! இப்போ அதை வித்துப் பணம் சம்பாதிச்சுக்கோயேன் !''

உள்ளிருந்து 'களுக்'கென்ற சிரிப்பொலி கேட்டது. பெண் ஒருத்தியால்தான் அப்படிச் சிரிக்க முடியும்.

''மைனர்......!''

''ஊரான் பெண்டாட்டித் தாலி பெரிசில்லே, உன் பெண்டாட்டித் தாலி மட்டும் பெரிசா? அதையும் என்கிட்டேயே கொண்டு வந்துடாதே, நான் ஒன்னுக்குப் பாதியாத்தான் விலை கேட்பேன்.''

''ஏய், மைனர் !''

அடுத்த விநாடியே மைனர் சாமியப்பனின் கன்னத்தில் ஓங்கி அறைந்தார். அவன் கழுத்தையும் பிடித்து தெட்டித் தள்ளினார். சாமியப்பன் காம்பௌண்ட் 'கேட்'டில் போய் விழுந்து முட்டிக் கொண்டான்.

''ஏய், ராஸ்கல்! ஏய்... ராஸ்கல்! உன்னே உன்னே.......!''

யார் எப்படிப் போனால் அதற்கென்ன....! பொழுது மெல்லப் புலர்ந்து கொண்டிருந்தது.

ரத்தினம் வந்து விட்டான். சாமியப்பன் அவனிடம் இரவில் நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் சொல்லி அழுதான்.


''அவன் கிடக்கிறான், அண்ணே! நீ எதுக்கும் கவலைப்படாதே ! இதோ, ஒரு நொடியிலே வண்டி கொண்டாந்துடறேன்!''

ரத்தினத்திடம் அப்போது பணம் இருந்தது. முதல் நாள் காலையில் வாழைக்காய் வியாபாரி ஒருத்தனுக்காக அவன் டவுன் சந்தைக்குப் போயிருந்தான். வாழைக்காய் விற்ற பணம் அவனிடம்தான் இருந்தது. அதில் பத்து ரூபாய் அவனுக்குச் சேர வேண்டும். இன்னும் பத்தோ இருபதோ அதிகமாக அதில் எடுத்துக் கொண்டாலும் குற்றமில்லை என்பது அப்போதைய அவனது எண்ணம். வாழைக்காய் வியாபாரிக்குப் பதிலாய்த் தானே இரண்டு வாரங்கள் சந்தைக்குப் போய் வந்தாலே அந்தக் கடன் அடைந்து விடும் என்ற நினைப்பு அவனுக்கு !

சாமியப்பனும் ரத்தினமும் மரகதத்தை அழைத்துக் கொண்டு டவுன் ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டனர். அப்போது என்னவோ, அந்த வண்டியில் பூட்டப்பட்டிருந்த காளைகள் அவர்களின் மன அவசரத்துக்குத் தகுந்தாற் போல் வேகமாய் ஓடவில்லை.

அன்றைக்கு மறுநாள் இரவில் சாமியப்பனும் ரத்தினமும் அதே வண்டியில் ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். அவ்வண்டியில் பூட்டப்பட்டிருந்த காளைகள், இப்போது சுமைக் குறைவாலோ என்னவோ வேகமாய் ஓடிக் கொண்டிருந்தன. மரகதம் அந்த வண்டியில் இல்லையே !

'' இந்தியாவில் வோட்டுப் போட்டவர் கணக்கு இது தான் -- நான்கு பேர் வோட்டர்கள் என்றால், ஒருவர் இந்திராவுக்குப் போட்டார். ஒருவர் வேறு யாருக்கோ போட்டார். இரண்டு பேர் வோட்டுப் போடவே இல்லே.''
(எம். ஆர். மசானி) -- பாபு



நாள் வரும், போகும்; அவ்வளவே! ஆனால் அதுதான் மனிதருக்கு வாழ்நாள்.

இப்போது சாமியப்பன் தன்னுடைய மக்களுக்காகவே தான் வாழ்வதாய் ஊரில் சொல்லிக் கொண்டிருந்தான். அவனுக்கு வேலைகளும் அதிகம்தான்.

ரத்தினத்துக்கும் கஷ்டங்கள் இருந்தன. ஆனால் அவனுக்குச் சாமியப்பனின் கஷ்டங்களே மனத்தில் சுழன்று சுழன்று வந்து கொண்டிருந்தன.

சாமியப்பனுக்குத் தூரத்து உறவினர் ஒருவர் டவுனில் செல்வச் செழிப்போடு வாழ்ந்து கொண்டிருந்தார். அவருக்குச் சாமியப்பனை உறவுமுறையோடு தெளிவாய்த் தெரியும் என்று சொல்ல முடியாது. ஆனால் யாரேனும் ஞாபகப்படுத்தினால் புரிந்து கொள்ளக் கூடியவர்தான் அவர்.

சாமியப்பன் எப்போதுமே அவரிடம் போக மாட்டான். இப்போது சாமியப்பனுக்காக ரத்தினம் அவரிடம் சென்றான். அவருடைய சகோதரர் ஒருவர் சிங்கப்பூரில் இருந்தார்.

கொஞ்ச நாட்களுக்கெல்லாம் சாமியப்பனும் சிங்கப்பூருக்குப் பயணமானான்.

வியாபார கேந்திரமான ஒரு பகுதியில் மிகச் சிறிய ஓரிடத்தை வாடகைக்குப் பிடித்துக் கொண்டு விளையாட்டுச் சாமான்களை வாங்கி வைத்துக் கொண்டு விற்கத் தொடங்கினான் சாமியப்பன். கொஞ்ச நாட்களுக்கெல்லாம் அவனுக்கு அதிர்ஷ்டத்தில் நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. சிறிய இடம் பெரிய இடமாக மாறியது. அவன் தன் கடைக்கென்று பையன்களையும் பெண்களையும்கூட அமர்த்திக் கொண்டான்.

ஒரு முறை சாமியப்பன் லாபக் கணக்கு பார்த்தான். இதுவரை சொந்த மண்ணில் ரத்தினத்தின் குடிசையில் வளர்ந்து கொண்டிருந்த தன் மகனை, இனியும் அங்கு விட்டு வைத்திருக்கக் கூடாது என்று எண்ணித் தன்னைச் சிங்கப்பூருக்கு அனுப்பிய டவுன் உறவினரின் மூலமாகவே தன்னிடம் அழைத்து வைத்துக் கொண்டான்.

அப்பொழுதும் சிங்கப்பூரில் பிரிட்டிஷ் கடற்படை இருந்தது. அதற்குச் சில உணவு வகை மாவுப் பொருள்களை விநியோகிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டால் பெருத்த லாபம் கிடைக்கும் என்று சாமியப்பன் எண்ணினான். இப்போது அவனுக்கு ஓரளவுக்குச் செல்வாக்கும் ஏற்பட்டிருந்தது. இரண்டு மூன்று நாட்கள் அவகாசத்திலேயே திடீரென்று அவனால் ஒரு மாவு மில்லையும் விலைக்கு வாங்கிவிட முடிந்தது.

சாமியப்பன் சிங்கப்பூருக்கு வந்து ஏழு ஆண்டுகள் கடந்து விட்டன.

சாமியப்பனுக்கு ஒருகணம் இந்தியாவை நினைக்கவே வெறுப்பாயிருந்தது. ஆனுல் இன்னும் அவனுக்கு ரத்தினத்தின் நினைவு மாறிப் போய்விடவில்லை.

அதிர்ஷ்டம் ஒருவனுக்குக் காட்டாற்று வெள்ளம் போல் வருவதும் உண்டு. சாமியப்பனுக்கு அவன் கொஞ்சமும் எதிர்பார்க்காத நேரங்களில்கூடப் பெருத்த லாபங்கள் கிடைத்துக் கொண்டிருந்தன. அவனுக்கு வாய்ப்புக்களும் வசதிகளும் பெருகிக் கொண்டே யிருந்தன.

சாமியப்பன் இந்தியாவில் தன் டவுன் உறவினர் பெயருக்குப் பணம் அனுப்பிக் கொண்டிருந்தான்.

திடீரென்று ஒரு நாள் அவன் செவிகளுக்கு யாழொலியைப் போல் ஒருத்தியின் காதல் கீதம் கேட்டது! அந்த வயதிலும் அவனது மனம் அதை அனுபவிக்கவேசெய்தது. அவள் அடிக்கடி அவன் கடைக்கு வந்து போய்க் கொண்டிருந்தவள்தான். ஆனுலும் அவனுக்கு ஒரு சந்தேகம், 'எனக்கு இருக்கும் வாழ்க்கை வசதிகளுக்காகத்தான் இவள் என்னை நேசிக்கிருளோ?'

சந்தேகம் தெளிந்தவுடன் அவன் அவளையே மணந்து கொண்டான்.

அவனது சொந்த ஊரிலேயே நஞ்சை, புஞ்சை என்று அவனுக்கு நிலங்கள் சேரத் தொடங்கி விட்டிருந்தன. பல கட்டிடங்களும் எழும்பிக் கொண்டிருந்தன.

சாமியப்பன் தாய்நாட்டுக்குத் திரும்பி விடத் தீர்மானித்து விட்டான். அதனுல் சிங்கப்பூரில் வியாபாரங்களைப் படிப்படியாய்க் குறைத்துக் கொண்டு வந்து, கடையில் மாவு மில்லையும் விற்று விட்டான். ஆனுல் அவன் ஆசைப்பட்டவாறு சொந்த ஊரில் உருவாகியிருந்த அவனுடைய வீட்டின் கிருகப் பிரவேசத்துக்கு அவனுல் வந்து சேர முடியவில்லை! மனைவியையும் மகளையும் மட்டுமே முதலில் அனுப்பி வைத்தான் அவன். மற்ற வேலைகளையும் முடித்துக் கொண்டு பதினைந்து நாட்களுக்குப் பிறகேதான் அவனுல் வந்து சேர முடிந்தது!

சாமியப்பன் வந்து விட்டான் என்பதை அறிந்த மைனருக்கு இருப்புக் கொள்ளவில்லை. அவனை உடனடியாகப் பார்த்து நாலு வார்த்தை பேசிவிட்டு வரவேண்டும் என்று அவருக்கு ஆசை. அந்த ஊரிலேயே பஞ்சை—பராரியாய் அலைந்து திரிந்து, அவரை இவரைப் பற்றி அப்படியும் இப்படியுமாய்ப் பேசிக் கொண்டிருந்தவன் சாமியப்பன். இப்போது சிங்கப்பூரில் சம்பாதித்து, சொந்த ஊரில் வசதிகளைத் தேடிக் கொண்டு சொந்த ஊருக்கே அவன் வந்துவிட்டதில் மைனருக்குத் [illegible]. சந்தோஷம்தான். மேலும் வெளியூர்களில் பலரிடம் அவர் கடன் வாங்கியிருந்தார். இருக்கும் சொத்துக்களின் மதிப்பையும் தாண்டிவிட்டிருந்தது கடன்.

இன்னொரு பெரிய பிரச்னையும் அவருக்கு இருந்தது. சாமியப்பனுடைய மூத்த மனைவிக்குப் பிறந்த மகளைப் பற்றியும் மைனருக்கு இப்போது ஒரு நினைப்பு ஏற்பட்டது. ''நல்ல பெண். சின்ன வயசிலேயே கஷ்டங்களையும் கசங்களையும் கண்டிருப்பவள். இந்த வீட்டுக்கு மருமகளாய் வந்தால்....''

முதலில் சாமியப்பனைப் பார்த்துப் பொதுவாய் விசாரித்துவிட்டு வரவேண்டும் என்றே அவன் வீட்டுக்குப் போனுர் மைனர்.

மைனர் வந்திருக்கிறுர் என்ற சேதி வீட்டுக்குள்ளிருந்த சாமியப்பனது செவிகளில் விழுந்தது. ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு மனைவி ஊஞ்சலாடுவதையே வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த சாமியப்பனுக்கு இமைகள் சற்றே விரிந்தன. சாமியப்பன் கசப்பான ஒன்றை நினைத்துப் பார்க்கிறுன் என்றுல் அவனுக்குக் கண்ணிமைகள் விரிந்து ஒரு நிலையில் அப்படியே நிற்கும். பார்வை வெறித்த நோக்காயிருக்கும்.

சாமியப்பன் சட்டென்று ஒரு வேகத்தோடு எழுந்து நின்று கொண்டு ''இப்போது யாரையும் என்னுல் பார்க்க முடியாது. அப்புறமாய் வரச் சொல்! ....ம், அப்புறமாய் வரச் சொல்'' என்றுன்.

சேதி சொல்ல ஆள் மைனரை நெருங்குவதற்கு முன்னமேயே மைனர் எழுந்துபோய் விட்டார். அவரும்தான் சாமியப்பனின் வார்த்தைகளைக் கேட்டாரே!

மைனர் கேட்டைத் தாண்டிப் போய் விட்டார்.

இவ்வளவு சீக்கிரத்தில் மைனர் தன்னை நாடி வந்ததில் சாமியப்பனுக்குத் திருப்தியே! அதனுல் ஏற்பட்ட சந்தோஷம் அப்போது சட்டென்று ஏற்பட்ட கோபத்தினுள் மிகமிக அற்பமாய் அடங்கியே இருந்தது.

சாமியப்பன் டவுனில் தங்கியிருந்த சிறிது நேரத்துக்குள்ளாகவே மைனரைப் பற்றி விசாரித்துத் தெரிந்து கொண்டு விட்டான்.

'என் வீட்டு வேலைக்காரியையும் வைத்துக் கொண்டுதான் மைனரோடு பேச வேண்டும்! 'உன் சொத்துக்களை வெளிப்பகட்டுக்காக நீ இன்னமும் வைத்துக் கொண்டிருக்கிருய்... ஆனுல் உன் பெண்டாட்டியின் தாலியை நீ முன்பே ரகசியமாய் விற்று விட்டிருப்பாய்... இப்போது எதைக் கொண்டு வந்திருக்கிருய்?' என்று மைனரைப் பார்த்துக் கேட்க வேண்டும். அவன் மறுபடியும் என்னிடம் வராமலா போய்விடுவான்!' என்று எண்ணியவாறே சாமியப்பன் வாசலுக்கு வந்தான்.

சாமியப்பனின் நினைவுகள் இப்போது ரத்தினத்தை நோக்கித் திரும்பி விட்டன.

அதோ தெரிகிறது தென்னந் தோப்பு! அதன் ஒரு மூலையில்தான் ரத்தினத்தின் குடிசை இன்னும் கொஞ்சம் நடந்து அந்த வாய்க்கால் மதகைக் கடந்து விட்டால் போதும். ரத்தினத்தின் குடிசையைப் பார்க்கலாம். இரவில் தோப்புக்குக் காவலாய் இருக்கிறுன். குடியிருக்கும் இடத்துக்கும் வாடகை கொடுக்கிறுன். பாவம்! ...அந்தத் தோப்புக்குக் கிழக்கே உள்ள இடத்தை வாங்கி அதில் ஒரு வீடு கட்டிக் கொடுத்துவிட வேண்டும் அவனுக்கு. அங்கே வீடு வந்து விட்டால் அது அந்தத் தெருவோடு சேர்ந்துவிடும். ரத்தினத்தின் மகளுக்கும் இப்போது என் மகள் வயதுதான் இருக்கும். அவனுக்கும்

ஸைட்டு தமாஷ் !



படகோட்டி : ஒரு ரவுண்டு வாடகை பத்து ரூபாய் சார் !

ஒரு சந்தேகப் பிராணி : ஒரு சமயம் ஏரியின் நடுவில் 'போட்' மக்கர் செய்து நின்று விட்டால்....?

படகோட்டி : அப்போது மட்டும் மாத வாடகை ரூபாய் இருநூறு ! - கே.வி. முரளி

என் செலவிலேயே கல்யாணம் செய்து வைத்துவிட வேண்டும்.

சாமியப்பனுக்குச் சட்டென்று சிரிப்பு வந்தது. சிங்கப்பூரிலிருந்து ரத்தினத்துக்காக வித விதமான துணிகளைக் கொண்டு வந்திருந்தான். கைக்கடிகாரம் ஒன்றும் இருந்தது.

அந்த ஊரிலேயே ரத்தினம் ஒருவன்தான் இன்னும் மாறாமல் அப்படியே பழங்காலத்து மனிதனாகவே இருப்பவன்! மாறாமல் என்றால் துணியாமல் என்று பொருள். ரத்தினம் இது வரை செருப்புப் போட்டுக் கொண்டதே யில்லை. கூலிக்காரன்' செருப்புப் போட்டுக் கொள்வது மற்றவர்களை மதிப்பதாகாது' என்று அவனே சொல்லுவான்.

இப்போது நான் கொண்டு வந்திருக்கும் அந்தப் பளபளப்பான செருப்புக்களைப் போட்டுக்கொண்டு அவன் எப்படி நடப்பான், பழக்கம் இல்லாதவன்! தள்ளாடித் தள்ளாடி அவன் நடப்பது எனக்கு வேடிக்கையாக இருக்கும்.

சாமியப்பனுக்குத் திடீரென்று இன்னொரு சந்தேகமும் ஏற்பட்டது.

''ரத்தினம் இப்போது என்னை எப்படி மதிப்பான்? இனியும் என்னை நண்பனாகவேதான் நினைத்துப் பழகுவானா? அல்லது ஊருக்குப் பெரிய மனிதர்களுள் ஒருவனாக என்னையும் பாவித்துக் கொண்டு விடுவானா?'

இந்தப் பிரச்னை சாமியப்பனுக்கு ஒரு பெரும் புதிராகவே இருந்தது.
இன்று உண்மையிலேயே சாமியப்பன் பணக்காரனாகி விட்டான். இப்போது பாவம், ரத்தினம் அடங்கி ஒடுங்கியே கிடந்தவன், அப்படி வாழவே பழக்கப்பட்டுப் போயிருப்பவன் !

சாமியப்பன் ரத்தினத்தின் குடிசைக்கு முன்னால் வந்து விட்டான். அந்தக் குடிசையின் தென்னங் கீற்றாலான தட்டிக் கதவு சாத்தப்பட்டிருந்தது. உள்ளே பேச்சுக் குரல் கேட்டது. ரத்தினமும் அவன் மனைவியும்தான் பேசிக் கொண்டிருந்தனர். பேச்சும் சாமியப்பனைப் பற்றியதாகவே இருந்தது.

''ஆமாம், நீங்க அவரைப் போய்ப் பார்க்க லேன்னு அவர் வருத்தப்பட மாட்டாரா?''

''போடி, போக்கத்தவளே! அவன் மகள் நம்மகிட்ட இருந்தவரைக்கும் கடுதாசி போட்டுக்கொண்டிருந்தான். அப்புறம் ஒரு வரி எழுதினானா? அவன் பெண்டாட்டிக்காக உன் தாலியை வித்தேனே, அதுக்கப்பறம் ஒரு தாலி வாங்கி உனக்குப் போட முடிஞ்சதா என்னாலே? அவன் உன்னையும் என்னையும் நெனைச்சுக்கிட்டா அந்தச் சிங்கப்பூரிலே இருந்தான்?''

சாமியப்பன் ஆடவில்லை, அசையவில்லை. அப்படியே நின்று கொண்டிருந்தான். உள்ளே இருந்து பேச்சுக் குரல் தொடர்ந்து வந்தது.

''அவன் சொத்து வாங்கின விதத்தைப் பார்த்தியா? மைனருக்கு இருக்கிற நஞ்சையை விட அதிகமாய் நஞ்சை; புஞ்சையை விட அதிகமாய்ப் புஞ்சை; தோட்டத்தை விடப் பெரிசாய்த் தோட்டம்! வீட்டையும்தான் பாரேன். மைனர் வீட்டை விடப் பெரிசாய் இவனுக்கு வீடு! டவுனிலே மைனர் வீடு இருக்குன்னு அங்கே ஒரு பங்களா! மைனர் வீட்டுக்கு எதிர்த்தாற்போலவே இவனுக்குப் பங்களா! நஞ்சை — புஞ்சைகூட அப்படித் தான்! அப்படிப் பார்த்துப் பார்த்து வாங்க எத்தனை பேரை அலைய வச்சான் தெரியுமா? இத்தனை நாளும் அவன் மைனரையேதான் நினைச்சுக்கிட்டு இருந்திருக்கான்.''

'உண்மை, உண்மை!' என்று சாமியப்பனது மனம் அடித்துக் கொண்டது.

உள்ளே ரத்தினமும் அவன் மனைவியும் இன்னமும் பேசிக் கொண்டுதான் இருந்தனர்.

''அவரே உங்களைப் பார்க்க வந்தால் நீங்க அவர் கிட்டப் பேச மாட்டீங்களா?''

''அவனை யாரு மதிப்பா? எத்தனையோ பேருதான் சிங்கப்பூருக்குப் போறாங்க. எல்லாருமா இப்படிச் சம்பாதிச்சுக்கிட்டு வந்துடுறாங்க? இவன் அங்கே கொள்ளையடிச்சானோ, கொலை செய்தானோ! அப்படியெல்லாம் சம்பாதிச்சாத்தானே இப்படிச் சொத்து வாங்க முடியும்?''

இப்போது சாமியப்பனுக்குத் தன் நெஞ்சை யாரோ பிசைந்து பிசைந்து அதில் ஊசி அறைவது போலிருந்தது. அவன் விருட்டென்று அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டான்.

சாமியப்பனுக்குத் தன்னைப் பற்றிய உண்மை புரிந்து விட்டது.

'ரத்தினத்தின் ஒவ்வொரு சொல்லும் சரியானதுதான். ஆனால் நான் சம்பாதித்த விதத்தில் மட்டும் எவ்வித மோசமும் கலந்திருக்கவில்லை. அதிகமாகவோ குறைவாகவோ என் தேவைகளை மட்டுமே நினைத்தா நான் இவைகளை வாங்கினேன்? ஒவ்வொரு பணத்தோடும் மைனரைப் பற்றி நான் கொண்டிருந்த ஒவ்வோர் எண்ணத்தையும் கலந்தல்லவா இங்கே அனுப்பினேன்! அதில்தான் தவறிருக்கிறது. மைனரைப் பற்றிய துவேஷத்தை மலைபோல் என்னுள்ளே நான் வளர்த்துக் கொண்டு விட்டேன். அவரை எப்படியேனும் அவமானப் படுத்தவல்லவா நான் இங்கே வந்தேன்?... எனக்குள்ளே இருந்த துவேஷக் கனல் வெளிப்பட்டு என் ரத்தினத்தின் மூலமாகவே ஒரு பிரதி பலனைக் கொண்டு வந்து சேர்த்து விட்டதே!'

குடம் பாலில் ஒரு துளி விஷம் கலந்திருந்தாலும் அது பாலாகாதே! ஒரு குடம் விஷத்தில் கலந்த துளிப் பாலா அமிர்தமாகிவிடப் போகிறது!

சாமியப்பன் இப்போது வந்த வழியிலேயே திரும்பிக் கொண்டிருக்கவில்லை. வேறு வழியில்தான் அவன் நடந்து கொண்டிருந்தான்.

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam



உடையழகால் மார்புக்கு வடிவு தர மேலும்
வழிகள் இதோ. தடையின்றி
அதுவே வாட்ரீன் ஷர்ட்டிங்குகளாம்
கண்கவர் கட்டங்களாம்.
களிதுள்ளும் வரிகளாம். கருத்திற்
பதியும் பிளெயின் சாயல்களாம்.
காணவாரீர் உங்கள் பாம்பே டையிங்
ஸ்டாக்கிஸ்டிடம் இன்றே.
முன்பிருந்த வடிவுக்கு இன்பமுடன்
விடைகொடுப்பீர்.
WADRENE
பாம்பே டையிங்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



இதோ, புதிய ரெக்ஸோனா

உங்கள் சருமத்தைப்
பாதுகாத்து
ஊட்டமளிக்கிறது

காரணம், அதிலுள்ள

கேடில் ப்ளஸ் - சருமத்திற்கான 5 டானிக்குகளின் கலவை

லிண்டாஸ் - RX. 63-140 TH

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு